A LECTURE IN FLOATING POSTURE:—The Krishnappa Naicken Tank, George Town, was this morning at 6 o' clock, the scene of a huge crowd of anxious spectators, numbering over 7,000 ladies and gentlemen, young and old, rich and poor, educated and uneducated, to see Swami Paramahamsa Sachidananda Yogeeswarar of Cuddapah, perform Jalasthambanam Yogam (floating on water) and to hear him deliver a lecture in Tamil in that posture on "Brahmasutram and how to practice." There were also spectators on house tops round the tank. The Swami began to demonstrate his floating feats and to deliver his lecture precisely at the appointed time at the north ghaut of the tank and took one hour and forty-five minutes to finish it, arriving in the end at the same ghaut. During this long time he kept himself floating round the big tank with his legs in what is known as *Padmasanam* and his hands in sleeping posture. The Swami was always in touch with people by floating near the parapet walls, so that the people might see and hear him. However, it was impossible to hear him distinctly, owing to very large number of people round the parapet walls and to the low level of the water in the tank. A very smart sale of the Swami's photagraphs and his book on Yoga in Telugu and Tamil was made on the spot.

Extract from the Malaya Tribune, Singapore, Dated 5th September 1924.

YOGA MAGIC.

A rare opportunity of seeing some feats of Yoga practice will be afforded to the public of Singapore when Yogeeswarar Sachithananda Swamy of Cuddapah, India, will deliver a lecture in Tamil on "Yoga practice whilst floating on the surface of water **"Jalasthambhanam" posture** "Padmasanam" at 4 p. m. on Saturday the 6th instant at the Sand Pits Ponds opposite the Bidadari, Upper Serangoon-road, weather permitting. The ponds and premises have been kindly lent for the occasion by Mr. S. N. S. Meyyappa Chettiyar. There is standing accommodation for about 2,000 people all round the tank and the general public irrespective of nationality are cordially invited. The lecture will last about 1½ hours.

Extract from the Malaya Tribune Singapore, Dated 8th September 1924.

IMPRESSIVE YOGI DEMONSTRATION.

Several hundreds of Indians including a number of Europeans and members of other communities were present at the "Sand Pits Pond" in Upper Serangoon-road, on Saturday afternoon when Yogeeswarar Sachithananda Swami of Cuddapah, India, gave a very interesting demonstration of Yogic practice.

The banks of the pond were bordered by the people when the Swami entered the water and whilst floating on the water went round delivering his sermon. The lecture lasted for nearly an hour and a half.

PREFACE.

I thought I was singularly fortunate in having had my request granted by Swami Paramahamsa Sachithananda Yogeeswarar of Cuddapah, who has been known to me for the last few years, to write a preface to the second edition of the mystic treatise "*Jeeva Brahmaikya Vedanta Rahasyam*" (the secrets of the human soul becoming the part and parcel of the Universal soul). In my hurrried preparations on my professional tours to Burma and Siam, I went hurriedly through here and there some of his instructive lectures and lessons in "Upanishad." The main object of these lessons seems to me to be that the five senses of human beings can be controlled without allowing themselves to fall victims to Temptations.

The Swami floating on the surface of water in various tanks with arms and legs folded (*Padmasanam*) and preaching sermons in that mystic posture has attracted the admiration of the religious public and the photo describing the posture is appended to his book. When **Swamiji** was questioned by me to explain as to how he could float on water and speak in that posture, he told me that he could breathe in fully into the stomach of 22 ft, and lie down on the surface

of water, when he could float. Then a small quantity of air should be given out and the same quantity should be breathed in and this process repeated will help the **Swami** to deliver lectures. The original quantity of air, after expunging the small quantity, should remain fixed so long as he delivers lecture on the surface of water, only the small quantity of air should be alternately breathed in and breathed out. All these can be fully understood in the *Jeeva Brahmaikya Vedanta Rahasyam* in Tamil, and English.

All the illustrations necessary for understanding these lectures together with the exposition of their deep significance are well expatiated by the Swami in the first Six Chapters of his **BHAGAVADGEETA** in Tamil.

The treatise has been prepared at the request of the several disciples of the **Swami** and it is considered desirable that these papers should be given a wide publication; and he made it easily accessible both to the rich and to the poor and with this object in view it has been decided to issue at a cheap rate.

The papers have been arranged under different headings and supplied with glossaries to understand the Sanskrit words written in Tamil and photos to suit the lectures for the convenience of those that read the treatise.

I hope that these lectures will prove helpful in disseminating religious knowledge among the people.

A. TIRUVENKATASWAMI MUDALIAR, B. A.
Consulting Geologist,

Koviloor Digital Library

தத்துவ பரிசோதனை

கருவூரில் (கர்ப்பப் பையில்) குடியிருந்து வந்த ஒரு சிறுவன் பிரஹ்மஞானத்தில் ஈடுபா டடைய விரும்பி, ஓர் ஆசார்யரை அடுத்துப் பற்பல சுருதிகளைக் கேட்கலுற்றான். அப்படிக் கேட்டவைகளைச் சிந்திக்குங் காலத்தில், அவனுக்கு அநேக விஷயங்களில் சந்தேஹ முண்டாயிற்று. அவைகளில் முக்கியமானது, "சர்வ ஜீவர்களும் பர பிரஹ்மமே என்று சுருதிகள் முறையிடுகின்றனவே! ஆனால், நாம் பர பிரஹ்மத்தினின்றும் வேறாகத்தானே இருக்கின்றோம். ஏன்!" என்பதேயாம். அவன் இதை ஆழ்ந்து யோசிக்குமிடத்தில் அவனிடத்திலுள்ள அஞ்ஞானமே இதற்குக் காரணமெனத் தெளிந்தான். ஆயினும், இதைச் சங்கையறத் தெளிய ஓர் குருவை யடுத்துக் கேட்கத் தொடங்கினான்:—

சிஷ்யன்:—ஓ யோகீஸ்வரரே! அஞ்ஞான மென்பது எது?

குரு:—தன்னைத்தான் அறியாமல் இதர விஷயங்களில் பிரயத்நப்படுவதே அஞ்ஞானமென்று சொல்லுவார்களே யொழிய, அஞ்ஞானமென்று ஓர் வஸ்து இல்லை. அஞ்ஞான மென்பது அறியாத்தன்மையே.

சிஷ்யன்:—மாயை யென்பது என்ன.

குரு:—மாயை யென்பது பகவானுடைய லீலையே யொழிய, மாயையென்று ஓர் வஸ்து இல்லை. ஆதலால், அந்த மாயா ஸ்வரூபத்தைச் சொல்லுகிறோம் கேள்!

பூலோகத்திலே கோசலநாட்டில் காதி என்னும் பெயருள்ள ஓர் பிராமணன் இருந்தான். அவன் ஒரு காரியத்தை மனதில் நினைத்து, உறவினரை விட்டுநீங்கி வனத்திற்குச் சென்று, ஒரு தடாகநீரின் நடுவில் கழுத்தளவு முழுகிநின்று, விஷ்ணுமூர்த்தியை நினைத்து எட்டுமாதங்கள் வரையில் மேலாகிய தவத்தைச் செய்து வந்தான். பிறகு, விஷ்ணுவானவர் பிரத்தியக்ஷமாய், உனக்கென்ன வரம் வேண்டுமென்று கேட்டனர். அதைக்கேட்ட அப்பிராமணன் கரையேறிவந்து, திருமாலைக் கைகுவித்து வணங்கி, "பரமேஸ்வரா! லக்ஷ்மீ மனோஹரா! புரஹரா! ஸ்மரஹரா! பாபவிதூரா! பரம கல்யாணகுணகரா! தயாமயா! தர்ம நிலயா! ப்ரணதார்த்திநாஸநா! பவபந்த விமோசநா! பக்த வத்சலா! சந்திர சூடாவதம்ஸா! உமது மாயா ஸ்வரூபத்தைத்தரிசிக்க விரும்புகின்றேன்" என்றான். அதைக்கேட்ட பகவான், "அப்படியே என் மாயா ஸ்வரூபத்தைக் காணக் கடவாய். கண்டபிறகு அதனை நீங்கக் கடவாய்" என்று அநுக்கிரஹித்து மறைந்தவுடன், பகவானைச் சேவித்த சந்தோஷத்தினால் அவன் அதிக உச்சாஹங்கொண்டு, தன்னை மறந்து அநேக நாள் பரியந்தம் தன் தியானத்திலேயேயிருந்துவிட்டான். இவ்வாறு சிலமாதங்கள் சென்றன. பிறகு, அவன் கண்களை விழித்துப்பார்த்து, முன்னே திருமால் அருளிச்செய்த மாயா ஸ்வரூபத்தைச் சிந்தித்துக் கொண்டேசென்று ஒரு தாமரைத் தடாகத்தில் மார்பளவு ஜலத்தில் நின்று, வலதுகை மோதிரவிரல், பெருவிரல்களால் மூக்கை மூடி ஒரு முழுக்குப்போட்டு, சிரஸை மேல் எடுப்பதற்குள், உறவினரிருக்கும் தன்வீட்டில், தான் வியாதியினால் இறந்தவனாகத் தன்னைக் கண்டான். மேலும் அவன் தன் மனைவி, தாய் உறவினர், முதலியோர் தன்மேல் விழுந்து கட்டிக்கொண்டு கதறவும் பார்த்தான். அதற்குமேல்

தன்னை ஸ்மஸாநத்திற் கொண்டுபோய்ச் சுட்டுச் சாம்ப லாக்கவும் பார்த்தான். நீரின் நடுவிலிருக்கிற அவ்வந்தணன் (பிராமணன்) பின்னும் ஊநதேசத்தின் ஒரு நகர முடிவில் இருக்கும் நீசர்குலத்தில், ஒருபெண்ணின் வயிற்றில், வெந்த கரிக்கட்டைபோல் ஆண்மகனுய்ப்பிறந்து, அந்தக் குலத்துப் பெண்ணொருத்தியை மணம்புரிந்து, மனமும் பிராணவாயுவும்போல் ஒற்றுமையுடன் கலந்து வாழும் நாளில், தன் குலம் விளங்கச் சில புத்திரர்களைப் பெற்முன். சிலநாளில் அவன், தன் சேரிக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு சிறு தழைக் குடிசைகட்டி அதில் வசித்துக்கொண்டிருக்கும்போது, தன் மனைவி மக்களுக்கும் தனக்கும் ஒருமிக்க கிழத்தனம் வந்ததைப் பார்த்து வருந்துங் காலத்தில், தன்னைத்தவிர மற்றவரையெல்லாம் காலன் (யமன்) கொண்டுபோய்விட, தான் மாத்திரம் தனியே யிருந்து வாய்விட்டலறி, சகிக்கமாட்டாமல் மனங்கலங்கி நிராசையுள்ளவனுய், அநேக நாடுகளில் வெகுகாலம் திரிந்துகொண் டிருப்பதாயும் கண்டான். இவ்வாறு அவன் திரிந்து கொண்டே கீரநாட்டின் ராஜாதானியிற் புகுந்து சொர்க்க லோகம்போல் பொன்மயமா யிருக்கும் வீதியின்வழியாய் வந்துகொண் டிருப்பதையும் கண்டான். அதுசமயம் அவ்வூ ரரசன் மாண்டிருந்தபடியால் ராஜ்ஜிய பரிபாலனம் செய்ய வேற்றரசனை நியமிப்பதற்காகப் பட்டத்து யானையை மந்திரிகள் அலங்கரித்து, அதன் துதிக்கையில் மாலையைத்தந்து "செங்கோல் செலுத்த வேற்றரசனைக் கொண்டுவரக்கடவாய்'' என்றுசொல்லி ஏவினுர்கள். அவ்வார்த்தையைக்கேட்ட யானையானது அதி வேகமாய்ச் சென்றது. அப்போது ராஜாதிராஜர்கள் எல்லோரும் யானைக்கெதிரில் சென்று நிற்க, அந்தயானை அவர்களுக்கு மாலையைச் சூட்டாமல், அவர்களிலிருந்து தப்பித்துக்

கொண்டு முன்சொல்லிய பொன்மயமாயிருக்கும் வீதியின் வழியாய் வந்தது. அப்போது அவ்வழியாய் வந்துகொண்டிருந்த சண்டாளன் யானேவரும் வேகத்தைப்பார்த்துப் பயந்து ஓர் மூலேயில் பதுங்கிக்கொண்டான். அந்த யானே யானது அவனுக்கு நேராய்வந்து, அவன் கழுத்தில் மாலேயைத்தரித்துத் தன் பிடரியில் ஏற்றிக்கொண்டு போவதையும் அவன் கண்டான்.

சிஷ்யன்:—ஓ ஸ்வாமீ! தன்னே எதிர் நோக்கி வரப்பட்ட மன்னுதி மன்னர்களுக்கெல்லாம் அந்தயானே மாலேயைத் தரிக்காமல், கேவலம் நீசனுயிருக்கும் சண்டாளனது கண்டத்தில் மாலேயைத் தரிப்பதற்குக் காரணம் யாது?

குரு:—குழந்தாய்! அந்தக் காரணத்தைச் சொல்லுகின்ருேம் கேள். இப்போது மாயைக்குள் அகப்பட்டிருக்கும் சண்டாளன், காதி என்னும் பிராமணனென்று உனக்கு நன்ருய்த் தெரிகின்றதல்லவா? அவன் ஆதியில் விஷ்ணுவைக்குறித்துத் தவம் செய்தபடியால் ஸர்வத்திற்கும் ஆதாரமா யிருக்கப்பட்ட பர பிரஹ்மமே, பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களால் விஷ்ணுரூபத்தைத் தரித்துக்கொண்டு, அவனிடம் சென்று, அவன் கேட்ட வரத்தைத்தந்து, மறுபடியும் பஞ்சபூதங்களேயும் அந்தந்த பூதங்களில் ஐக்கியம்செய்து தான் யதார்தியாய்ப் பர பிரஹ்மமாகவே இருக்கும்.

அப்பா! அவன் தவம் செய்யும் விஷயம் அந்தப் பர பிரஹ்மம் எப்படி அறியுமென்று எண்ணுகின்ருயோ? அதன் ரஹஸ்யத்தைச் சொல்லுகின்ருேம் கேள். மனிதர்கள் எதையெதை நினேத்துத் தவம் செய்கின்ருர்களோ அவைகளேயெல்லாம், அவர்களின் இருதய கமலத்தில் சாக்ஷி ஸ்வரூபமாய் பிரகாசித்துக்கொண் டிருக்கும் ஸாக்ஷாத் பர பிரஹ்மத்தின் அம்சமாகிய ஆத்மா அறிகின்

றது. எப்பொழுது ஆத்மா அறிகின்றதோ அப்பொழுதே பர பிரஹ்மம் அறிந்ததாகும். ஆத்மா, பர பிரஹ்மம் என்று நாமபேதமேயொழிய அதன் குணம் மாத்திரம் ஒன்றேயாம். எப்படியெனில், ஏரியிலுள்ள ஜலம் ஊர் முழுதும் இருக்கப்பட்ட ஜனங்களின் தாஹத்தைத் தணிக்கச் செய்கின்றது. குடத்துஜலம் ஓர் குடும்பத்திலுள்ள ஜனங்களின் தாஹத்தைத் தணிக்கச்செய்கின்றது. ஆதலால், பெரிது சிறிதென்னும் பேதமேயொழிய தணிக்கும் தன்மை ஒன்றேயாம். அதுபோல் ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உள்ளபேதமென்று அறியக்கடவாய்.

இப்படி சாக்ஷி சொரூபமாயிருக்கும் ஜீவாத்மா, யானையிலும் இருப்பதால் மேற்சொல்லிய சண்டாளனது கண்டத்தில் மாலையைத் தரிக்கும்படி அந்தயானையினது மனதிற்குத் தோன்றும்படி ஆத்மா செய்விக்கின்றது. அதனல் தன்னை எதிர்நோக்கி வரப்பட்ட மன்னதி மன்னர்களுக்கெல்லாம் அந்தயானை மாலையைத் தரிக்காமல் சண்டாளனிருக்குமிடத்திற்கே நேராய்ச் சென்று அவன் கழுத்தில் மாலையைச் சூட்டிப் பிடரியில் ஏற்றிக்கொண்டு மந்திரிமார்களிடம் கொண்டுபோய் விடும்படியாய்ப் பர பிரஹ்மத்தின் அம்ஸமாகிய ஆத்மா, யானையினது மனதிற்குச் சாவி கொடுத்துத் திருப்பிவிட்டபடியால், அந்த யானை அவ்விதமாய்ச் செய்ததென்று அறியக்கடவாய்.

யானையால் கொண்டுவரப்பட்ட அவனை மாதர்கள் அலங்கரித்தார்கள். பழைய மந்திரிமார்களும், சேனதிபதி முதலானோர்களும் அவனை அரசனாக முடிசூட்டிக் கவலன் என்ற நாம மளித்து, அவனது ஆஞ்ஞையைச் சிரமேற் கொண்டு நடந்தார்கள். அப்போது, கீரதேசத்தை அவன் நீதியாகச் செங்கோல் செலுத்திவந்தான். இப்படி எட்டு வருஷங்கள் கழியவே, ஒரு நாள் அவன் தனியனாய்க்

காலால் நடந்து, தன் அரண்மனையின் தெருப்புறத்தில், நீச வேஷத்தோடு உலாவுஞ் சமயத்தில், தன் ஊரில் தனக்குப் பந்துவாயிருப்பவர்களில் சிலர் கீரதேசத்திற்குள் புகுந்து, ராஜன் அரண்மனைக்கு நேராய் வந்துகொண் டிருக்கும் போது, அவர்களில் ஒரு முதியோன் வந்து அவனை (அரசனை)ப் பார்த்தவுடன் ஆசையோடு தழுவி முன்பெயரைச் சொல்லி, "எங்களுக்குப் பழைய பந்துவாகிய நீ, எங்களை விட்டு எங்கே போனாய்? இப்போது எவ்விடத்தி லிருக்கின்றாய் ?" என்று அவனது பழைய வரலாற்றை உள்ளபடியே சொல்லி விசாரித்தான். அதைக்கேட்ட அவன், அங்குள்ளார் யாராயினும் இதைப் பார்ப்பாராயின் தனக்குப் பழியாய்முடியுமென் றுநினைத்து, அச்சண்டாள முதியோனை உரத்த சப்தத்தோடு அதட்டித் துரத்திவிட்டு, விரைவாகத் தனது அந்தப்புரத்தில் பிரவேசித்தான். சாளரவாயிலில் நின்று, இவற்றையெல்லாம் கண்டும் கேட்டு மிருந்த ஸ்திரீகளெல்லோரும், ராஜஸ்திரீ மந்திரிமார்கள் முதலானபேர்களுக்கும் அச்செய்தியை அறிவிக்க, அவன் பூர்வத்தில் சண்டாளனு யிருக்கலாமென்று அவர்களும் ஊஹித் தறிந்துகொண்டு, மிகவும் மனவருத்த மடைந்தார்கள். அவன் மாத்திரம் மனங் கலங்காமல், அவைகளை அறியாதவன் போலப் பழையபடியே ஸிம்ஹாஸனத்திலிருந்தான். மாதர்கள் மந்திரிமார் முதலானோர் அவனைத் தீண்டுவதற்கும் அஞ்சினவராய், பிரேதத்தை அருவருத்தல்போல் அருவருத் திருந்தார்கள். அவனோ, கல்வி செல்வங்க ளிரண்டு மில்லாத பிரயாணிகள்போல் இருந்தான். அந்த நகரமாந்த ரெல்லோரும், "இவனுடைய சம்பந்தத்தால் நாமெல்லோரும் பதிதரானோம். இனி எவ்வித பிராயச்சித்தத்தாலும் பரிசுத்த ராகமாட்டோம், நாம் பரிசுத்த ராதற்பொருட்டுத் தீப்பாய்வோம்" என்று நிச்சயித்து, நெருப்

யை வளர்த்தி, அதில் எல்லோரும் வீழ்ந்து மடிந்தார்கள். அவன், அவர்கள் மடிந்ததைக் கண்டு, "நமது தொடர்பா லல்லவோ இத்தனை பேரும் நாசமடைந்தார்கள். இனி நாமும் மாண்டுபோவதே தக்க காரியம்'' என்று, தீமூட்டி அதில் விழுந்தபோது, அந்தத்தீயானது இளந்தளிரை எரிப் பதுபோல் இவன் சரீரத்தை எரித்தது. உடனே நீரில் மூழ்கியிருந்த காதி என்னும் வேதியன், ஜலத்திற்குள் மூழ்கியிருந்த தன் சிரசை மேலெடுத்தான். அப்போது அவன் சரீரம் பதைபதைத்து உடனே நீரைவிட்டு மேலெழுந்து, மஹா மாயையினின்று நீங்கி, ஈஸ்வரனது, சர்வ சக்தியைக் குறித்துப் புகழ்ந்து மனங்களித்திருந் தான். இக்கதை இன்னும் பெருகும் இவ்விடத்திற்கு வேண்டியது இவ்வளவே யாதலால், இம்மட்டில் நிறுத்தப் பட்டது. கதை முழுதும் அறிய விரும்புவோர் ஞானவா சிட்டம், உபசமப்பிரகரணம் நாற்பத்தெட்டாவது கதையில் விரிவாய்க் காணலாம்.

சிஷ்யன்:—ஸ்வாமி, ஓர்முழுக்குப் போட்டு, சிரசை எடுப்பதற்குள் எத்தனையோ வருஷங்கள் சென்றுவிட்ட னவே, இதற்குக் காரணம் யாது?

குரு:—குழந்தாய்! அதற்குக் காரணம் சொல்லுகின் றேம் கேள்; பிரமதேவருக்கு இருக்கப்பட்ட வயதை அனு சரித்து, தன் மாய ஸ்வரூபத்தைத் தரிசிக்கும்படி பகவான் ஸங்கல்பித்தார். அதனால் அவன் அத்தனை வருஷங்கள் மாயையில் கட்டுப்பட் டிருந்தான். அவன் இன்னும் எத் தனையோ கோடி ஜன்மங்கள் எடுக்கவேண்டுமென்று பக வான் ஸங்கல்பித்தாலும் அத்தனை கோடி ஜன்மங்களையும் ஓர் முழுக்குப் போடுவதற்குள் எடுக்கவும் எடுக்கலாம். பிரமதேவருக்கு ஆயுர்ப்பாகம் எப்படியென்றால், க்ருத யுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் யுகங் கள் இரண்டாயிரமானல் ஒருநாள் என்று சொல்லப்படும்.

இந்நாட்கள் முப்பதானால் ஒரு மாதம். இம்மாதங்கள் பன்னிரெண்டானால் ஒரு வருஷம். இப்படிப்பட்ட வருஷங்கள் நூறுனல் பிரமதேவருக்கு ஆயுர்ப்பாகம் முடியும். நாயனு, இந்த மாயா சமுத்திரத்தில் நாரதர் அகப்பட்டுக்கொண்டு பட்டபாட்டை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம், 5 சு 15-ல், விவரமாய் எழுதியிருக்கின்றது. அதை வாசித்துப்பார். நீ இந்த விஷயங்களை எதற்காக விஜாரிக்கின்றாய் ?

சிஷ்யன்:—ஸ்வாமீ ! மோக்ஷ மடையும்பொருட்டு விஜாரிக்கின்றேன்.

குரு:—மோக்ஷமென்பது விடுதலை. விடுதலையென்றால், இதற்குமுன் ஏதாகிலும் ஓர் பிடிப்பு இருக்கவேண்டும். பிடிப்பு என்றால், பந்தம். மோக்ஷத்தை அடைய விருப்பங் கொள்ளும் நீ, இருபத்து நான்கு தத்துவங்களில் எந்த தத்துவம் உன்னைப் பிடித்துக்கொண் டிருக்கின்றதோ அதை அறிந்து விடுதலை செய்துகொள்ள வேண்டியதே யொழிய, மாயை, அஞ்ஞானம், ஜகத்சிருஷ்டி முதலானவைகளை விசாரிப்பதனால் பிரயோஜனமில்லை.

சிஷ்யன்:—எனக்கு எதனால் ஞானமில்லை.

குரு:—சிஷ்யா ! சிவப்பு கறுப்பு வெளுப்பு ருசி அருசி பக்குவம் அபக்குவம் லாபம் நஷ்டம் நியாயம் அந்யாயம் முதலானவைகளை ஞானமில்லாமல் நீ எப்படி அறிந்தாய்? உனக்கு ஞானமில்லாவிடில் அஞ்ஞானத்தினால் அறிந்தாயா ? அல்லது ஞானத்தினால் அறிந்தாயா ?

சிஷ்யன்:—ஸ்வாமீ ! எனக்கு ஞானமிருப்பதாகவே ஏற்படுகின்றது. ஞானமென்றால் எதுவோ வென்றிருந்தேன், எனக்கு பிரஹ்ம ஞான மில்லையென்று தோன்றுகின்றது.

குரு:—பிரஹ்ம ஞானமென்று ஒன்றும், இந்திரிய

ஞானமென்று ஒன்றும், சந்திர ஞானமென்று ஒன்றும் உண்டோ ?

சிஷ்யன்:—ஸ்வாமீ! அது அறியாத்தன்மையினு லல்லவோ கேட்க நேர்ந்தது. எந்த மார்க்கத்தை அனுஷ்டித்தால் மோக்ஷமாகிய நித்தியானந்த பதவியை அடைவேனே அம்மார்க்கத்தை அடியேனுக்கு அனுக்கிரஹிக்கவேண்டும்.

குரு:—எந்தக் காரணத்தினுல் உன்னுடைய கால் நொண்டியாயிற்ருே அதை ஆலோசித்துப்பார். அப்படிப் பார்ப்பதே ஞான மார்க்கம். "ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம்" என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லியிருப்பதுபோல் சிரத்தையுடைய புருஷன் ஞானமும் மோக்ஷமும் அடைவான்.

சிஷ்யன் தத்துவபரிசோதனையை ஆலோசிப்பது

சிஷ்யன்:—'என்கால் எந்தக் காரணத்தினுல் நொண்டியாயிற்ருே அதை ஆலோசித்துப்பார்' என்று ஆசார்யர் சொல்லி யிருக்கின்ருரல்லவா ? அதை இப்பொழுது ஆலோசிக்கலாம்.

என்கால் நொண்டியாயிருக்கின்றதே, இந்த நொண்டி ஸரீரம், நானே சிருஷ்டித்துக்கொண்டதல்ல. அப்படி நானே சிருஷ்டித்துக்கொள்ளும் பக்ஷத்தில் என் இஷ்டம் போல் நல்ல சரீரமாய் சிருஷ்டித்துக் கொள்வே னல்லவா ? என் தாயின் கர்ப்பத்திலேயே யல்லவா இந்த நொண்டிச் சரீரம் எனக் குண்டாயிற்று.

என் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்து, என்காலே நொண்டியாய்ச் செய்வற்கு மனுஷ்யர்களால் ஆகமாட்டாதல்லவா ? நான் முன் செய்த பாபத்தினுல் தாயின் கர்ப்பத்திலேயே என்னை எவரோ ஸிக்ஷை செய்ததாய் ஏற்படு

கின்றது. ஆதலால், அப்படிச் சிக்ஷை செய்தவரே ஸர்வத்திற்கும் அதிகாரியான ஈஸ்வரனென்று அறியவேண்டும்.

கர்ப்பத்திலேயே என்னை ஷிக்ஷித்திருப்பதால், இதற்கு முன்ஜன்மத்தில் நான் செய்த பாபத்திற்காக என்னை ஈஸ்வரன் ஷிக்ஷித்தார்போல் தோன்றுகின்றது

இந்த ஜன்மத்தில் நான் பாபம் செய்தால், மறுஜன்மத்தில் எப்படிப்பட்ட ஷிக்ஷை எனக்கு ஏற்படுமோ தெரியவராது.

ஆனால், நான் முன்ஜன்மத்திலேயும் இருந்தேன், இந்த ஜன்மத்திலேயும் இருக்கின்றேன், வருகிற ஜன்மத்திலும் இருப்பேன். இது விஷயம் இப்படியே அந்தந்த ஜன்மங்களிலும் ஆலோசித்திருந்தால் மூன்று ஜன்மங்களும் தெரியவரும். இந்த மூன்று ஜன்மங்களிலும் நான் இருப்பதாய் ஏற்படுகின்றது. ஆதலால், நான் நித்தியன்.

இதற்கு முன் ஜன்மத்தில் நான் இல்லாமலிருக்கும் பக்ஷத்தில் எனக்குப் பாபமில்லை, என்கால் நொண்டியாயிராது. பாபம் செய்யாதவனை ஷிக்ஷித்தால், அவன் ஈஸ்வரனாகமாட்டான்.

நான் முன்ஜன்மத்தில் மரண மடைந்திருந்தால், இந்த ஜன்மத்தில் எப்படிப் பிழைத்திருப்பேன்? மரணமென்றால், இந்த ஸரீரத்தைவிட்டு மற்றொரு ஸரீரத்தில் ஆத்மா பிரவேசிப்பதே யாகும். (ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2, சுலோகம் 22, பார்க்க. நான் மறு ஜன்மத்தில் பசுவாய் ஜன்மித்தால் அப்பொழுது எனக்குக் கைகால்கள் இருக்கமாட்டா தல்லவா? ஆதலால், கைகால்கள் இந்த ஸரீரத்திலேயே நின்றுவிடுகின்றன. எனக்குக் கைகால்கள் இருந்தால் நான் ஜன்மிக்கும் பசுவின் ஸரீரத்திலும் இருக்கவேண்டும். அப்படியில்லாமல் அவைகள் இந்த ஸரீரத்திலேயே நின்றுவிடும். ஆத

லால், கர்மேந்திரியங்கள் நானல்ல, கர்மேந்திரியங்கள் சரீர சம்பந்தமே யல்லாமல், அஸரீரியாகிய எனக்குச் சம்பந்த மானதல்ல.

புழுவாய் ஜன்மித்தால், அவைகளுக்குக் காதுகள் இல்லை. ஆதலால், அதுவும் ஸரீர ஸம்பந்தமே யல்லாமல் அஸரீரியாகிய எனக்குச் ஸம்பந்தமானதல்ல. ஆதலால், ஞானேந்திரியங்கள் என்னைப் பிடித்துக்கொண் டிருக்க வில்லை.

விருக்ஷமாய் ஜன்மித்தால், இருபத்துநான்கு தத்து வங்களும் இல்லை. இந்த இருபத்துநான்கு தத்துவங்களும் ஸரீரத்திற்குச் சம்பந்தமேயல்லாமல், அஸரீரியாகிய எனக் குச் ஸம்பந்தமானதல்ல. இந்த இருபத்துநான்கு தத்து வங்களும் என்னைப் பந்திக்கமாட்டா. எல்லா தத்துவங்க ளும் ஸரீரத்தையே பிடித்துக்கொண் டிருக்கின்றன. ஆனல், விருக்ஷமானது எதை அறியுமென்றால் ஸ்பர்சத்தை மாத்திரம் அறிகின்றது. விருக்ஷமாய் ஜன்மித்தால் எல்லா தத்துவங்களும் நசித்து, அறிவுமாத்திரம் சேஷித்து நித் தியமாய் இருக்கின்றது. சர்ப்பங்களுக்குக் கண்களும் செவி களும் ஒன்று யிருக்கின்றன. வௌவால் என்னும் பக்ஷிக்கு, பிராணபானங்கள் ஒன்று யிருக்கின்றன. இவ்விதமாய் அந்தந்த ஸரீரங்களுக்குத் தக்கபடி உயர்வும் தாழ்வுமான ஸ்தானபேதமும் உண்டு. ஆதலால், புண்ணிய பாபங்களுக் குத் தக்க ஸரீரம் ஏற்படுகின்றது. எதற்கும் ஸ்திரமான ஸரீரமேயில்லை. ஸரீரம் நானல்ல. ஸரீரம் என்னைப் பந் தப்படுத்தவில்லை. நான் எப்படிப் பட்டவ னென்றால், ஸரீரத்திற்கு உண்டாகும் சுக துக்கங்களைத் தெரிந்துக் கொள்ளப்பட்டவன். ஆதலால், நான் அறிவுடையவ னுகவே இருக்கின்றேன்.

பசுவாய் ஜன்மித்தால் புல்லையல்லவோ புசிக்கவேண்

டும். ஆதலால், ஆஹாரம் ஸரீர ஸம்பந்தமே யல்லாமல் அஸரீரியாயிருக்கும் எனக்குச் சம்பந்த மானதல்ல.

மேலும் இந்தத் தேஹத்திலிருக்கும் செவிடு, ஊமை, கூன், குருடு முதலாகிய அங்க ஹீனங்கள் இந்தத் தேஹத்திலேயே நின்று மற்றொரு தேஹத்தில் வராமலிருப்பதனால், இது ஸரீர ஸம்பந்தமே யல்லாமல் அஸரீரியாகிய என்னை ஸம்பந்தித்ததல்ல.

இந்த ஜன்மத்திலுள்ள தாய் தந்தையர்கள், மனைவி புத்திரர்கள் புத்திரிகைகள் மரணமடைந்து மற்றொரு ஸரீர மெடுத்தபோது இவர்கள் எனக்கு எவ்வித பந்துவா யிருப்பார்களோ, ஸத்துருவாயிருப்பார்களோ மித்துருவாயிருப்பார்களோ, அல்லது எந்தத் தேசத்தில் ஜனன மெடுப்பார்களோ தெரியவராது. ஆதலால், இவர்களும் ஸரீர ஸம்பந்தமானவர்களேயல்லாமல் அஸரீரியாகிய எனக்குச் ஸம்பந்தப் பட்டவர்க ளல்லர். இப்பொழுது, இந்தச் சொத்துக்கள் என்னுடையதென்னும் எண்ணத்தினால் அண்டைவீட்டுச் சொத்தை அபகரிக்கக் கோருகின்றேன். அண்டைவீட்டில் நான் இருந்தால், அப்போது இந்த வீட்டுச் சொத்தையல்லவோ அபகரிக்க எண்ணவேண்டும். ஆதலால், எனக்குச் சொந்தமாகிய சொத்துக்கள் எதுவுமில்லை. சொத்துக்கள் ஸரீர ஸம்பந்தமேயொழிய அஸரீரியாகிய எனக்குச் ஸம்பந்தமான தல்ல.

இந்த ஜன்மத்தில் நான் பிராமணனாய் ஜன்மித்திருக்கின்றேன்; மற்றொரு ஜன்மத்தில் மிலேச்சனாய் (மகம்மதீயனாய்) ஜன்மித்தால் இந்த வர்ணாஸிரம தர்மம் அப்போதிரா தல்லவா ? ஆதலால், இந்த வர்ணாஸிரம தர்மம் ஸரீர ஸம்பந்தமாகவே இருக்கின்றது.

இப்பொழுது நான் சைவமதத்திலிருந்து வைஷ்ட்ணவ மதத்தைத் தூஷிக்கின்றேன். வைஷ்ட்ணவனாய் ஜன்மித்

தால், வைஷ்ட்ணவ சின்னங்களைத் தரித்துக்கொண்டு சைவர்களையல்லவோ தூஷிக்கவேண்டும். ஆதலால், மதங்களும் ஸரீர ஸம்பந்தமேயொழிய அஸரீரியாகிய எனக்குச் ஸம்பந்தப்பட்டவைக ளல்ல.

நான் ஜன்மித்த பதினோராவது நாள், புண்யாஹவாசனம் செய்து, எனக்குக் கிருஷ்ணனென்னும் பெயரை என் தாய் தந்தைகள் வைத்தார்கள். இப்படிப்பட்ட பெயர்கள் முன்ஜன்மங்களில் எத்தனையோ பெயர்களை உடையவனா யிருந்தே னல்லவா? எனக்கு ஆயுர்ப்பாகம் நூறு வருஷமென் றல்லவோ பிரமதேவன் சிருஷ்டித்தது. நான் அஸ்வமாய் (குதிரையாய்)ப் பிறந்தால் அஸ்வத்திற்கு முப்பத்திரண்டு வருஷமல்லவா ஆயுர்ப்பாகம்? வேதத்தில் ஸரீரத்திற்கு ஆயுர்ப்பாகம் விதிக்கப்படவில்லை. ஆதலால், நான் ஸதா மோக்ஷத்திலேயே இருந்துகொண் டிருக்கின்றேன்.

இதுவரையில் என் அறிவினால் பரிசோதித்துப்பார்க்க, எந்தத் தத்துவங்களும் என்னைப் பிடித்துக்கொள்ளாமலிருப்பதால், நான் நித்தியனாய் ஞான ஸ்வரூபனாய் மாத்திரமே இருக்கின்றேன். ஞான ஸ்வரூபனென்று சொன்னால், ஞானத்தை அறியவேண்டியவன் ஒருவன் இருக்கவேண்டுமல்லவா? அதைக்குறித்து இனி விசாரிப்போம்.

நித்தியனாய், அஸரீரியாயிருக்கும் எனக்கு ஸரீரம் எப்பொழுது வந்ததென்றால், பஞ்சபூத ஸிருஷ்டிக்குப் பின்னல்லவோ வந்திருக்கவேண்டும். இதற்குமுன் அதாவது, பஞ்சபூத ஸிருஷ்டிக்குமுன் எனக்கு ஸரீரமில்லாமல் இருந்ததென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. ஆதலால், நான் நித்தியனாயும் ஞான ஸ்வரூபனாயு மிருக்கின்றேனென்று முந்தியே சொல்லியிருக்கின்றேன். இந்த ஞான ஸ்வரூபமே அறிவா யிருக்கின்றது. அறிவுவேறு, அந்த

அறிவை அறியப்பட்டவன் வேறு என்று சொல்வதற்கு இடமில்லே. எப்படியென்றுல், ஜுவாலேவேறு, அக்நிவேறு என்று சொல்வதற்கு எப்படிக் கூடாமையோ, அதுபோல் அறிவு வேறு, ஞானம் வேறு என்று சொல்வதற்குக் கூடாமையா யிருக்கின்றது. அக்நியே ஜுவாலேயாயும், ஜுவாலேயே அக்நியாயும், எப்படி யிருக்கின்றதோ, அது போல் ஞானமே அறிவாகவும் அறிவே ஞானமாகவும் இருக்கின்றது. இப்படிப்பட்ட ஞானமுடையவனே பர பிரஹ்மம்; அந்தப் பர பிரஹ்மமே நான்.

இதனுலேயே யல்லவா பிரஹ்மஞானம் பரமாத்மா வென்றும் தத்வமஸி என்றும், வேதங்களில் சொல்லியிருப் பதுமே யன்றி, "ததேகோவஸிஷ்ட ஶிவ:கேவலோக:" என்று ஸ்ரீ ஸங்கராசார்யரும் சொல்லி யிருக்கின்றுர். "ஶிவோஹம்," இந்த அர்த்தத்தை அனுசரித்துச் சொல்லி யிருக்கின்றது.

இப்படி அறிவாயிருக்கும் என்னே யாராயினும் அடிக்கலாமா? அல்லது கத்தியினுல் வெட்டலாமா? அக்நியி னுல் தஹிக்கலாமா? ஜலத்தினுல் நனேக்கலாமா? காற்றினுல் அலேயச்செய்யலாமா? எந்தப் பஞ்சபூத வஸ்துக்கள் என்னே ஸ்பர்ஶிக்கும் (தொடும்)? நான் ஒருவன், கைகளுக்கும் கண்களுக்கும் கருத்துக்கும் அகப்பட்டவ னல்லன். அறிவா யிருக்கும் எனக்கு, எந்தச் சொத்துக்களிலாயினும், ஈஷணத் திரயங்களிலாயினும், ராக துவேஷங்களிலாயினும், அன்ன பானுதிகளிலாயினும், மானுவ மானங்களிலாயினும், லோபா லோபங்களிலாயினும் என்ன பிரயோஜனமுண்டு?

ஸரீர ஸம்பந்தமானவைகள் எத்தனேயோ வருவதும் போவதுமுண்டு. அஸரீரியாகிய எனக்குச் சொந்தமானது ஒன்று மில்லே. இப்பொழுது காமக்ரோதங்கள் எப்படி ஒழிந்தது? அவைகளேயெல்லாம் நான் அறிந்த பின்

னல்வோ என்னைவிட் டொழிந்தன. இதற்குமுன் ஒழியென் றாலும் ஒழியுமோ?

எந்த மிலேச்சனோ, எந்த மிருகமோ ஒருவனுக்கு மனை வியாய் முறைகொண்டு வந்தது. இப்படியே, புத்திரர்களும் புத்திரிகைளும் ஒவ்வொருவராய் முறைகொண்டு சந்தையிற் கூட்டம்போல் வந்து கூடிக்கொண் டிருக்கின்றார்கள். இப் படியாய் வந்தவர்களைப் போஷித்துக்கொண் டிருப்பார் கள். இந்த வரிசையுடையவர்கள் வருகிற ஜன்மத்தில் தூஷிப் பதும், இப்பொழுது இந்த ஸ்தலத்தில் நிலம்வாங்கி இவ் விடம் வீடுகட்டுவதும், இதுபோல் மறுஜன்மத்தில் வேறு இடத்தில் வேறுநிலம்வாங்கி வேறுவீடு கட்டுவதுமாய் இருக்கின்றார்கள். "சீ சீ" இது மிகவும் அறியாத்தன் மையா யிருக்கின்றது.

நான் இப்பொழுது கிரஹிக்கவேண்டிய விஷயங்களை எல்லாம் கிரஹித்தேனா? முக்கியமாய்ச் செய்யவேண்டிய விஷயங்களைச் சேய்தேனா? இன்னும் ஏதாகிலும் குறைவுபட் டிருக்கின்றதா? யோசித்துப் பார்ப்போம்.

"ஞாநமேவ மோக்ஷா:" என்றிருக்கின்றது. ஆத லால் ஆத்ம விசாரணைசெய்வதே மோக்ஷத்திற் கிடமென் றிருப்பதால் ஆத்மவிசாரணை செய்தபிறகு எந்த தபமும் ஜபமும் செய்யவேண்டியதில்லையென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. ஆதலால், நான் இனிச் செய்யவே ண்டி விஷயம் ஒன்றுமில்லை.

இதற்குத் திருஷ்டாந்தம் பரீக்ஷித்து, சுக பிரஹ்மத்தி னிடம் ஞானோபதேசம் பெற்றபிறகு, மோக்ஷத்திற்கு வேண்டிய தபஸ்ஸு முதலானவைகள் ஏதாகிலும் செய் தாரா? ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினால் ஞானோபதேசம் பெற்ற அர்ஜுனன் ஏதாகிலும் செய்தாரா? நான்மாத்தி ரம் ஏன் செய்யவேண்டும்?

ஞானோபதேச மானபிறகு பரீக்ஷித்துக்கு சாவகாச மிருந்தபடியால், பகவானது குணாதிசயங்களைக் கேட்டு ஆனந்தித்தார். அதுபோல், நானும் பகவத் குணங்களைக் கேட்கின்றேன். அப்படி பகவத் குணங்களைக் கேட்பதனால் மனம் தெளிந்து திருடமாய்நிற்கும். அப்படி மனம் திருடமாய் நிற்பதற்கு ஸத்ஸாங்கத்வமும் வேண்டும். இதற்குப் பிரமாணம்:—

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் நிர்மோஹத்வே நிஶ்சலதத்வம் நிஶ்சல தத்வே ஜீவன்முக்திஃ"

ஸத்ஸங்கத்வே = ஞானிகளுடன் ஸஹவாசம் உண்டாவதனால், நிஸ்ஸங்கத்வம் = புத்திர மித்திர களத்திராதிகளின் மீதிருந்த ஆசைநீங்கும். நிஸ்ஸங்கத்வே = களத்திராதிகளின் சம்பந்தமில்லாமல் போவதனால், நிர்மோஹத்வம் = அஞ்ஞானத்திற்கு மூலமாகிய மோஹம் இல்லாமல் இருக்கும். நிர்மோஹத்வே = மோஹம் இல்லாமலிருப்பதனால், நிஶ்சலதத்வம் = அசலமாகிய பரதத்துவம் உண்டாகும். நிஶ்சலதத்வே = அப்படிப்பட்ட பரதத்துவமான நிஷ்டை உண்டானால், ஜீவன்முக்திஃ = ஜீவன் முத்தியை அடையும்.

ஞானிகளுடன் ஸஹவாசம் ;உண்டாவதனால் புத்திர மித்திர களத்ராதிகளின் மீதிருந்த ஆசை நீங்கும். ஆசை நீங்குவதனால் அஞ்ஞானத்திற்கு மூலமாகிய மோஹம் இல்லாமலிருக்கும். மோஹம் இல்லாமலிருப்பதனால் அசலமாகிய பரதத்துவ முண்டாகும். அப்படிப்பட்ட பரதத்துவமான நிஷ்டை உண்டானால், ஜீவன் முக்தியை அடையும் என்று ஸ்ரீ சங்கராசார்யர் சொல்லி யிருக்கின்றார். ஆதலால்,

---

பிரம க்ஷத்திரிய வைஸ்ய ஸூத்திரர்கள் யார்?

ஓ சுவாமீ! நான் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை யெல்லாம் தெரிந்துகொண்டேன். ஆயினும், தேவரீருடைய வாக்கினுல் இன்னும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். அதாவது, பிரம க்ஷத்திரிய வைஸ்ய ஸூத்திரர் என்பவர்கள் யார்? இதைச் சற்றே விவரித்துச் சொல்லவேண்டும் சுவாமீ?'' என்ருன் சீஷன்.

ஆசார்யர் அவனைப் பார்த்து, நாயனு! குழந்தாய்! நீ மிகவும் புத்திசாலியாகவே யிருக்கின்ருய். இதன் ரஹஸ்யம் அனேகர்களுக்குத் தெரியவரமாட்டா. அப்படிப்பட்ட ரஹஸ்யமான விஷயங்களை இப்போது நீ கேட்டிருக்கின்ருய். உலகத்தில் பூணூல் போட்டவர்களெல்லோரும் பிரம க்ஷத்திரிய வைஸ்யர்களென்றும், பூணூல் போடாதவர்கள் ஸூத்திரர்களென்றும் உலகத்தில் சொல்வதுண்டு. அதன் அந்தரார்த்தம் சொல்லுகின்ருேம் கேள்.—

இதற்குத் திருஷ்டாந்தம், ஸ்ரீ கிஷ்ருணர்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 4-சுலோகம் 13, என்னவென்ருல்,

> சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம விபாகஸ:
> தஸ்ய கர்த்தார மபி மாம் வித்ய ாத்தாரம் மவ்யயம்.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! இந்த உலகத்தில் ஜனங்களுக்கு, நான்குவித குணபேதங்களுண்டு. அதைச் சொல்லுகின்றேன் கேள்: சிலர், கேவல ஸத்வகுண முடையவர்களும், சிலர், ஸத்வ ரஜோ குணங்களுடையவர்களும், சிலர், ரஜோ தமோ குணங்களுடையவர்களும், மற்றும் சிலர், கேவல தமோ குண முடையவர்களுமா யிருக்கின்ருர்கள். இதில், முதல் வகுப்பினர்கள் என்ருல், கேவல ஸத்வ

குணமுடையவர்கள், கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகத்தின் மேலிருக்கும் தோல் என்னும் இந்த ஐந்து இந்திரியங்களையும், மனதையும் ஜயித்து தவம் செய்து கொண் டிருப்பவர்களே பிராமணர்கள்.

இரண்டாவது வகுப்பினர்கள் என்றால், ஸத்வ ரஜோ குணங்க ளுடையவர்கள். மேற்சொல்லிய இந்திரியங்களும், இந்திரியங்களுக்கெல்லாம் அரசனாயிருக்கும் மனம், இவ் விரண்டினு லல்லவோ புண்ணிய பாபங்கள் உண்டாகின்றன வென்று தெரிந்துகொண்டு, இந்திரியங்களுடன் கூட யுத் தம் செய்பவர்களே க்ஷத்திரியர்கள்.

அதாவது:—முன்சொல்லிய கண்கள், மூக்கு, வாய், செவிகள், தேகத்தின்மே லிருக்கும் தோல் என்னும் இந்த ஐந்து இந்திரியங்களின் வழியாய் மனதைப் போகவிடா மல் திருப்பி, அம்மனதைப் பரமாத்ம சொரூபத்தில் கலக்கும்படி பழகி வருபவர்களே க்ஷத்திரியர்கள்.

மூன்றாவது வகுப்பினர்கள் என்றால், ரஜ தமோ குணங்களுடையவர்கள், புண்ணிய பாபங்களின் ரகஸ்யார்த் தங்களை அறிந்து, புண்ணியம் செய்வதனால் லாப முண் டென்றும், பாபம் செய்வதனால் நஷ்டமுண்டென்றும் தெரிந்துகொள்ளத்தக்க நிலையை அடைந்தவர்களே வைசி யர்கள்.

அதாவது:—புண்ணியங்களில் காம்யபுண்ணியம், நிஷ் காம்ய புண்ணியம் என்று இரண்டுவிதமான புண்ணியங்க ளுண்டு. காம்ய புண்ணியமென்றால் ஓர் பலத்தைக் கோரி, தான தர்மங்களும், பூஜைகளும் செய்யும் புண்ணியம் காம்ய புண்ணியமென்று சொல்லப்படும்.

எப்படியென்றால், உலகத்திலுள்ள ஜனங்களில் அனே கர்கள், பெருமாள் சன்னதிக்கோ அல்லது ஈஸ்வரர் ஆலயத்

திற்கோ சென்று, மூல விக்கிரகத்திற் கெதிரில் நின்று, இரு கைகளையும் குவித்து அவ்வுருவங்களைப்பார்த்து, எனக்குப் புத்திர சந்தானம் உண்டாகவேண்டுமென்று சிலரும், எனக்கு உத்தியோகம் உயரவேண்டுமென்று சிலரும், என் வியாதி சௌக்கிய மாகவேண்டுமென்று சிலரும், என் கஷ்டத்தைத் தீர்க்கவேண்டுமென்று சிலரும், என் கேஸ் ஜயமாகவேண்டுமென்று சிலரும், இன்னும் இதைப் போன்ற அனேக பலன்களை நினைத்து, அந்த விக்கிரகங் களைக் கும்பிட்டு வருவார்கள்.

இவர்கள் கேட்ட பலன்கள் இந்த ஜன்மத்திலேயே வரவேண்டுமென்று நினைப்பார்கள். ஆனால், அவர்கள் இவ் வித பலத்தை நினைத்துக் கோடானகோடி தானங்களைச் செய்தபோதிலும், இந்த ஜன்மத்திலேயே அவற்றின் பலன் அவர்களுக்கு உண்டாகமாட்டா.

ஒருவன் விசேஷ புண்ணியம் செய்து மரண மடைந்து, அவனுடைய ஜீவன், வேறு சரீரத்தை அடைந்தவுடன், தான் முன் ஜன்மத்தில் ஒரு பலனை நினைத்துச் செய்த தான தர்ம பூஜைகளால் வந்த புண்ணிய விசேஷத்தினால், முன் ஜன்மத்தில் தான் இச்சைகொண்ட பலனை மறுஜன்மத்தில் தப்பாமல் அனுபவிப்பானே யொழிய அதே ஜன்மத்தில் அடையமாட்டான். இவ்வாறு இச்சைகொண்டு செய்து வரும் புண்ணியமே, காம்ய புண்ணிய மென்று சொல் லப்படும். இக்காம்ய புண்ணியத்தினால் ஜன்மங்கள் அதி கரித்துக்கொண்டே வரும்.

நிஷ்காம்ய புண்ணியம் எப்படிப்பட்ட தென்றால், ஒருவன் செய்யும் எல்லா தான தர்மங்களும், பூஜைகளும் ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்து வந்தால் அப்புண்ணியங்க ளெல்லாம் ஈசுவரனைச் சேர்ந்துவிடும். அப்போது, அப் புண்ணியபலன் தனக்கு உண்டாகமாட்டா.

காம்யமாய் (இச்சைகொண்டு) புண்ணியம் செய்து வந்தால் அப்புண்ணிய பலனை அடைவதற்காக அரசன்வீட்டிலோ அல்லது, பெருத்த செல்வ முடையவர்களின் வீட்டிலோ அவன் ஜன்மித்து, அப்புண்ணிய பலனை அனுபவிக்கவேண்டும். ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்துவரும் புண்ணியத்தினுல், எந்த ஜன்மமும் வராமல் மிகவும் பரிசுத்தனுய் மோக்ஷமென்னும் வீட்டைத் தப்பாமல் அடைவான். உலகத்தில் நிஷ்காம்ய புண்ணியம் செய்பவர்கள் மிகவும் அரிதா யிருப்பார்கள். அனேகர் நல்லபேர்வஹிக்க (எடுக்க) காம்ய புண்ணியத்தையே செய்துவருகின்றுர்கள். காம்ய, நிஷ்காம்ய மென்னும் இவ்விரண்டு புண்ணியங்களின் ரகஸ்யார்த்தம் இதுவேயாம்.

இனி, பாப கர்மங்களைச் சொல்லுகின்றேம் கேளுங்கள். பொய் சொல்வது, ஜீவ இம்சை செய்வது, ஒருவரைக் கொலை செய்வது, பிரர்சொத்தை அபகரிப்பது, திருடுவது, மோசம் செய்வது, இன்னும் இப்படிப்பட்ட அனேக விதங்களான பாப கார்யங்களைச் செய்துவந்தால், அந்தந்தப் பாப கார்யங்களுக்குத் தக்கபடி, கூன் குருடு செவிடு நொண்டி குஷ்டம் முதலாகிய இன்னும் அனேக அங்கஹீனமான சரீரங்களையெடுத்து, அப்பாப கர்மமுள்ளளுள் வரையில் அனுபவித்து வருவார்கள். இப்படிப்பட்ட புண்ணிய பாப கர்மங்களைத் தெரிந்துகொள்ளத் தக்கவர்களே வைசியர்கள்.

நான்காவது வகுப்பினர்கள் என்றுல், கேவல தமோ குண முடையவர்கள். இவர்கள் யாதொன்றும் அறியாமல் அஞ்ஞானமென்னும் இருளில் மூழ்கி யிருப்பார்கள். அதாவது, ஜனங்கள் உலகத்தில் எதற்காகப் பிறந்தார்களென்பதைத் தெரிந்துகொள்ளாமல், பிரதிதினமும் தாம் செய்யும் வியாபார உத்தியோகங்களினுல் பொருள் சம்பா

தித்து, மனைவி புத்திர பௌத்திர தன தான்யாதி ஐஸ்வர்யங்களின்மேல் அதிக பிரீதிவைத்து அவற்ருல் அனுபவித்துவரும் துக்க சுகங்களே மிகவும் நல்லசுகமென் றெண்ணி, தாம் வந்த கார்யத்தை, மாயையென்னும் இருளால் மறந்து, மறுபடியும் புண்ணிய பாப கர்மங்களைச் செய்து, அப்புண்ணிய பாப கர்மங்களை அனுபவிக்க மரண மடைந்து, வேறு சரீரமெடுத்து, அந்தந்தப் புண்ணிய பாபங்களை அனுபவித்து வருபவர்களே சூத்திரர்கள்.

சு'' ஏஸத்யம் ப்ரஹ்ம ஸௌசஞ்ச ப்ரஹமமிந்த்ரிய நிக்ரஹம்
ஸர்வஜீவதயா ப்ரஹ்மயேத ப்ராஹ்மணலக்ஷணம்.

ஆதலால், ஓ அர்ஜுனா! குணத்திஞல் ஜாதிபேதம் ஏற்படுகின்றது. அதைச் சொல்லுகின்றேன் கேள்: எவன் பூர்வ ஜன்மத்தில் வியாழதிசை பதினுறில் பத்து வருஷங்கள் நடந்தபின் மரணமடைகின்ருனே அவன் மறுபடியும் சண்டாளன் வீட்டிலோ, சூத்திரன்வீட்டிலோ பிராமணன் வீட்டிலோ, பிறக்கவேண்டிய கர்மம் இருக்கும்பக்ஷத்தில் அந்த ஜாதி தாயின் கர்ப்பத்தில் சிருஷ்டிசெய்து வைத்திருக்கும் தூல சரீரத்தில் மேற்படி ஜீவன் வந்து சேர்ந்து, பிறக்கும்போது முன் ஜன்மத்தில் வியாழதிசை பதினுறில் பத்துவருஷங்கள் செல்லுபோய் மிகுதி நின்ற வருஷங்கள் ஆறும், சிசுவின் கூடவே ஜனனகாலத்தில் தொடர்ந்துவரும். சிசு ஜனனமானவுடன் ஜோதிடன், ஜோஸ்யம் எழுதும் போது குழந்தைபிறந்த லக்கினத்தைக் குறிப்பிட்டு, வியாழ திசை கர்ப்பத்தில் செல்லுபோய் நின்ற வருஷங்கள் ஆறு, என்று கணக்கெடுத்து ஜாதகம் எழுதுகின்ருன். என்ருல்,

பூர்வஜன்மத்தில், எந்த ஜாதியில் எங்குப் பிறந்தானே அந்த ஜாதியில் மரண மடைவதற்குமுன், வியாழதிசை பதினுறில், பத்து வருஷங்கள் நடக்கும்போது, அவன்

கர்மத்திற்குத் தக்கபடி வரவேண்டிய வியாதி வந்து மரண மடைவாளுகில், மிகுதியா யிருக்கும் வியாழதிசை ஆறும், மறு ஜன்மத்தில் அவன் குழந்தையாய்ப் பிறக்கும்போது அவனைத் தொடர்ந்து வருகின்றதே யொழிய கர்ப்பத்தில் பத்து வருஷங்கள் செல்லு போகவில்லை. இது, தேவ ரஹஸ்யமாதலால், சில ஜோஸ்யர்களுக்குமாத்திரம் தெரிய வரும்.

பிராமணர்களின் வீட்டிலாகிலும் அல்லது, க்ஷத்திரிய வைசிய சூத்திர சண்டாளர்களின் வீட்டிலாகிலும் தாய் தந்தையர்கள் சேர்ந்து பிண்டம் தரிக்கும் சமயத்தில், பிர ஹஸ்பதி சுக்கிர கிரகங்கள், ஆக்ஷி உச்ச திரிகோணம் முத லான சுப ஸ்தானங்களிருந்து ஆணுகவோ அல்லது, பெண் ணுகவோ பிறந்தால், அவர்கள் சத்யவந்தர்களாயும், சுசி ஆசார முடைவர்களாயும், பிரம்மவேத்தர்களாயு மிருப் பார்கள். இந்தக் குணங்களுடன் கூடி யிருப்பவர்கள் பிராம ணர்களே யொழிய, பிராமண ஜாதியில் பிறந்து இப்படிப் பட்ட குணங்க ளில்லாவிடில் அவனைச் சூத்திரனுய் எண்ண வேண்டுமேயொழிய பிராமணனுய் எண்ணலாகாது. குணத் தினுல் பிராமணனே யொழிய ஜாதியினுல் பிராமண னுக மாட்டான்.

முன்சொல்லிய எந்த ஜாதியிலாகிலும் பிண்டம் தரிக் கும்போது, சூரியன் அங்காரகன் வலுத்திருந்தால், இவை க்ஷத்திரிய கிரகங்களாதலால் இந்தக் கிரகங்களுடன் கூடிப் பிறந்தவர்களுக்கு மேற்சொல்லிய க்ஷத்திரியகுண தர்மங் கள் உண்டாகும்.

எந்த ஜாதியிலாகிலும் பிண்டம் தரிக்கும்போது, சந்தி ரன் புதன் வலுத்திருந்தால், அவை வைசிய கிரகங்களாத லால் அந்தக் கிரகங்களுடன்கூடிப் பிறந்தவர்களுக்கு மேற் சொல்லிய வைசியகுண தர்மங்கள் உண்டாகும்.

எந்த ஜாதியிலாகிலும் பிண்டம் தரிக்கும்போது சனீஸ்வர கிரகம் வலுத்திருந்தால், இது சூத்திர கிரக மாதலால் இந்தக் கிரகங்களுடன்கூடிப் பிறந்தவர்களுக்கு மேற்சொல்லிய சூத்திரகுண தர்மங்கள் உண்டாகும்.

இந்த நான்கு ஜாதிகளேயும் இதர லோகத்தில் சிருஷ்டிக்கவில்லே; நான் மாயையைச் சிருஷ்டிசெய்யும் கர்த்தாவாயிருக்கின்றேன். அந்த மாயை என்னேப் பற்றமாட்டா. ஏனென்ருல், என்னேவிட வேறுவஸ்து இருந்தா லல்லவோ அந்த வஸ்துவை நான் சிருஷ்டித்தே னென்று சொல்லலாம். எல்லாம் நானுகவே யிருக்கின்றேன். ஆதலால், என்னே அஸம்சாரி (ஸம்சாரமற்றவன்) என்றே சொல்லலாம். அத்யாயம் 9, சுலோகம் 32.

மாம் ஹி பார்த்த! வ்யாபாஸ்ரித்ய யேபி ஸ்யுஃ பாபயோநயஃ
ஸ்திரீயோ வைஸ்யாஸ்ததா ஸூத்ரா ஸ்தேபி யாந்தி பராங்கதிம்.

ஹே ! குந்திபுத்ரா ! தோல் எலும்பு கொழுப்பு மயிர் முதலானவைகளுடன் கூடியிருக்கும் தான் யாரென்று அறியாமல், நான் ஆண் நான் பெண் நான் பிராமணன் நான் க்ஷத்திரியன் நான் வைசியன் நான் சூத்திரன் என்று பந்தத்தில் கட்டுண்டுக் கிடப்பது உயிர்களின் சுபாவகுண மாதலால், எல்லாம் கற்றும் அன்னியர்களுக்கு உரைத்தும் தன்னேத்தான் அறியாவிட்டால், அவன் பிராமணனு யிருந்தாலும் பிராமண னுகமாட்டான். இப்படிப்பட்டவர்கள் நீச ஜன்மங்களேயே அடைவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது, இதற்கு மநு ஸ்மிருதி பிரமாணம்.

சூத்ரோ ப்ரஹ்மணதாமேதி ப்ரஹ்மணஸ்சேதி ஸூத்ரதாம்
க்ஷத்ரியாஜ் ஜாதமேவந்து வித்யாத் வைஸ்யாத் ததைவச.

சூத்திரன் பிரமணனுவான், பிராமணன் சூத்திரனுவான்: க்ஷத்திரிய வைசிய சூத்திர சண்டாள (தீண்டாத)

ஜாதியில் பிறந்தவர்களும் இப்படியே யாவார்கள்; என்ருல், சண்டாளன் பிராமணனுய்ப் பிறப்பானென்று எல்லா சுருதி ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட் டிருக்கின்றது.

நவிஸேஷோஸ்தி வர்ணுநாம் ஸர்வப்ராஹ்ம மிதம் ஜகத்
ப்ராஹ்மணு பூர்வஸ்ருஷ்டம் ஹி கர்மபிர் வர்ணதாம்கதம்.

என்று ஸ்ரீ மஹாபாரதம் சாந்திபர்வம் 188-வது அத்யாயத்தில், ஜாதியினுல் ஒன்று மில்லை, ஆதியில் இந்த ஜகத்தெல்லாம் பிரம்மமாகவே இருந்ததென்று சொல்லியிருக்கின்றது. கர்மத்தினுல் ஜாதிபேத முண்டாயிற் றென்று சொல்லப்பட் டிருக்கின்றது. கிருதயுகத்தில், ஜாதிபேத மில்லையென்று வாயுபுராணம் எட்டாவது அத்தியாயத்தில் சொல்லப்பட் டிருக்கின்றது. எப்படிப்பட்டவனு யிருந்த போதிலும் நல்ல நடவடிக்கையினுல் பிராமணனுவான். பிராமணனுயிருந்து நல்ல நடவடிக்கை யில்லாவிட்டால் அவன் பிராமண னுகமாட்டான்; அதாவது, சூத்திரனுய்ப் பிறந்து நல்ல நடவடிக்கையுடன் இருப்பானுகில், அவன் பிராமணனே யாவான். இதற்குச் சில வாக்கியங்களைப் புராணத்திலிருந்து இங்குத் திருஷ்டாந்தமாய்ச் சொல்லுகின்ருேம்.

ஏபிஸ்து கர்நபிர்தேவிஸு ைபரா சரிதைஸ்ததா ஸுத்ரோ ப்ராஹ்மணதாம் யாதி வைஸ்யஃ க்ஷத்ரியதாம் வ்ரஜேத் * * * * * நயோநிர்ணுபி ஸம்ஸ்காரோ நஸ்ருதம் நச ஸந்ததிஃ கரணுநி த்விஜத்வஸ்ய வ்ருத்தமேவது காரணம் ஸர்வோயம் ப்ராஹ்மணோ லோகே வ்ருத்தேநச விதீயதே வ்ருத்தேஸ்திதஸ்து ஸுத்ராபி ப்ராஹ்மணத்வம் நிசஸ்யதி.

என்று பாரதத்திலும், மஹேஸ்வரி ஸம்வாதத்திலும் இப்படிப்பட்ட நற்காரியங்களைச் செய்வானுகில் சூத்திரனும் பிராமணனே யாவான் என்றும், ஜாதிபேதம் உபநயனம் வேதாத்யானம் (வேதங்களை வாசிப்பது) சந்ததி முதலான

வைகளினுல் பிராமண ணுகமாட்டானென்றும், நல்ல நட வடிக்கையினுல் பிராமண ணுவானென்றும் சொல்லப் பட் டிருக்கின்றது. மஹாபாரதம் ஆரண்யபர்வத்தில் தர்மராஜ ருக்கு வைசம்பாயனர் சொல்லுகின்ருர்;

சுலோ ll சுகுலேந ஜாத்யாவா க்ரியாபிர் ப்ரஹ்மணோ பவேத் சண்டாலோபி ஹி வ்ருத்தஸ்தோ ப்ராஹ்மண ஸ யுதிஷ்டிர ஏக வர்ண மிதம் பூர்ணம் விஸ்வமாஸீத் யுதிஷ்டிர கர்மக்ரிய விஸே ஷேண சாதுர்வர்ண்யம் ப்ரதிஷ்டிதம் ஸர்வேவை யோநி ஜாமர்த் யாஹாஃ ஸர்வே மூத்ர பூரீஷணஃ ஏகேந்த்ரியேந்த்ரி யார்த்தஸ்ச தஸ்மாஸ்ச்சீல குணேர்விஜஃ ஸூத்ரோபி ஸீல ஸம்பந்நோ குண வாந் ப்ராஹ்மணோபவேத் ப்ராஹ்மணோபி க்ரியாஹீநஃ ஸூத்ராத் ப்ருத்யவரோ பவேத் * * * * * நஜாதி த்ருஸ்யதே ராஜந்குணஃ கல்யாணகாரகஃ ஜீவிதம் யஸ்ய தர்மார்த் தம் ப்ரார்த்தே யஸ்ய ஜீவிதம்.

ஓ யுதிஷ்ட்டரா (ஓ தர்மராஜா) ஜாதியினுல் பிராமணனுக மாட்டான். சண்டாளனு யிருந்தபோதிலும் அவனே பிரா மண ணுவான். ஓ யுதிஷ்ட்டரா! ஒரே ஜாதியா யிருந்தது, கர்மத்தினுல் நான்கு ஜாதி ஏற்படுத்தப்பட்டது. மனிதர்க ளெல்லோரும் ஓர் தாய் கர்ப்பத்திலிருந்து பிறந்தவர்கள். இப்படிப்பட்டவர்களில், நல்ல ஆசாரம், நல்ல நடவடிக்கை எவனுக்குண்டோ அவனே பிராமணனுவான். அதாவது, சூத்திர னுனுலும்சரி, சண்டாள னுனுலும்சரி, எவனுக்கு நல்ல ஆசாரமும், நல்ல நடவடிக்கையுமுண்டோ அவனே பிராமணனுவான். பிராமண ஜாதியில்பிறந்து, நல்ல ஆசா ரம் நல்ல நடவடிக்கை இல்லாவிட்டால் அவன் சூத்திரனே யென்று எண்ணவேண்டும். ஓ ராஜனே! ஜாதியினுல் ஒன்று மில்லை. குணங்களே கல்யாண (மங்கள) மானது. எவன், தர்மார்த்தமாயும் பரோபகாரார்த்தமாயும் இருக்கின்ருனே அவனே பிராமணனென்று சொல்லப் பட்டிருக்கின்றது.

மற்றோரிடத்தில் யக்ஷயன் கேள்விக்கு தர்மராஜர் சொல்லு கின்றார்;

ஸத்யம் தாநம் க்ஷமா ஸீலமாந்ரு ஸம்ஸ்யயம் தபோ க்ருண த்ருஸ்யந்தே யத்ரநாகேந்த்ர ஸ ப்ராஹ்மண இதி ஸ்முருதஃ,ஸூத் ரேது யத்பவல்லேக்ஷ்ம்யத் விஜேதஸ்ச்சந வித்யதேநவை ஸூத் ரோ பவேத் ஸூத்ரோ ப்ராஹ்மணோ நச ப்ராஹ்மணஃ, யத்ரைவ லக்ஷ்யதே ஸர்ப்பவ்ருத்தம் ஸ ப்ராஹ்மணஃ ஸ்முருதஃ யத்ரைதந்ந பவேத் ஸர்வதம் ஸூத்ரமிதி நிர்த்திஸேத்.

ஓ நாகேந்த்ரா! ஸத்யம் தானம் பொறுமை சீலம் அஹிம்ஸை (கொன்று சாப்பிடாம லிருப்பது) தவம் கருணை முதலாகிய குணங்கள் எவனிடம் யிருக்கின்றன வோ, அவனே பிராமணன். இக்குணங்கள் சூத்திரனிடத்தி லிருந்தால் அவன் சூத்திரனுகமாட்டான், பிராமணனிடத் தில் இக்குணங்க ளில்லாவிட்டால், அவன் பிராமண னுக மாட்டான்.

அதாவது, மேற்சொல்லிய குணங்கள் சூத்திரனிடத்தி லிருந்தால் அவனே பிராமணன். பிராமணனிடம் மேற் சொல்லிய குணங்க ளில்லாவிட்டால் அவனே சூத்திரன் என்று சொல்லப்பட் டிருக்கின்றது. ஆதி ஸங்கராசாரியர் பிராமணஜாதியில் பிறந்தபடியால், அவருக்கும் அஞ்ஞா னம் மூடிக்கொண்டு ஜாதி அபிமானம் உண்டாயிற்று. அதைப் போக்கடிக்க, பரமசிவன் சண்டாள வேஷம் தரித்துவந்து சொன்னவிஷயங்களை இதனடியில் சொல்லு கின்றோம்.

இஹகலு பரமகாருணிகோ பகவாந் பரமசிவஃ, அநர்த்த மக ராகாரே ஸம்ஸார ஸாகரே, நிமக்நம் லோகமுத்திதீர்ஷுஃ கதா சித் காஸீம் ப்ரதி, கஸ்ச்சந்தமாசார்யம் ப்ரதி சண்டாள வேஷதாரீ மஹேஸ்வரஃ, ஸமாஜகாமதோ ஜகாத பகவா நாசார்யஃ, ஹே! சண் டாளாத்ம இதோ கஸ்ச்ச கஸ்ச்சேதி, ததஸ்சண்டாள வேஷ மண்டிதஃ ஸிவஃ ப்ரத்யாஹ.

இந்த உலகத்தில் பரம தயையுடையவனும், ஷட் குண ஐஸ்வர்ய ஸம்பத் துடையவனும், ஜல ஐந்துக்களுக் குச் சமுத்திரம் ஏறி குளங்களே ஆதாரமா யிருப்பது போல், துக்கமே சம்சாரமென்னும் சமுத்திரத்திற்குக் காரணமாயிருந்து எப்பொழுதும் அதில் மூழ்கிக்கொண் டிருக்கும் ஜீவகோடிகளை உத்தரிப்பதற்காக, பரமசிவன் சண்டாள வேஷம்தரித்து, காசிப்பட்டணவழியாய் வரும் போது ஸ்ரீ ஸங்கராசார்யர் அவரைக்கண்டு, 'ஹே! சண் டாளா! விலகிப்போ' என்று சொல்லினர். அப்போது சண்டாள வேஷத்தைத் தரித்திருக்கும் பரமசிவன் சொல் லுகின்றார்.—

சுலோ|| "அந்நமயாதந்நமய மதவா சைதந்யமேவ சைதந்யாத்
யதிவரதூரீகர்த்தும் வாஞ்சஸி கிம் ப்ரூஹி கஸ்ச்சகஸ்சசேதி"

"ஹே யதிவர! அத்ரப்ரூஹி! கிமந்நமயாத் ஸரீராத், அந்நமயம் ஸரீரம் கஸ்ச்ச கஸ்ச்சேதி தூரீகர்த்தும் வாஞ்சஸி, அதவா சைதந் யாத் சைதந்யமேவ கஸ்ச்சகஸ்ச்சேதி வாஞ்சஸி நதாவதாதிமஃ, உபயோரப்யந்ந கார்யத்வே நைகத்வாத் ஸ்ரூயதே ஹி ஸரீரஸ் யாந்ந கார்யத்வம்."

ஹே! ஸந்யாஸிகளுக்கெல்லாம் சிரேஷ்டனு யிருக்கப் பட்டவனே; நான் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்லக்கடவாய். அன்ன விகாரமாகிய உன் ஸரீ ரத்திலிருந்து அன்ன விகாரமாகிய என் ஸரீரத்தை விலகும் படிச் சொல்லுகின்றுயா? அல்லது, சைதன்ய ஸ்வரூபமான உன் பிரத்தியகாத்மாவிலிருந்து, பிரத்தியகாத்ம ஸ்வரூப மான என் ஸரீரத்திலிருக்கும் பிரத்யகாத்மாவை விலகிப் போவென்று சொல்லுகின்றுயா?

"உபயோ ரப்யந்ந கார்யத்வே நைகத்வாத்."

உன் ஸரீரம் எப்படி அன்னமய கோஸத்தினுல் உண்டாயிற்றே, அதுபோல் என் ஸரீரமும் அன்னமய

கோஸத்தினுலுண்டாயிற்று. ஆதலால்,இரண்டு ஸரீரங்களும் ஒன்றாயிருக்க, உன் ஸரீரமாத்திரம் ஸுசியானதும் என் ஸரீரம் அஸுசியானதுமென்று எப்படிச் சொல்லலாம்! என் ஸரீரம் அஸுசியென்றால், உன் ஸரீரமும் அஸுசி யானதே! ஆதலால் ஸரீரத்தைப்பார்த்து 'விலகியிரு' என்று சொல்வது யுக்தமானதன்று. நம் மிருவருடைய ஸரீரமும் அஸுத்தமேயென்று சொல்வதற்கு வேதமே பிரமாணமா யிருக்கின்றது. அதாவது, "ஶ்ரூபதேஹிஶரீரஸ்ய அந்நகார யத்வம்" எல்லா ஸரீரங்களும் அன்னவிகாரமே என்று சுருதி சொல்லுகின்றது.

"ஸவாஏஷ புருஷோந்நரஸமய இதி."

பிரபஞ்சமெல்லாம் மாயா ஸ்வரூபமா யிருக்கின்றது. ஆதலால், ஒரே விதமாயிருக்கும் ஸரீரங்களைக்குறித்து அபி மானம் வைக்கலாகாது. சைதன்ய ஸ்வரூபனை பிரத்ய காத்ம ஸ்வரூபம் உன் ஸரீரத்திலும், என் ஸரீரத்திலும், இதர பிபீலிகாதி ஸரீரங்களிலும் ஒரேவிதமா யிருக்கின் றது. இதுவிஷயத்திலும் நீ சொல்லலாகாது. இதற்கு சுருதிப்பிரமாணம் என்னவென்றால்,

"சைதந்யஸ்ய ஸர்வத்ரைக ரூபத்வாத்" "ஏகோதேவஸ் ஸர்வ பூதேஷு கூட: ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா."

ஆத்மா ஒருவனே, சுயம்பிரகாசனுய் எல்லா பூதங் களிலும் அதி கோப்பியமாய் ஸாக்ஷிபூதனுய் பிரத்தியகாத் மாவாய் இருக்கின்றான்.

'ப்ரத்யக்வஸ்துநி நிஸ்தரங்கஸஹஜா நந்தாவபோதாம்புதௌ'
'விப்ரோயம் ஸ்வபசோயமித்யபிமஹாந் கோயம் விபேதப்ரம:'
'கிம் கங்காம்புநி பிம்பிதேம்பரமணௌ சண்டாலவீதீ பய:பூரே
'வாந்தரமஸ்த்தி காஞ்சநகடீ ம்ருத்கும்பயோர்வாம்பரே.'

துக்கமயமாகிய அஹங்காரங்களுக்கெல்லாம் வேறு யிருந்து பிரகாசித்துக்கொண் டிருக்கும் பர பிரஹ்மத்

துடன் சேர்ந் திருப்பவனுக்கு, அலைகளில்லாத ஸமுத்திரம் போல், ஸங்கல்பங்க ளில்லாமல் இவன் பிராமண னென்றும், இவன் சண்டாள னென்றும் பேதபுத்தி எங்கிருந்து உண்டாயிற்று. கங்காநதியிலும், சண்டாளர்வீதியிலும் இருக்கும் ஜலத்தில் பிரதி பிம்பித்திருக்கும் ஸூர்யனுக்கு எப்படிப் பேதமில்லையோ அப்படியே ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதமில்லை. தங்கக் கலசத்திலும் மண் பாண்டத்திலும் நிறைந்திருக்கின்ற ஆகாஸத்திற்குக் குண பேதங்கள் எப்படி யில்லையோ அப்படியே ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் குணதோஷங்க ளில்லை. ஆத்மவஸ்துவில் பேத புத்தியுடன் எவன் பார்க்கின்றானோ அவன், ஜனனமரண ரூபமாயிருக்கும் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட மாட்டான். குடத்திலிருக்கும் ஆகாஸத்தைக் கொண்டு போவதில்லை; குடத்தைமாத்திரம் கொண்டுபோகின்றான். அதுபோல் ஜீவனும், ஆகாஸம்போல் எங்கும் நிறைந்திருக்கப் பட்டது; நாசமில்லாதது. அது, எங்கும் அகண்டாநந்தரூபமாய் ஞானத்தினால் பிரகாசித்து, ஸர்வகாலத்திலும் (எப்பொழுதும்) ஆநந்தத்துடன் கலந்து ஒன்றாயிருக்கும் பரப் பிரஹ்மம். அப்படிப்பட்ட பரப் பிரஹ்மத்திற்குப் பேதபுத்தி யுண்டென்று எப்படிச் சொல்லலாம் என்று சண்டாள வேஷதாரியாகிய பரமேஸ்வரன் சொல்லினர்.

இத்தமீஸ்வரவாக்யம் நிஸம்ய ஸர்வஜ்ஞோ பகவாநாசார்யஃ ஸகல ஸாதந கலாபை ராஸ்ரி தாத்யாத் மஸாஸ்த்ரஃ நிரந்தர நிரதிஸய நிஜாநந்தாநு ஸந்தாநதயா உபஸாந்தஸ்வாந்தஃ அதயேவ விகளிதாபிமாநஃ புருஷவிஸேஷாந் காம்ஸ்சிதுபலக்ஷ்ய தேஷாம் விநைவ ஸமாதிம் ப்ராஹ்மணா த்யபிமாநாபநுத்தயே ஸ்வபதவிஸ்ராந்தயே ச பஞ்சபிஃ ஸ்லோகைஃ ஸவாநுபூதிமாவிஷ்கரோதி தத்ராபி ஜாக்ரதா த்யவஸ்தா வபாஸகத்வேந ப்ரதீசஃ ப்ரஹ்மாபேதம் தர்ஸயதி.''

இவ்விதமாய்ச் சண்டாள வேஷத்தைத் தரித்த பரம சிவனது வார்த்தையை, ஸர்வஞ்ஞனும் பூஜ்ஜியனும் இருக்கப்பட்ட ஸ்ரீ ஸங்கராசார்யர் கேட்டவுடன் வர்ணு ஸ்ரமாத்யபிமான மில்லாதவராய் சில முமூக்ஷுக்களைப் பார்த்து அவர்களுக்கு ஸமாதியில்லாமலே வரணுஸ்ரமா த்யபிமான நிவர்த்திக்காக நிஜ ஸ்வரூபமாகிய பிரம்மை க்யாநுபவத்தை அடைவதற்கு ஐந்து சுலோகங்களால் தமது ஸ்வாநுபவத்தை வெளியிடுகின்றார்.

"ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்திஷு ஸ்புடதராயாஸம் வித் உஜ்ரும்பதே, யாப்ரஹ்மாதி பிபீகாந் தநுஷு ப்ரோதா ஜகத்ஸாக்ஷிணீ, ஸைவாஹம் நச த்ருஸ்யவஸ்த்விதி த்ரு ட ப்ரஜ்ஞாபி யஸ்யாஸ்திசேத், சாண்டாலோஸ்து ஸது த்விஜோஸ்து குருரித்யேஷா மநீஷா மம."

ஜாக்கிரதை சொப்பந ஸுஷுப்திகளில் எந்த ஞானம் சுய பிரகாஸமாய்ப் பிரகாஸிக்கின்றதோ, எந்த ஞானம் ஜகத்திற்கு ஸாக்ஷியா யிருக்கின்றதோ, பிரம பிபீலிகாதி ஸரீரங்களில் எது ஆடிக்கொண் டிருக்கின்றதோ, அந்த ஸூத்திரமே "நான்." திருஸ்ய வர்க்கங்கள் நானல்ல. இப் படிப்பட்ட திருடஞானம் எவனுக்குண்டோ அப்படிப் பட்டவன் சண்டாளனு யிருந்தாலும், அல்லது பிராமணனு யிருந்தாலும் அவனே என் "குரு" வென்று ஸ்ரீ ஸங்கரா சார்யர் சொல்லுகின்றார். செவிகள் தேஹசர்மம் நேத் திரங்கள் நாக்கு மூக்கு என்னும் ஞானேந்திரியங்கள் ஐந் தும், வாய் கைகள் கால்கள் குதம் மர்ம ஸ்த்தானம் என் னும் கர்மேந்திரியங்கள் ஐந்தும், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தக்கரணங்கள் நான்கும் பிரத்தி யக்ஷமாய் எது தெரிகின்றதோ அதுவே ஜாக்கிரதாவஸ்தை என்று சொல்லப்படும். முன் சொல்லிய இந்திரிய வியாபா ரங்களெல்லாம் நித்திரை செய்யும்போது இல்லாம லிருந்த

போதிலும், பதார்த்தங்களினுடைய ஸ்மரணே மனதிற்கு உண்டாவதே சொப்நாவஸ்தை யென்று சொல்லப்படும். அஞதியா யிருக்கும் மூல ஞானத்துடன் மனது எப்பொழுது லீனமாகின்றதோ (அடங்கி யிருக்கின்றதோ) அதுவே, ஸுஷுப்தியாவஸ்தையென்று சொல்லப்படும். இந்த மூன்று அவஸ்தைகளிலும் ஜாக்கிராவஸ்தையை அதாவது, ஜாக்கிரத்தில் ஸுஷுப்தியைப் பிரகாசிக்கும்படிச்செய்தால் ஜனனமரணங்க ளில்லாமற் பரமாத்மா பிரகாசித்துக்கொண் டிருக்கும். அதாவது, அவஸ்தாத் திரயங்களிலும் ஸாக்ஷியாயிருக்கும் பரமாத்மாவே 'நான்' என்று எவன் எண்ணுகின்ருனே அவன், தானுகவே பிரகாசித்துக் கொண்டிருப்பான். இந்த மூன்று அவஸ்தைகளிலும் சுயம்பிரகாசனுயும் சித்ரூபனுயும் இருக்கும் பர பிரம்மமே நான் நான் என்று எவன் எண்ணுகின்ருனே அவன் அப்படியே யாவான். இதற்கு சுருதிப் பிரமாணம்.

"ப்ரணவோதநு ஸ்ஸரோஹியாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய
முச்யதே அப்ரமத்தேந வேதவ்யம் ஸாவத்தந்மயோ பவேத்"

எனனும் தியாந பிந்துபநிஷத் வாக்கியரீதியாய் பிரணவமே தநுசு, ஜீவனேபாணம், பரப் பிரம்மமே லக்ஷ்யமென்று சொல்லப்படும். ஆதலால், ஓர் வேடன் ஓர் குறியில் லக்ஷ்யம் வைத்து, பாணத்தை விட்டபோது அந்தப் பாணம் குறி தப்பாமல் அந்த லக்ஷ்யத்திலேயே சேர்ந்து குத்திக் கொண்டு அதிலேயே ஒட்டிக்கொண் டிருப்பதுபோல் பிரஹ்ம ஞானியும் மனதென்னும் தநுசில் ஜீவனென்னும் பாணத்தைப்பூட்டி, பிரம்மமென்னும் லக்ஷ்யத்தில் குறிவைத்துப் பிரயோகித்தபோது, இந்த ஜீவனென்னும் பாணமானது அந்த லக்ஷ்யமென்னும் பரப் பிரம்மத்திற் சேர்ந்து, அதில் லயித்து, தத்ரூபமாகும்.

இவ்விதமாய் ஞான ஸ்வரூபமாகிய பரமாத்மா, ஜீவர்களுக்குப் பிரம்மபாவத்தைப் போதித்து, வியஷ்டி ஸமஷ்டி தேஹேந்திரியாதிகளுக்குப் பின்னமாய்ச் செய்து அவைகளைப் பிரகாசிக்கும்படிச் செய்வித்து, ஜீவனுக்குப் பிரம்ம தத்துவத்தைக் காட்டுகின்ருர். தேஹேந்திரியாதிகளைப் பிரகாசிக்கச் செய்வதேயல்லாமல் ஜடமாகிய பிரபஞ்சத்தையும்கூட பிரகாசிக்கச் செய்கின்ருர். அதாவது, ஸர்வ ஜகத்தையும் பார்க்கப்பட்டவன் பரமாத்மாவே யென்பதாம். ஆனல், அப்படிப்பட்ட ஆத்மா ஏன் காணப்படுவதில்லை யென்ருலோ, சாக்ஷி ஸ்வரூபமாய்ப் பிரகாசித்துக் கொண் டிருப்பதனல் காணப்படுவதில்லை. இது விஷயம் தெரிந்துகொள்ளவேண்டுமானல் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" பார்க்க. ஆத்மா ஓர் ரூபத்துடன் சேர்ந்து சகல ஜந்துக்களையும் பிரகாசிக்கச் செய்கின்றது. ஞான சொரூபமாயும் சாக்ஷியாயும் இருக்கும் பரமாத்மா எதுவோ அதுவே நான். காணப்படும் பிரபஞ்சம் நானல்ல. தேஹமும் இந்திரியங்களும், இந்திரியங்களினல் செய்யப்படும் காரியங்களும் ஸாஸ்வதமானதல்ல. அனேக கோடி ஜன்மங்களில் திருடமாய் ஸம்ஸாரவிஷயத்தை மனனம் செய்து வந்தபடியால் இந்த ஜன்மத்தில் எந்த உபதேஸங்களும் இல்லாமல், காம க்ரோத லோப மோஹ மத மச்சரங்கள் எப்படித் தனக்குத் தானே உண்டாகின்றதோ அதுபோல் அனேக ஜன்மங்களாய்ச் செய்துவரும் ஸத்கர்மங்களினல் நானே பிரம்மமென்று எண்ணிக்கொண்டு வரப்பட்டவன், 'குரு' வில்லாமலும் ஸாஸ்த்திராப்பியாஸ முதலாகிய ஸாதனங்க ளில்லாமலே தீவிரமாய்ப் பிரம்ம ரூபத்தை அடைகின்ருன். இப்படிப்பட்ட பதார்த்த ஞானம் எவனுக்கு உண்டோ அவனே பிரம்ம சொரூபனென்று தெரிந்துகொள்ளவேண்டும். அவன் சண்டாளனு

யிருந்தாலும் அவனே பிராமணனென்று சொல்லப்படு வான். அப்படிப்பட்டவனே காரணகுரு.

சண்டாளனை எப்படி "குரு" வாய் வைத்துக் கொள் ளலாமென்று நீ சந்தேகப்படுகின்றாயோ? அப்படிச் சந் தேகப் படலாகாது. ஏனென்றால், நித்தியமானதும், சுத்த மானதும், அசங்கமானது (அசயாதது) மாகிய ஆத்மா விற்கு, ஜாதி குலம் என்னும் எந்த அபிமானமுண்டோ அந்த அபிமானமெல்லாம் நசித்துப்போவதால், அவன் சண்டாளனு யிருந்தாலும் பரிசுத்த முடையவனே என்று சொல்லாம். ஜீவேஸ்வரர்களுக்கு எப்படிப்பட்ட அபிமா னங்களும் இல்லையென்று ஸ்ரீ ஸங்கராசார்யருடைய அபிப் பிராயம்.

ஜாக்கிரதை சொப்ந ஸுஷுப்தியாவஸ்தைகளிலும் எந்த ஆத்ம சைதன்யம் ஸ்பஷ்டமாய்ப் பிரகாசித்துக் கொண்டு, பிரமதேவன்முதல் பிபீலிகாதி ஸகலசராசர சரீ ரங்களுக்கும், ஜகத்திற்கும் எது சாக்ஷியா யிருக்கின்றதோ அந்த ஞான ஸ்வரூபமாகிய பரமாத்மா நானேயொழிய காணப்படும் பதார்த்தங்கள் நானல்ல என்னும் திருட ஞானம் எவனுக்கு உண்டோ அவன் சண்டாளனு யிருந் தாலும், பிராமணனு யிருந்தாலும் அவனே காரணகுரு வென்று ஸ்ரீ ஸங்காராசார்யருடைய அபிப்பிராயம்.

ஸ்லோ|| "தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநு ப்ராவிஸ தித்யாதி ஸ்ருதேஃ."

"ப்ரஹ்மைவா ஹமிதம் ஜகச்ச ஸகலம் சிந்மாத்ர விஸ்தாரிதம் ஸர்வம்சைத தவித்யயா த்ரிகுணயா ஸேஸம் மயாகல்பிதம், இத்தம் யஸ்ய த்ருடா மதிஸ் ஸுகதரே நித்யேபரே நிர்மலே, சாண்டா லோஸ்து ஸதுத்விஜோஸ்து குருரித்யேஷா மநீஷா மம."||

பரமாத்மா பிரபஞ்சத்தை சிருஷ்டிசெய்து அந்தப் பிரபஞ்சத்திலேயே பிரவேசித்திருக்கின்றனென்று வேதங் களில் சொல்லப்பட் டிருக்கின்றன.

இந்தப் பிரபஞ்சமெல்லாம் ஜீவேஸ்வர ரூபமாய்,ஸத்வ குண ரஜோகுண தமோகுணங்களுடன்கூடி, சுகரூபமாயும், நாஸ ரஹிதனுயும், சுயம் பிரகாஸனுயும் இருக்கும் பரப் பிரஹ்மத்தில் புத்தியைத் திருடமாய் எவன் நிறுத்துகின் ருனே, அப்படிப்பட்டவன் சண்டாளனுனுலும், பிரா மணனுனுலும் அவனே குருவென்று ஸ்ரீ ஸங்கராசார்ய ருடைய அபிப்பிராயம்.

எவன், நித்தியமாயும் நிர்மலமாயும் இருக்கும் பரப் பிரஹ்மமே நான் என்று நினைத்துக் காணப்படும் திருஸ்ய மாகிய ஜீவேஸ்வராதி பிரபஞ்சத்தை மாயையென்று எண்ணுகின்ருனே அவன் எவனுனுலும்சரி அவனே எனக்குக் குருவென்று ஆசார்யர் சொல்லுகின்ருர்.

"ஸஸ்வந் நஸ்வரமேவ விஸ்வமகிலம் நிஸ்சித்ய வாசா குரோர் நித்யம் ப்ரஹ்ம நிரந்தரம் விம்ருஸதா நிர்வ்யாஜஸாந் தாத்மநா பூதம்பாவி ச துஷ்க்ருதம் ப்ரதஹதா ஸம்விந்மயே பாவகே ப்ராரப்தாய ஸமர்ப்பிதம் ஸ்வவபுரி த்யேஷா மநீஷா மம."

குருவினுடைய வாக்கினுல் தெரிந்துகொண்டு, ஸமஸ்த பிரபஞ்சங்களையும் அநித்யமென்று அடிக்கடி நிச்சயித் துக்கொண் டிருக்கப்பட்டவன், எப்பொழுதும் நாஸ மில்லாத பரப்பிரம்மத்தை ஸ்துதிசெய்துகொண்டு கபடமில் லாத ஸாந்த மனதுடையவனுய் ஞானரூபமான அக்கினியி னுல், அனேக ஜன்மங்களாய் வந்துகொண்டிருக்கும் ஸஞ் சிதமென்னும் புண்ணிய பாப கர்மங்களின் மூட்டைகளை யெல்லாம் பஸ்மம்செய்து, பிராரப்த கர்மத்தைமாத்திரம் அனுபவிக்கின்ருன். காரண குருவினுடைய வாக்கியத்தி னுல் இந்தப் பிரபஞ்சம் அநித்தியமென்று அறிந்து, திரி காலத்திலும் (மூன்றுகாலத்திலும்) இருக்கப்பட்டதும், பிர பஞ்சாதீதமானதும், சுயம் பிரகாஸமானதுமான எந்த பரப் பிரம்மமுண்டோ அந்தப் பரப் பிரம்மமே நானுகின்

றேன் என்று எப்பொழுதும் நினைத்துக்கொண்டே யிருக்க வேண்டும். இந்தப் பிரம்ம பதவியை அடைவதற்கு வெகு காலம் செல்லும். இது விஷயத்தைக்குறித்து பதஞ்ஜலி ருஷி என்ன சொல்லுகின்றாரென்றால்,

"ஸதுதீர்ககால நைரந்தர்ய ஸத்காராஸேவிதோ த்ருடபூமி."

பிரம்மபதவி, அனேக ஜன்மங்களாய் நிரந்தரம் (எப்பொழுதும்) பிரம்மத்தைத் தியானம்செய்து வருவதனால், உண்டாகின்றது. எல்லா கர்மங்களையும் சாஸ்த்திர விதிப்படி விட்டு, அதாவது, ஸந்யாசியாய் அநேககாலம் விடாமல் செய்துவரும் திருட ஸம்ஸ்காரத்தினால், (பூர்வ ஜன்மங்களின் வாசனையினால்) தானாகவே ஞானரூபமான அகண்டானந்தத்தை அடைந்து, நானே பிரம்ம சொரூபனென்று தெரிந்துகொள்ளுகின்றான். இதுபோல், ஸதாகாலமும் பிரம்மத்தைத் தியானம் செய்துவரவேண்டுமென்று ஸ்ரீ ஸங்கராசார்யருடைய அபிப்பிராயம். "நிர்வ்யாஜேத்யாதிநா விதுஷ: தேநேத்யர்த:" அஹங்காரம் கபடம் அஸுர குணங்கள் அதாவது, காமக் குரோத லோப மோஹ மத மச்சரங்கள் இல்லாதவர்களாகிய ஞானிகள், தமது சரீரங்களைப் பிராரப்தத்திற்குச் சமர்ப்பிப்பார்கள். அதாவது, மனோ விகாரங்களில்லாமல் சுக துக்கங்களை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். 'ஏதௌ வாஸநா மநோநாஸௌ கீத்ருஸௌ." அனேக ஜன்மங்களாய் வரும் வாசனைகளின் நாஸனமும், மனோ நாஸனமும் எவ்விதமாய் உண்டாகின்றன. அவைகள் எப்படிப்பட்டவைகள் என்னும் கேள்விக்குச் சமாதானம் என்னவென்றால்,

மனதிற்கு, டம்பம் முதலானவைகள் அகஸ்மாத்தாய் உண்டாவதற்குக் காரணம், பூர்வ ஜன்மங்களின் வாசனையேயாம். அதாவது, அனேக ஜன்மாந்திரங்களாய், காமக்

குரோதாதி அழுக்குகள் மனதுடன் கூடவே தொடர்ந்து கொண்டு வருவதே வாசனையென்று சொல்லப்படும். இந்தக் காமக் குரோதாதி குணங்களையெல்லாம் ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் பார்க்கலாம். அந்த வாசனைகளின் நாஸனம் எப்படி உண்டாகுமென்றால், இது ஆத்மா வென்றும், இது அநாத்மாவென்றும் தெரிந்துகொள்ளாத அவிவேகத்தினால் உண்டாகிய காமக் குரோதாதி முதலாகிய அஹங்காரங்களும், அன்னிய பதார்த்தங்களினால் (ஆஸா பாஸங்களினால்) உண்டாகிய காமக் குரோதாதிகளும், தைவவாஸனை உண்டானபிறகு நாசமாய்விடும். தீவட்டியிலிருந்து அனேகதீபங்கள் உண்டாவதுபோல், தைவவாசனையிலிருந்து உண்டாகும் ஸாத்விக விருத்திகளின் ஸமூஹமே (கூட்டமே) அந்தக்கரணபரிணாமமென்று தெரிந்து கொள்ளவேண்டும். அதாவது, இதர விஷயங்களில் மனம் ஓடாமலிருப்பதே அந்தக்கரண பரிணாமமென்று சொல்லப்படும். மனதிற்கு உண்டாகும் ஆஸா பாஸங்களென்னும் குரங்கு சேஷ்டைகளெல்லாம் பிரம்ம நிஷ்டையினால் நாசமாகும். இந்தப் பிரம்மநிஷ்டையை அப்பியாசம் செய்ய வேண்டுமானால், ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தைப்பார்த்து அதில் சொல்லியிருப்பதுபோல் அப்பியாசம்செய்து வரவேண்டும். காம க்ரோதாதி வாசனைகளையெல்லாம் போக்கடிப்பது தைவ வாசனை. தைவ வாசனை, தத்துவ ஞானத்திற்கு ஸாதனம்என்று, சுருதிகளில் பிரசித்தமா யிருக்கின்றன. தன்னைவிட அந்நியமா யிருக்கும் தேஹேந்திரியங்களில் நான் என்னும் புத்தியே அபிமானமென்று சொல்லப்படும். இந்த அபிமானத்தை விடுவதே ஞானஸாதனம். அபிமானத்தைவிட்டு, பரிசுத்தமான பரமாத்மாவை நிதித்தியாஸனம் செய்யப்பட்டவன் ஆத்மாவைதரிசிக்கின்றான். "இதம் வாஸநாக்ஷயாதே: தத்வஜ்

ஞாந ஸாதநத்வம் ப்ரதர்ஸயந்நா:'' வாசனைகளின் நாசனமே தத்வ ஞானத்திற்கு முக்கியமென்று சொல்லுகின்றது. ஆகாம்மியம் ஸஞ்சிதரூபமான, கர்மத் துவயங்களை அதாவது, புண்ணிய பாபங்களைப் பிரம்மாக்கினியினால் பஸ்மம் செய்த புருஷன் தன்னைவிட வேறுவஸ்து இல்லையென்று நினைக்கின்றான். (இந்தப் பிரம்மாக்கினி ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் காட்டியிருக்கும் கணபதி படத்திற்கு நான்காம் படத்தில், நாபியிலிருந்து பிரம்மாக்கினி உண்டாவதைக் காட்டியிருக்கின்றது; அதைப்பார்க்க. அதனால் பிரம்ம ஞானிக்குப் பாபஸம்பந்தங்களில்லை. ஆனால் ஞானியானவன் தன் சரீரம் நசிக்கும்வரையில் பிராரப்த கர்மத்தைமாத்திரம் அனுபவிக்கவேண்டும்.

''மமேதம் ஸரீரம் அநுபூயந்தே'' இது என்னுடையது; இது என் ஸரீரம்; இவை என் காதுகள்; இது என் பிராணன்; இது என் மனம்; இது என் புத்தி என்று வேறு வேறு பதார்த்தமாய் எண்ணுவது பிரதி புருஷனுக்கும் அனுபவமா யிருக்கின்றது. தேஹேந்திரியங்களையெல்லாம், 'இது இது' என்று வேறாய்ச் சொல்வதனால் ஆத்மா தேஹேந்திரியங்களை விட வேறா யிருக்கின்றதென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது.

''ஆத்மாநு அநுபூயந்தே'' ஆத்மா ''நான்'' என்று சொல்லிக்கொண்டபோது அந்த ''நான்'' என்னும் ஆத்மா, தேஹேந்திரியாதி மனோ புத்திகளைவிட வேறாகிய ஓர் வஸ்துவென்று, தேவ மனுஷ்யாதி ஸர்வ ஜந்துக்களுக்கும், தம்தம் மனதிற்குப் பிரத்தியக்ஷமாய்த் தோன்றுகின்றது.

''அத இதம்காராஸ்பதத்வேந'' ''இது'' ''இது'' என்று வேறு பதார்த்தமாய் எண்ணுவதனால் ''தேஹாதீநாம் அபாவேந'' கடம் முதலாகிய வேறு பதார்த்தங்களை ''இது'' ''அது'' என்று நாம் எப்படிச் சொல்லுகின்றோமோ அது

போல் தேஹேந்திரியங்களேயும்கூட "இது" "அது" என்று வேறு பதார்த்தமாய் நாம் சொல்லுகின்ருேம். ஆதலால், கடாதிகளேப்போல், தேஹேந்திரியங்களுக்கு ஆத்மா வேருயிருக்கின்றது என்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. "சித்தம்ப்ரஹ்மத்வம்" நான் என்று சொல்லப்பட்ட ஆத்மா ஸச்சிதானந்த ஸ்வரூபனுகிய பிரம்மமே என்று நிச்சயிக்கவேண்டும். "இது" என்று சொல்லப்பட்ட தேஹேந்திரியங்கள் 'நான்' அல்ல, இவை அனுத்மாக்கள் என்றே சொல்லவேண்டும்.

சித்பாஸ்யத்வ ப்ராந்திரேவ" எல்லா ஸரீரங்களும், பிரம்மமாகிய ஆத்மாவின் ஸகாயத்தினுல் பிரகாசிக்கின்றனவேயொழிய, சுயமாய்ப் பிரகாசிக்கத்தக்கவை யல்ல; அதனுல் சரீரங்களே விட ஆத்மா வேருயிருக்கின்றதென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. இப்படிப்பட்ட சரீரத்தில் "நான்" என்னும் ஆத்மா எப்படி 'இருக்கின்றதென்ருல், ஸ்படிகத்தின்முன் சிவப்பு வர்ணமுடைய புஷ்பத்தைக்காட்டியபோது அந்த சிகப்பு வர்ன ரூபம் ஸ்படிகத்தில் தோன்றுவதுபோல் இருக்கின்றது.

"ப்ரத்யகாத்மஃ ஸ்வயமேவ ப்ரகாஸதே" நமக்குள் இருக்கும், மனம் புத்தி சித்தம் அஹங்காரமென்னும் அந்தக்கரணங்கள் நான்கும், கண் இந்திரிய வழியாய்ச் சென்று வெளியில் காணப்படும் பதார்த்தங்களின்மீது வீழ்ந்து அவைகளின் பிரதிபிம்பத்தைத் தன்னில் நிறுத்திவிடுகின்றன. அதன் பிரதிபிம்பம் தன்னில் நிறுத்தியபிறகு அந்தப் பதார்த்தம் தன் எதிரில் காணுவிட்டாலும், மனம் அதையே ஸ்மரித்துக்கொண் டிருக்கும். அதாவது, அந்தக்கரணத்தில் வெளி வஸ்துக்களின் பிரதிபிம்பம் பிரதிபலித்துக்கொண்டேயிருக்கும். வெளியில் காணப்படும் பதார்த்தங்களின் ரூபங்களே அந்தக்கரணங்கள் தாமாகவே

கிரஹிக்கத்தக்க ஸ்வபாவ குணமுடையவை அல்ல. ஆத்மாவின் ஸம்பந்தத்தினுலேயே அந்தக் கரணங்களுக்கு கிரஹிக்கத்தக்க ஸக்தி யுண்டாகின்றது. ஆதலால், ஆத்ம சைதன்யமே அந்தக்கரணத்தை யுண்டாக்குகின்றது. ஆதலால், ஆத்ம சைதன்யமே அந்தக்கரணத்தை ஜொலிக்கச் செய்கின்றது. இந்த அந்தக்கரணத்தையே இதுவரையில் "நான்" "நான்" என்று சொல்லிக்கொண்டு வந்தது. ஆதலால், அதை அந்தக்கரணமென்று சொல்லாமல் "நான்" என்பதே ஆத்மாவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக்கரணத்தை ஆத்மாவென்று மந்தபுத்தி யுடையவர்களுக்குச் சொன்னதேயொழிய ஸூக்ஷ்ம புத்தி யுடையவர்களுக்குச் சொன்னதல்ல.

குருவானவர் சிஷ்யனுக்குப் பிரம்மோபதேசம் செய்யும்பொழுது, சிஷ்யனைப் படிப்படியாய்க் கொண்டுபோவதற்காக முதல், அன்னமே பிரம்மமென்றும் பிறகு, பிராணனே பிரம்மமென்றும், இவ்விதமாய் ஒவ்வொன்றுய் உபதேசம் செய்து மறுபடியும் அந்தப் புத்தியைத்திருப்பி, அந்தக்கரணமே பிரம்மமென்று ஸ்தாபித்து, நான் என்னும் ஞானம் அந்தக்கரணத்திற்கே உண்டென்றும், அந்த அந்தக்கரணத்தினுல் ஆத்மாவைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றும், அந்தக்கரணங்களில் காணப்படும் பிரகாசத்திற்குக் காரணமென்னவென்றுல், அதற்குச் சாக்ஷிபூதமாயிருக்கும் ஆத்மாவே காரண மென்றும், இந்த ஆத்மாவை "நான்" என்னும் அறிவுடைய அந்தக்கரணத்தின் மூலமாகவே அறியவேண்டுமென்றும் குருவானவர் உபதேசிக்கின்றுர்.

ஆத்மா சுயம்பிரகாசமாயிருக்க, அந்த ஆத்மாவைத் தெரிந்துகொள்ள "நான்" என்னும் அந்தக்கரணத்தின் ஸஹாயமேன் என்றுலோ, ஆத்மாவை அஞ்ஞானம் மூடிக்

கொண் டிருக்கின்றது; ஆதலால், ஆத்மாவைத் தெரிந்து கோள்ள அஞ்ஞானமென்பது நாசமாகவேண்டும்.

சுலோ|| "யாதிர் யஜ்ஞா தேவதாபி ரஹமித்யந்த: ஸ்புடா க்ருஹ்யதே யத்பாஸா ஹ்ருதயாக்ஷ தேஹவிஷயா பாந்தி ஸ்வதோ அசேதநா:, தாம்பாஸ்ஹை: பிஹிதார்க்க மண்டலநிபாம் ஸ்பூர்த் திம்ஸதா பவயந் யோகீ நிர்வ்ருத மாநஸோ ஹி குருரித்யேஷா மநீஷா மம."

எல்லா ஜந்துக்களிலும் மனஸ் சாக்ஷியாயிருந்து, நான் என்னும் எண்ணத்தைத் தெரிந்துகொள்ளத்தக்கதும், இந் திரிய வியாபாரங்களையெல்லாம் ஆத்மா செய்விக்கின்ற தென்றும், அந்த ஆத்மாவே சுயம் பிரகாசமான ஜோதி சொரூபமென்றும் அறிந்து, அதனுல் உண்டாகும் பிரம்மா நந்த சுகத்தை எவன் அடைந் திருக்கின்ருனே அப்படிப் பட்டவனையே ஸ்ரீ ஸங்கராசார்யர் தன் குருவாய் பாவிக் கின்ருர்(எண்ணுகின்ருர்.)

திர்யக் ஜந்துக்கள்; அதாவது, மிருகங்கள் பக்ஷிகள் புழுக்கள் முதலானவைகள் எவையுண்டோ அவைகளுக் கெல்லாம், நான் என்னும் அந்தக்கரண விருத்திகள் கார ணமாயிருந்து, எல்லா பூதங்களையும் மற்ருெரு ஸஹாய மில் லாமலே தனக்குத் தானுகவே பிரகாசிக்கச்செய்யும் ஞான சொரூபமே அகண்டானந்த பிரம்மமாய் கிரஹிக்கப்படு கின்றது. புழு முதலானவைகளுக்கெல்லாம் "நான்" என் னும் அபிமானம் எது என்று கேட்கின்ருயோ ? அதைச் சொல்லுகின்ரேம் கேள் ! ஸர்ப்பமானது மனிதனைப் பார்த்தவுடன் ஓடிவிடுகின்றது. அப்படி ஓடுவதற்குக் காரண மென்னவென்ருல், "நான்" என்னும் அறிவு அதற்கு இல்லாவிட்டாலும், தன்னைக் கொல்ல வருகின்ரு னென்று எண்ணித் தன் தேஹத்தின்மீது அபிமானம் வைத்து ஓடுகின்றது. ஆதலால், அதற்கும் நான் என்னும்

தேஹாபிமானமுண்டு. அப்படிப்பட்ட பிரம்மத்தின் சகாயத்திஞல் அந்தரேந்திரிய (மனம் புத்தி சித்தம் அஹங்காரம்) பாஹேந்திரிய (வெளியில் காணப்படும் வஸ்துக்களின் தோற்றம்) தேஹ வியாபாரங்கள் உண்டாகின்றன. பரப் பிரம்மத்தின் சஹாயத்திஞலேயே இந்தப் பிரபஞ்சமெல்லாம் பிரகாசிக்கின்றதென்று சுருதிப்பிரமாணமுண்டு.

சூர்யன் எங்கும் பிரகாசித்துக்கொண் டிருந்தபோதிலும் அவனை மேகங்கள் மூடியபோது, தத்காலம் அவன் பிரகாசம் குறைந்திருக்கும். அவன் பிரகாசம் காணப்படாம லிருப்பது மானவர்களின் கண்களுக்கே யல்லாமல் சூர்யனுக்கல்ல. அதுபோல் "நான்" என்னும் ஆத்ம ஞானம் பரோக்ஷமாய் எல்லோருக்கும் தெரிந்தாலும் அவர்களுக்கு அபரோக்ஷஞான முண்டாகும்வரையில் அதாவது, பிரம்ம ஸாக்ஷாத்காரம் பிரத்யக்ஷாநுபவமாய் சித்திக்கும்வரையில், அஞ்ஞானம் இருப்பதால் சித்திக்கமாட்டா.

தேஹேந்திரியங்களுக்கெல்லாம் வேறுயிருந்து சுயம் பிரகாஸமா யிருக்கும் ஆத்மாவே "நான்" என்னும் அபரோக்ஷ ஞானமடைந்த யோகியானவன் எப்பொழுதும் திருட சித்தமாகவே யிருப்பான். இப்படித் திருட சித்தமா யிருப்பதே ஸம்பிரஞ்ஞாத ஸமாதியென்று சொல்லப்படும். மனதை ஒரே நிலையில் நிறுத்துவது தியானமென்று பதஞ்ஜலி யோக ஸூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது, விட்டுவிட்டுச்செய்வது தியானமென்றும், எப்பொழும் விடாமலிருப்பது ஸமாதியென்றும் சொல்லப்படும். இந்தத் தியான ஸமாதிகள் இரண்டும் இதனடியில் விவரித் திருக்கின்றோம்.

"சித்தைகாக்ரியாத் உபதிஸ்யதே" மனதை ஒரே நிலையில் நிறுத்திஞல் ஞானேதயமாகும். மனதை ஒரே நிலை

யில் நிறுத்தும் புருஷனது தாரதம்யங்களைக் கண்டுபிடித்து, குருவானவர் சிஷ்யனுக்கு ஞானோபதேசம் செய்கின்றார். "விலாப்ய விக்ருதிம் சிதானந்தம் சிந்தயேத்" யோகாப்பியாஸம் செய்யும்போது, மனதை ஒரே நிலையில் நிறுத்த விடாமல்செய்யும் மனோ விகாரங்களையெல்லாம் அடக்கிப் பிறகு யோகாப்பியாஸம் செய்யவேண்டும். ஸம் ப்ரஞ்ஞாத ஸமாதி எப்படிப்பட்டதென்றால், அஹங்கார மில்லாமல் அதாவது, நான் என்னும் அந்தக் கரணங்களுடன் சம்பந்தப்படாமல் தன்னைத்தான் மறந்து கேவல பிரம்ம சொரூபனாயிருப்பது ஸம் ப்ரஞ்ஞாத ஸமாதி என்று சொல்லப் படும். இப்படிப்பட்ட ஸமாதிநிலை, தியானப்பியாசத்தினால் உண்டாகின்றது.

"ஜ்ஞாநஸாதந முபதிஸந்நாஹ" "நான்" என்பதே பிரம்மமென்று முதலில் உபதேசிக்கின்றார்கள். பிறகு நான் என்பதே பிரம்ம மல்லவென்றும், அந்தக்கரண விருத்தி யென்றும், அந்த அந்தக்கரண விருத்தியினால் ஆத்மஞான முண்டாகுமென்றும், அந்த ஆத்ம ஞானத்தினால் பிரம்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகுமென்றும் சொல்லப்பட் டிருக்கின்றது. அதாவது, நான் என்னும் எண்ணத்தைவிட்டுத் தன்னைத்தான் மறந்து, பிரம்மானு ஸந்தானம் செய்து கொண் டிருக்கவேண்டுமென்றும் உபதேசிக்கிறார்கள்.

"யோகீத உபலக்ஷணம்" மனம் வெளியில் ஓடாமலிருப் பதே யோகம். அப்படி வெளியில் ஓடவிடாமல் மனதை நிறுத்தினவனே யோகி. இந்த யோகமே மௌனமென்று சொல்லப்படும். "மௌநம் ஏகதண்டிந:" யோகத்திற்கு ஸாதனம் என்னவென்றால், சித்த விருத்திகளையெல்லாம் அடக்கிச் சாந்தமாயிருந்து, எந்த எண்ணங்களு மில்லாதவனாய், சகல பூதங்களையும் ஸமமாய்ப் பார்ப்பவனே யோக சாதனம்செய்த ஸந்யாஸீ என்று சொல்லப்படுவான். இப்

படிப்பட்ட குணங்களையுடைய ஸந்யாஸிக்கு உண்டாகும் பலனைச் சொல்லுகின்றோம், கேள்.

"ததாச பவதீதி பாவ:" பிரம்மஞானியாகிய ஸந்யாஸிக்கு, வாக்கு வியாபாரமும் மனோ வியாபாரமும் இல்லாததால், எப்பொழுதும் பிரம்ம பாவத்தினால் சுயம் பிரகாஸ சித்ரூப பிரம்மானந்தத்தை அடைகின்றான்.

"பரிப்ராப்த ஆநந்தோ ஹி விவர்ததே" ஆத்மாநாத்ம விவேகமுண்டாய் ஸம்ஸார பந்தங்களையெல்லாம் விட்டு மனோ வியாபாரமாகிய ஸங்கல்பங்களையெல்லாம் ஒழித்திருக்கும் யோகிக்கு பிரம்மானந்தம் பிராப்திக்குமென்று கிரந்தங்களில் சொல்லப்பட் டிருக்கின்றது.

"ஹி பாவ:" யோகியானவன், இந்தப் பிரம்மாநந்தத்தில், சந்தோஷ மனதுடையவனா யிருப்பதனால், ஜீவ ப்ரஹ்மைக்ய ஸந்தானத்திலேயே யிருப்பான். இப்படிப்பட்டவனே என் குரு வென்று ஸ்ரீ ஸங்கராசார்யர் சொல்லி யிருக்கின்றார்.

> "யத்ஸௌக்யாம்புத்தி லேஸலேஸத இமே ஸக்ராதயோ நிர்வ்ருதா யஸ்சித்தே நிதராம் ப்ரஸாந்தகலநே லபத்வா முநிர் வ்ருத: யஸ்மிந்நித்ய ஸுகாம்புதௌ களிததீர் ப்ரஹ்மைவ ந ப்ரஹ்மவித்ய: கஸ்விதஸ ஸுரேந்த்ர வந்தி தபதோ நூநம் மநீஷா மம."

'கு' என்றால் காடாந்தகாரம் (இருள்) 'ரு' என்றால் அந்தக் காடாந்தகாரத்தை நாசம் செய்யப்பட்டவன். இப்படிப்பட்ட குருவினால் உபதேசம்பெற்ற மநநசீலன் எப்பொழுதும் பிரம்மத்தையே ஸ்மரித்துக்கொண்டு மனஸ் ஸங்கல்பமில்லாத பிரம்மஸுகத்தை அடைந்து திருப்தனாகின்றான். ஆதலால், அவன் நித்திய ஸுகமென்னும் சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும் மனதுடையவனா யிருப்பதால், அவன் பிரம்மமே யாகின்றான். இப்படிப்பட்டவன்

எவனுயிருந்தபோதிலும் அவன், தேவதைகளால் நமஸ்கரிக்கப்படுவானென்று சுருதி சொல்லுகின்றது.

ஸங்கல்பமில்லாத சித்தத்தில், எப்பொழுதும் பிரம்மஸுகத்தை அடைந்த மநநஶீலன், நித்தியஸுக சமுத்திரத்தில் மூழ்கிய மனதுடையவனு யிருப்பதால், அவனைத் தேவதைகள் நமஸ்கரிக்கின்றுர்கள்.

சுயம் பிரகாஸமானதும், ஞான சொரூபமானதுமான ஆத்மஸம்பந்த ஸுகம் எதுவோ அதுவே ஸௌக்கியமென்று சொல்லப்படும். அந்த ஸௌக்கியம் எங்கும் நிறைந்திருப்பதனுல், சமுத்திரத்திற்கு ஒப்பிடப்பட்டது. அப்படிப்பட்ட ஸுகத்தில் இந்திராதி தேவதைகள் அணுமாத்திரம் அடைந்து திருப்தர்களா யிருக்கின்றுர்கள். இந்தப் பிரம்மத்தில் அணுமாத்திரம் ஆஸ்ரயித்து, ஸமஸ்த பூதங்களும் ஜீவித்திருக்கின்றன. அந்த அணுமாத்திர பரப்பிரம்மத்தை மாயை மூடிக்கொண் டிருப்பதனுல், அது ஜனன மரணங்களை அடைந்துகொண்டு வருகின்றது. இந்த மாயை நீங்கியபிறகு, நித்திய நிரதிஸயாநந்த பிரம்மமென்னும் சமுத்திரத்திலே மூழ்கியிருப்பான். அப்படி மூழ்கி யிருப்பதே அஸம்பிரஞ்ஞாத ஸமாதி அதாவது, விருத்தி ஸூன்யமான மனது அஸம் பிரஞ்ஞாத ஸமாதியென்று சுலோகமுண்டு. இப்படிப் பிரம்மானந்தத்தில் லீனமானவன் பரிபூர்ணமான ஆநந்த சொரூபன் தானேயாகின்றுன். அப்படிப்பட்டவனுக்கும், பிரம்மத்திற்கும் பேதமேயில்லை. அவனே பிரம்மமென்று சொல்லப்படுவான். பிரம்மத்தைத் தெரிந்தவன் பிராமண ஞகின்றுனென்று சுருதி சொல்லுகின்றது. இப்படிப்பட்டவன் இந்திராதி தேவதைகளாலும், மனுஷ்யர்களாலும் பூஜிக்கப்படுகின்றுன். ஐஸ்வர்யத்தைக் கோரப்பட்ட புருஷன் பிரம்ம ஞானியைப் பூஜிக்க வேண்டுமென்பது சுருதிவசனம். ஆத்மாவைத் தெரிந்து

கொண்ட பிரம்ம ஞானிக்கு திரிமூர்த்திகளும் சுவாதீன மாகின்றார்களென்று ஒரு ஸ்மிருதி சொல்லுகின்றது.

ஆதலால், இதுவரையில் சொல்லிவந்த பிரம்ம ஞான சாதனர்களுக்கு, பிரம க்ஷத்திரிய வைஸ்ய ஸூத்திரர் என்னும் ஜாதிபேதம் இல்லை. இது பரிபக்குவமடைந்த அந்தக்கரண முடையவர்களுக்கே அடையத் தக்கதுமா யிருக்கின்றது. இதற்குச் சுருதிப் பிரமாணம் என்ன வென்றால்,

சுரு|"ஜாதிரிதிச ந சர்மனோ ந ரக்தஸ்ய ந மாம்ஸஸ்ய ந நசாஸ்திः
ந ஜாதிராத்மனோ ஜாதிர் வ்யவஹார ப்ரகல்பிதா."

உலகத்திலுள்ள ஸகல ஜனங்களின் ஸரீரம், அஸ்திகள் சர்மம் நரம்பு மாமிஸம் கொழுப்பு ரத்தம் முதலானவைகளி னால் நிறைந்திருக்கின்றது. ஆதலால், ஸரீரத்திற்கு ஜாதி பேத மில்லை. அன்றியும், ஸகல ஜீவ ஜந்துக்களின் சரீரத் தில் பரப் பிரம்மத்தின் அம்ஸமாகிய ஆத்மா ஒருவனே வியாபித்திருக்கின்றான். அப்படிப்பட்ட ஆத்மாவிற்கு ஜாதிபேதமில்லை. உலக வியவஹாரத்திற்காக ஜாதிபேதங் கள் கற்பிக்கப்பட்டதேயொழிய ஸத்தியமாய் ஜாதிபேதம் இல்லவே யில்லை. ஆதலால், நீ ஜாதிபேதமென்னும் வர் ணாச்சிரம தர்மங்களை விட்டுக் கர்மத்தை அனுஷ்டித்து வரக் கடவாய்.

சிஷ்யன்:—ஓ ஸத்குரு நாத! கர்மமென்றால் என்ன?

ஆசாரியர்:—கர்மமென்றால் ஓர் காரியம். அதாவது, கேட்பது பார்ப்பது வார்த்தையாடுவது முதலாகிய ஒவ் வொரு காரியங்களும் கர்மமென்று சொல்லப்படும். அந்தக் கர்மம், சாதாரண கர்மம், பாபகர்மம், ஸத்கர்மம் நிவர்த்தி கர்மம் என்று நான்கு விதங்களா யிருக்கின்றன. இவற்றில் சாதாரண கர்மம் எப்படிப் பட்டதென்றால்,

தஸேந்திரியங்கள் (பத்து இந்திரியங்கள்) செய்யப்பட்ட காரியங்களேயாம். அவை எவையென்ருல் செவிகள், அவற்றின் விஷயமாகிய ஸப்தங்களைக் கேட்கச்செய்யும். நேத்திரங்கள், அவற்றின் விஷயமாகிய ரூபங்களைப் பார்க்கச்செய்யும். நா, (நாக்கு) அதன் விஷயமாகிய ருசிகளை அறியச் செய்யும். மூக்கு அதன் விஷயமாகிய வாசனையை அறியச் செய்யும். வாய், வார்த்தையாடும். கைகள், கொடுக்கல் வாங்கல் முதலாகிய காரியங்களைச் செய்துகொண் டிருக்கும், பாதங்கள், நடப்பது நிற்பது முதலான காரியங்களைச் செய்துகொண் டிருக்கும். குஹ்யம், மூத்திரம்விடும், அன்றியும் ஸுக்கில சோணிதங்களை விட்டு ஆனந்திக்கும். குதம், மல விஸர்ஜ்ஜனை செய்விக்கும். துவகிந்திரியம், (தேஹ சர்மம்) ஸ்பர்ஸம் என்ருல், தொடுதலைக் கிரஹிக்கும்.

இந்தப் பத்து இந்திரியங்களும் செய்யும் காரியங்களையெல்லாம் ஆத்மா அஞ்ஞானத்துடன் மூடப்பட்டு, நான் செய்கின்றேன் என்று எண்ணிக்கொண்டிருக்கும். இவ்விதமாய் எண்ணி முன்சொல்லிய இந்திரியங்களால் செய்துவரும் காரியங்களெல்லாம் தேஹகர்மமென்றும், ஸாதாரண கர்மமென்றும் சொல்லப்படும். ஆனல்,

"இந்த்ரியாணும் ப்ரஸங்கேஸு தோஷம் ருச்சத்ய ஸம்ஸயம்
ஸந்நியம்யது தாந்யேவ ததஸ்ஸித்திம் நியஸ்ச்சதி"

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய் இந்திரியங்கள் அவ்வவற்றின் காரியங்களைச் செய்துகொண் டிருப்பதனல் அதாவது, மனம் ஸப்த விஷயங்களில் ஒடுவதனல் தோஷம் உண்டாகின்றது: அப்படி மனதை ஓடவிடாமல் நிறுத்தினல், மோக்ஷமென்னும் பதவியை அடைகின்றது. எப்படி என்ருல், இந்திரியங்கள் ஸப்தாதி விஷயங்களில் ஓடினல் அவ் விஷயங்களில் புருஷனுக்கு ஆசை உண்டாகின்றது.

அதாவது, பிடிப்பு உண்டாகும். அப்படி ஆசை உண்டாவதனுல் காமம் (இச்சை) உண்டாகும். காமம் உண்டாவதனுல் குரோதம் (கோபம்) உண்டாகும். அப்படி குரோதம் உண்டாவதனுல் மோஹம் அதாவது, காரியா காரியங்கள் தெரியாமல், தூஷிப்பதோ அடிப்பதோ கொல்லுவதோ முதலாகிய காரியங்கள், தெரியாமல் ஸ்மரணை தப்பிச்செய்து புத்தியைக் கெடுக்கக் கோபம் கொண்டுவந்து விடும். அப்போது புருஷன், ஸ்மரணைதப்பி இந்திரியங்களை ஜயிக்கவேண்டுமென்னும் ஞப்தியை மறந்துவிடுகின்ருன். இப்படி ஸ்மரணைத் தப்புவதனுல், புத்திக்கு ஆத்மஞானம் அடைய பங்கம் உண்டாகின்றது. அப்படி புத்திக்கு பங்கம் உண்டாவதனுல், புருஷன் ஸம்ஸாரமென்னும் சமுத்திரத்தில் முழ்கிப் போகின்ருன். ஆதலால்,

"இந்த்ரியாணுந்து ஸர்வேஷாம் யத்யேகம் க்ஷரதீந்த்ரியம்
தேநாஸ்ய க்ஷரதி ப்ரஜ்ஞா த்ருதேঃ பாதாதிவோதகம்"

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய் இந்திரியங்களில் ஏதாகிலும் ஓர் இந்திரியம் ஸ்வாதீன மாகாவிட்டால் (சிறிய துவாரமுள்ள குடத்தில் ஜலம் சிறுகச்சிறுக ஒழுகிப்போவதுபோல்) புத்தி கெட்டவனுக்கு ஞானம் சிறுகச்சிறுக தினேதினே குறைந்துவிடும். ஆதலால்,

"வஸே க்ருத்வேந்த்ரிய க்ராமம் ஸம்யம்ய ச மநஸ்ததா
ஸர்வாந் ஸம்ஸாதயே தர்மாந் ந க்ஷிண்வந் யோகதஸ்தநும்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய் மனதை, இந்திரியங்களின்வழியாய்ப் பதார்த்தங்களில் ஓடவிடாமல் நாளாவட்டத்தில் வசப்படுத்தி, தன் சரீரத்தைக் கஷ்டப்படுத்தாமல் ஞான நிஷ்டையை அப்பியாசம் செய்துவரவேண்டும். ஆனல்,

"ந ததைதாநி ஸக்யந்தே ஸந்நியந்து மஸேவயா
விஷயேஷு ப்ரஜுஷ்டாநி யதா ஜ்ஞாநேக நித்யஸ:."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய் விஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கும் இந்திரியங்களைத் திருப்பிக்கொள்ள எப்படிப்பட்டவனுக்கும் அஸாத்தியமே. ஞாந நுஷ்டானங்களினால் மனதை அடக்கினால் அதாவது, எவற்றிலும் நிராசையா யிருந்தால் இந்திரியங்களுக்கு விஷயங்களிலிருந்த ஆசை உண்டாகமாட்டா. இந்திரியங்களை விஷயங்களிலிருந்து பலாத்காரமாய்த் திருப்பிக்கொள்ளவேண்டுமென்று எண்ணினால், அந்த இந்திரியங்கள் தம் வசமாகாமல் அவற்றின் கார்யங்களையே செய்துகொண்டிருக்கும். அதாவது, ஸப்தாதி விஷயங்களில் இந்திரியங்கள் ஓடிக்கொண்டே யிருக்கும். ஆதலால், மனதை நிறுத்தாமல் இந்திரியங்களைப் பலாத்காரமாய் ஜயிப்பதற்குப் பிரயத்தினப் படுபவனை மூடனென்றே சொல்லலாம். இந்திரியங்களை அவ்வவற்றின் காரியங்களைச் செய்யவிடாமல் நிர்ப்பந்தப்படுத்தினால் ஸரீரம் நிற்கமாட்டா.

"ஸ்ருத்வா ஸ்ப்ருஷ்ட்வாச புக்த்வாச த்ருஷ்ட்வா
ஜ்ஞாத்வா ஸுபாஸுபம்
ந ஹ்ருஷ்யதி க்ளாயதி ய ஸ்ஸாந்த இதி கத்யதே."

"ஸ்ருத்வா ஸ்ப்ருஷ்ட்வாச த்ருஷ்ட்வாச புக்த்வா
க்ராத்வாச யோ நர: ந ஹ்ருஷ்யதி க்ளாயதிவா
ஸ விஜ்ஞேயோ ஜிதேந்த்ரிய:."

என்னும் மஹோபநிஷத், மநு ஸ்மிருதி வாக்கியங்களின் ரீதியாய் நேத்திரங்கள், ரூபங்களைப் பார்த்துக்கொண்டிருந்தபோதிலும், நா ருசி அறிந்தபோதிலும், மூக்கு வாசனைப் பார்த்துக்கொண் டிருந்தபோதிலும், வாய் வார்த்தை யாடிக்கொண் டிருந்தபோதிலும், கைகள் கொடுக்கல் வாங்கல் முதலான காரியங்களைச் செய்துகொண் டிருந்த

போதிலும், பாதங்கள் நடந்துகொண் டிருந்தபோதிலும் மர்மஸ்தானம் மூத்திரம் சுக்கிலம் விட்டுக்கொண் டிருந்த போதிலும், குதம் மல விசர்ஜ்ஜனே செய்துகொண் டிருந்த போதிலும் அவையவைத் தம்தம் கார்யங்களையே செய்து கொண் டிருக்கவேண்டும். அவ்வாறு செய்யவிடாமல் நிறுத் தினல், தேஹபாதை உண்டாகும். சரீரகர்மம் அல்லாமல், பாபகர்மம் புண்ணிய கர்மமென இரண்டு கர்மங்களுண்டு. அதாவது, ஜீவஹிம்சைசெய்வது, பொய்சொல்வது, திருடு வது, அஸத்யமாடுவது, தூஷிப்பது, அடிப்பது, மனம் நோகப்பேசுவது, மோசம் செய்வது, பர ஸ்திரீகளை மோஹிப்பது முதலானவைகள் வேதவிருத்தமான பாப கர்மங்களென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட பாப கர்மங்களைச்செய்து மரணமடைந்தவுடன்,

> "ஸரீரஜை: கர்மதோஷை ர்யாதி ஸ்தாவரதாம் வாசிகை:
> பக்ஷீ ம்ருகதாம் மாநஸை ரந்த்யஜாதிதாம்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், தேஹத்தினல் அஹங்காரத்துடன் செய்யும் பாப கர்மங்களுக்காக பூலோ கத்தில் ஸ்தாவரங்களாகிய, பர்வத விருக்ஷாதி ஜன்மங்கள் உண்டாகும். அஹங்காரத்துடன் வாக்கினல் சொல்லும் பாப கர்மங்களுக்காக, மிருக பக்ஷி ஜன்மங்கள் உண்டாகும். அஹங்காரத்துடன் மனதினல்செய்யும் பாப கர்மங்களுக் காக, மனுஷ்யர்களில் அதமஜாதியாகிய சண்டாளஜாதி உண்டாகும். ஆதலால், வேத விருத்தமாகிய பாப கர்மங் களைச்செய்ய கனவிலும் நினைக்கலாகாது. அதாவது, பாப களைச் செய்யவேண்டுமென்று மனதிலும் எண்ணலாகாது என்று அறியக்கடவாய்.

சிஷ்யன்:—ஸ்வாமீ! தேவரீர் வாக்கின்படி இனி பாப கர்மங்களைச் செய்வதில்லை; இதுவரையில் செய்துவந்த பாபகர்மங்கள் நசிப்பது எப்படி?

"க்ருத்வா பாபம் ஹி ஸந்தப்ய தஸ்மாத் பாபாத் ப்ரமுச்யதே
நைவம் குர்யாத் புநரிதி நிவ்ருத்யா பூயதேது ஸ:."

என்னும் மநுஸ்மிருதி வாக்கியரீதியாய், பச்சாத்தாபத்துடன் துக்கித்து, இனி நான் ஸத்தியமாய்ம் பாப கர்மங்களேச் செய்வதில்லே என்று பிரதிதினம் ஈஸ்வரனேத் துதி செய்து வருவாயாகில், இதுவரையில் நீ செய்துவந்த பாப கர்மங்கள் ஒழிவதுமே யல்லாமல், இனி பாப கர்மங்களேச் செய்ய எண்ணமும் உண்டாகமாட்டா.

"அகர்மேதிச கர்த்ருத்வ போக்த்ருத்வா த்யஹங்காரதயா பந்த ரூபம் ஜந்மாதிகாரணம் நித்ய நைமித்திக யாக வ்ரத தபோ தாநாதிஷு பலாபி ஸந்தாநம் யத்தத கர்ம."

என்னும் சுருதிரீதியாய், ஸ்நாந ஸௌச ஸந்தியாவந்தன ஸ்ரார்த்த தர்ப்பணுதி நித்திய நைமித்திக கர்மங்களும், அகர்மமென்று சொல்லப்படும். எப்படி யென்ருல், வேதோக்தமங்களாகிய நித்திய நைமித்திக காம்மிய கர்மங்களேப் பிரதிமனிதனும் பலாபேக்ஷையுடன் செய்வதனல் அவற்றின் பலனே அனுபவிப்பதற்காக, மறு ஜனனமெடுக்க வேண்டும். பலாபேக்ஷையுடன் செய்யும் கர்மங்கள், புண்ணிய கர்மங்களா யிருந்தபோதிலும், அவை புனர் ஜன்மங்களுக்குக் காரணமாயிருந்து, ஜீவனே பந்தத்தில் கட்டுப்படுத்துமேயொழிய, மோக்ஷ ஸாம்பிராஜ்ய பதவிக்குக் கொண்டுபோகமாட்டா. இதுவே அகர்ம மென்று சொல்லப்படும். அதாவது, பலாபேக்ஷையுடன் செய்யும் நித்திய நைமித்திக கர்மங்களும், யாக விரத தபோ தானுதி காம்ய கர்மங்கள் வேதோக்தமான புண்ணிய கர்மங்களா யிருந்தபோதிலும் அவைகள் மோக்ஷத்தைக் கொடுக்க மாட்டா.

"ஸுபாப்யுதயம் சைவ நைஸ்ரேய ஸிகமேவச
ப்ரவ்ருத்தஞ்ச நிவ்ருத்தஞ்ச த்விவிதம் கர்மவைதிகம்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், வேதோக்தமமான கர்மங்களில், பிரவர்த்தி கர்மமென்றும் நிவிருத்தி கர்ம மென்றும் இரண்டுவித கர்மங்களுண்டு. சுவர்க்க பதவி யடைந்து, அங்கு தேவபோகங்களை அனுபவிப்பது பிர வர்த்தி கர்மமென்று சொல்லப்படும். ஜனன மரணமென் னும் ஸமுத்திரத்தைத் தாண்டி, முக்திஅடைவது நிவிருத்தி கர்மமென்று சொல்லப்படும். அதாவது,

"இஹம்சா முத்ர வா காம்யம் ப்ரவ்ருத்தகர்ம கீர்த்யதே
நிஷ்காமம் ஜ்ஞாந பூர்வந்து நிவ்ருத்த முபதிஸ்யதே,"

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், தன தான்னிய தாரா புத்திராதி அஷ்ட ஐஸ்வர்யங்களும், அஷ்டபோகங் களும் பூலோக சுகங்களாதலால் பிரவர்த்தி கர்மமென்று சொல்லப்படும்.

சொர்க்கலோகத்திலுள்ள தேவபோகங்களில் இச்சை வைத்து செய்யும் நித்திய நைமித்திக தபோ விரத யாக தானாதி புண்ணிய கர்மங்கள் காமிய கர்மமா யிருப்பதால் இதுவும் பிரவர்த்தி கர்மமென்று சொல்லப்படும். பூலோக சுகங்களையும், தேவலோக சுகங்களையும் கோராமல் நிஷ்காம மாகிய அதாவது, ஸம்ஸார அபேக்ஷையில்லாமல் செய்யும் ஞானநிஷ்டை (பிரம்மநிஷ்டை) யிலிருப்பது நிவர்த்தி கர்மமென்று சொல்லப்படும்.

"ப்ரவ்ருத்திம் கர்ம ஸம்ஸேவ்ய தேவாநாமேதி ஸாம்யதாம்
நிவ்ருத்திம் ஸேவ்யமாநஸ்து பூதாநத்யேதி பஞ்சவை."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், காம்ய கர்மங்க ளாகிய பிரவர்த்தி கர்மங்களைச் செய்தவன், மரணமடைந்த வுடன் தேவலோகத்தில் பிறந்து, தேவபோகங்களை அனு

பவித்து, புண்ணியம் முடிந்தவுடன் "க்ஷீணே புண்யே மர்த்ய லோகே விஸந்தி" என்னும் கீதாசார்யர் வாக்கிய ரீதியாய் மறுபடியும் தன் பூர்வ ஜன்மங்களின் புண்ணியத்திற்குத் தக்கபடி, பூலோகத்திலுள்ள சக்கிரவர்த்திகளின் வீட்டிலோ அல்லது, பெருத்த செல்வமுடையவர்களின் வீட்டிலோ பிறப்பான். நிஷ்காமியாய், ஞான நிஷ்டனாய் நிவர்த்தி கர்மங்கள் செய்தவன் ஜனன மரணமென்னும் ஸமுத்திரத்தைத் தாண்டி ஸரீரம் வாராத விதேஹ முக்தியை அடைகின்றான். ஆதலால்,

"யதா பங்கேந பங்காம்ப: ஸுரயா வா ஸுராக்ருத:
பூதஹத்யாம் ததைவைகாம் ந யஜ்ஞைர் மார்ஷ்டு மர்ஹதி."

சேற்றைச் சேற்று ஜலத்தில் அலம்பினால் சேறு போகாமலிருப்பதுபோலவும், கள் குடத்தைக் கள்ளில் அலம்பினால் கள் நாற்றம் போகாமலிருப்பதுபோலவும், கர்மத்தினால் உண்டாகிய ஜன்மம், மறுபடியும் காமிய கர்மங்களாகிய பிரவர்த்தி கர்மானுஷ்டானங்களினால் நிவர்த்தியாகமாட்டா.

"யதோக்தாநபி கர்மாணி பரிஹாய த்விஜோத்தம:
ஆத்ம ஜ்ஞாநே ஸமேச ஸ்யாத் வேதாப்யாஸேச யத்நவாந்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், ஜன்மங்களுக்குக் காரணமாயிருக்கும் ஜப தப விரத யாக யஜ்ஞாதிகளையெல்லாம் விட்டு, வேதாந்த விசாரணைசெய்து, இந்திரியங்களை அடக்கி, "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்தில் உபதேசித்திருக்கும் ராஜயோகத்தை அறிந்து, ஸதா காலமும் ஞான நிஷ்டையில் இருக்கவேண்டும்.

"எதத்தி ஜந்ம சாபல்யம் ப்ராஹ்மணஸ்யம் விஸேஷத:
ப்ராப்யைதத் க்ருத க்ருத்யோபவதி நாந்யதா."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய் முன், சொல்

ஷிய வேதாந்த விசாரணை, இந்திரிய நிக்கிரஹம், ஞானானுஷ்டானம் இம்மூன்றும் இல்லாதவன் பிராமணனுய் ஜன்மித்த போதிலும் அவன் பிராமணனுகமாட்டான்.

"அநந்தகர்ம ஸௌசஞ்ச ஜபோ யஞ்ந ஸ்தைவச
தீர்த்தயாத்ராபி கமநப் யாவத் தத்வம் நவிந்ததி."

என்னும் பைங்கலோபநிஷத் வாக்கியரீதியாய், ஸ்நான சௌச ஜப தப தான யாக தீர்த்தயாத்திரை முதலானவைகள் காமிய கர்மங்களாதலால் அவைகளினுல் ஜனனமரணங்கள் வந்துகொண் டிருக்குமேயொழிய மோக்ஷம் உண்டாகமாட்டா. ஞானநிஷ்டை அறியாதவர்களே காமிய கர்மானுஷ்டானங்களைச் செய்துகொண் டிருப்பார்கள்,

"ஜீவஸ்ய தத்வஜிக்ஞாஸா நார்த்தோ யஸ்சேஹ கர்மபிః
அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸா" என்னும் சுருதிரீதியாயும்,
"நிவ்ருத்திம் கர்ம ஸேவேத ப்ரவ்ருத்திம் மத்பரம் த்யஜேத்
ஜிக்ஞாஸாயாம் ப்ரவ்ருத்தோ நாத்ரியேத் கர்ம ஸோத நாம்."

என்னும் பிரமாண வாக்கியரீதியாய், ஞானிகள் மோக்ஷத்திற்குச் சாதனமாகிய பிரம்மநிஷ்டை, வேதாந்த சிரவண மனனுதி நிவர்த்தி கர்மங்களையே செய்துகொண் டிருப்பார்கள்.

"பரமாத்மனோ ரேகத்வ ஜ்ஞாநேந தயோர்பேத ஏவ
விபக்நஸ் ஸா ஸந்த்யா."

என்னும் பரமஹம்ஸோபநிஷத் வாக்கியரீதியாய் ஞானிகளுக்கு, ஷிவ ஜீவர்கள் இருவரையும் ஒன்ருய்ச் சேர்ப்பதே அதாவது, ஜீவ ப்ரஹ்மைக்கியமாகிய பிரஹ்ம நிஷ்டையில் இருப்பதே, ஸந்தியாவந்தனமா யிருக்கின்றது.

"ஜ்ஞாத்வா ஸ்வம் ப்ரத்யகாத்மாநம் புத்தி தத்வ்ருத்தி ஸாக்ஷிணம்
ஸோஹமித்யேவ தத்வ்ருத்யா ஸ்வாந்ய த்ராத்ம மதிம் த்யஜேத்."

என்னும் அத்யாத்மோபநிஷத் வாக்கியரீதியாய் ஆத்

மாவே பரப் பிரம்மமென்று போதிக்கும் "ஸோஹம்" மந்திர தியானமே ஞானிகளுக்கு ஞானகாயத்திரியா யிருக்கின்றது. அப்படிப்பட்ட ஞானகாயத்திரியே, அஜபாகாயத்திரியென்று சொல்லப்படும்.

"ஸ்வ ஸ்வரூப விஜ்ஞாநாத் நாதிகம் தீர்த்தமுச்யதே தரதி
ஶோக மாத்மவித் ஜ்ஞாநமேவ பரமதீர்த்தம்."

எந்த ஞானத்தினால் ஜனன மரணமென்னும் சமுத்திரத்தைத் தாண்டி மோக்ஷமென்னும் கரை ஏறுகின்றார்களோ அந்த ஞானமே தீர்த்தமென்று சொல்லப்படுமே யொழிய, கங்காதீர்த்தம் ஞானிகளுக்குத் தீர்த்தமாக மாட்டா.

"அத்பிః காத்ராணி ஶுத்யந்தி மநஸ்ஸத்யேந ஶுத்தியதி
வித்யதபோப்யாம் பூதாத்மா புத்திர் ஜ்ஞாநேந ஶுத்யதி."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய் தேஹம் ஜலத்தினாலும், மனது ஸத்தியத்தினாலும், ஜீவாத்மா நிஷ்காம பிரஹ்ம நிஷ்டையினாலும், புத்தி யதார்த்த ஞானத்தினாலும் பரிசுத்தமாகும். உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் ஜலத்தினால் தேஹசுத்தி செய்து வந்த போதிலும் அவர்களின் மனது, ஜீவாத்மா, புத்தி என்பவைகள் மாத்திரம் சுத்தியாக மாட்டா.

"யஸ்ய வாங்மாநஸீ ஶுத்தே ஸம்யகுப்தேச ஸர்வதா ஸ
வைஸர்வமவாப்நோதி வேதாந்தோப கதம் பலம்"

என்னும் நாரத பரிவிராஜகோபநிஷத் வாக்கியரீதியாய் ஞானிகளுக்கு, ஞானதீர்த்த ஸ்நானத்தினால், வாக்கு மனது புத்தி ஜீவாத்மா என்னும் இந்நான்கும் பரிசுத்தமாவதனால் அவர்கள், லௌகிகமாகிய ஜல ஸ்நானத்தினால் உண்டாகும் தேஹ சுத்தியை முக்கியமாய்க் கவனியார்கள்.

"ஸர்வேஷாமபி தாநாநாம் ப்ரஹ்மதாநம் விஸிஷ்யதே
வார்யந்ந கோ மஹீ வாஸஸ்த் திலகாஞ்சந ஸர்பிஷாம்."

என்னும் மநு ஸ்மிருதி வாக்கியரீதியாய், ஞானிகளை ஆசிரயித்த சிஷ்யர்களுக்கு ஸதா பிரஹ்ம ஞானத்தை உபதேசித்துக்கொண் டிருப்பதே ஞானதானமென்று சொல்லப்படும். ஜலதான, அன்னதான, கோதான, பூதான, வஸ்திரதான, திலாதான, கன்னிகா முதலான தானங்களை விட ஞானதானமே சிரேஷ்டமா யிருப்பதனுல் ஞானிகள் எப்பொழுதும் ஞானதானமே செய்து வருவார்கள். ஆதலால்,

"யஜதே புருஷோ யஜமாநः புத்திம் பத்நீம் பரி க்ருஹ்ய தீக்ஷாம் ஸந்தோஷம் தீந்த்ரியாணி யஜ்ஞபாத்ராணி கர்மேந்த்ரியாண் யுபகரணுநி ஸத்ரே ஸாரீரகே தத்தத் தேவதா ஏவத் விஞ்ஜ ஸ்தடஸ்தா ஏவ யதாதேஸம் யஜமாநமநுயஜந்தே" "ஓ மித்யாத்மந மவ் யக்ரோ ப்ரஹ்மண் யக்நௌ ஜுஹோதியத் ஜ்ஞாநயஜ்ஞ ஸ்ஸ விஜ்ஞேய ஸ்ஸர்வ யஞ்ஞேத்த மோத்தமः ஜ்ஞாநதண்டா ஜ்ஞாந சிகா ஜ்ஞாந யஜ்ஞோபவீதிநः ஸிகா ஜ்ஞாநமயீ யஸ்ய உபவீதஞ்ச தந்மயம் ப்ராஹ்மண்யம் ஸகலம் தஸ்ய இதி வேதாநுஸாஸநம்".

என்னும் கர்ப்போபநிஷத் ஸாட்யாயநீய உபநிஷத் வாக்கியங்களின் ரீதியாய், தேஹமே யாகசாலையா யிருக்கின்றது. தேஹமென்னும் யாகசாலையில் ஞானேந்திரியங்களே யஜ்ஞ பாத்திரங்களாகவும், கர்மேந்திரியங்களே உபகரணங்களாகவும், சுக துக்கங்களைச் சமமாய் நினைத்துச் சந்தோஷப்படுவதே தீக்ஷையாகவும், அந்தந்த இந்திரியங்களின் தேவதைகளே ருத் விஜர்களாகவும், ஜீவனே யஜ்ஞம் செய்யும் யஜமானனுகவும், புத்தியே யஜ்ஞம் செய்யும் யஜமானுடைய பார்யாளாகவும், கோபமே யஜ்ஞ பசுவாகவும்

இருக்கின்றன. ஆதலால், "ஸோஹம்" என்னும் மந்திரத்தை ஜபம்செய்து பரப் பிரம்மமென்னும் யாகாக்கினியில், ஜீவ ஸ்வரூபியாகிய தன்னைச்சேர்த்து ஹோமம் செய்துவந்தால், தன் ஜீவ சொரூபம்கெட்டு தான் பிரம்ம சொரூபனாகின்றான். இப்படிப்பட்ட ஞான யஜ்ஞமே சகல யஜ்ஞங்களிலும் சிரேஷ்டமானது. இந்த ஞான யஜ்ஞம் ஞானதண்டம் ஞானசிகை (குடுமி) ஞான யஜ்ஞோபவீதம் (பூணூல்) எவனுக்குண்டோ அவனே வேதோக்தமான பிராமணனேயொழிய மற்றவர்கள் பிராமணர்களல்லர்.

"இந்த்ரியத்வார ஸங்க்ராஹ்யை கந்தாத்யை ராத்மதேவதாம்
ஸ்வயம் பக்த்வா ஸமாராத்ய ஜ்ஞாதும் ஸோயம் மஹாமக:"

என்னும் பிரமாணரீதியாய், இந்திரியங்களை ஜயித்து, பரப் பிரம்மமாகிய ஆத்மாவைக் கந்தாதிகளால் பூஜைசெய்வதே ஞானயாகமென்று சொல்லப்படும். காராடுகளாகிய வெள்ளாடுகளைக் கொன்று கர்மயாகம் செய்வது யாகமல்ல.

"ஜ்ஞானாம்ருத த்ருப்த யோகினோ ந கிஞ்சத்
கர்த்ருத்வமஸ்தி அஸ்திசேந்நஸ தத்வவித் பவதி"

என்னும் பைங்கலோபநிஷத் வாக்கியரீதியாய், தேவாமிருதத்தைச் சாப்பிட்டுத் திருப்தி அடைந்தவனுக்கு மற்ற எந்த மதுரமான பதார்த்தங்களும் ருசிக்காமலும், அவைகளைக் கோராமலும் இருப்பதுபோல், ஞானாமிருதத்தினால் திருப்தியடைந்த ஞானி, ஸர்வ ஸங்கல்பங்களையும் விட்டவனாதலால் அவன் பிரம்ம ருத்திரேந்திராதி பதவியின் சுகங்களையும், பூலோக போக சுகங்களையும் நினைக்கமாட்டான். அன்றியும், அப்படிப்பட்ட தேவலோக பூலோக சுகங்களை அனுபவிப்பதற்காக வேண்டிய யஜ்ஞ யாக தான தபோ விரதங்களையும் செய்யமாட்டான். இப்படிப்பட்ட

ஞானிகள் தவிர மற்றவர்க ளெல்லாம் யஜ்ஞ யாக தான தபோ விரதங்களை அவஸ்யமாய் அனுஷ்டித்து வரவேண்டும். ஏனென்றால்,

"ஸத்கர்ம பரிபாகதோ பஹூநாம் ஜந்மநா மந்தே
ந்ருணும் மோக்ஷேஸ்ச்சா ஜாயதே ததா ஸத்குரு மாஸ்ரித்ய
சிரகால ஸேவயா பந்தாந் மோக்ஷம் கஸ்சித் ப்ரயஸ்ச்சதி."

என்னும் பைங்கலோபநிஷத் வாக்கியரீதியாய், உலகத்திலுள்ளவர்கள் எல்லோரும் அனேக ஜன்மங்களாய்ப் பலாபேக்ஷையுடன் யஜ்ஞ யாக தான தபோ விரதங்களாகிய ஸத்கர்மங்களைச்செய்து அவற்றின் பலனை அனுபவிப்பதற்காகப் பிறந்துகொண்டும் இறந்துகொண்டுமாயிருப்பார்கள். இப்படி அனேக ஜன்மங்களாய்ப் பலாபேக்ஷையுடன் செய்துவந்த ஸத் கர்மத்தினுல் எதுவோ ஓர் ஜன்மத்தில் தாம் செய்யும் தான தர்மங்களெல்லாம் ஈஸ்வரன் கொடுக்கின்றாரென்றும், அப்படிப்பட்ட ஈஸ்வரனே சகலத்திற்கும் கர்த்தனென்றும் நிஸ்ச்சலபக்தி உண்டாகும்.

"தமேதம் வேதாநுவசநேந விவிதிஷந்தி ப்ரஹ்மசர்யேந தபஸா
ஸ்ரத்தயா யஜ்ஞேநாநாஸகேந"

என்னும் புருஹ தாரண்யோபநிஷத் வாக்கியரீதியாய், முன்சொல்லியதுபோல் ஈஸ்வரனிடத்தில் நிஸ்ச்சலபக்தி உண்டாவதனுல், மோக்ஷாபேக்ஷ உடையவர்களாய், தாம் செய்யும் ஜப தப தான தர்ம யஜ்ஞ யாகாதிகளை எல்லாம் பலாபேக்ஷ யில்லாமல் ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்து பக்தி அதிகரித்து, சித்த சலனமில்லாமல் ஈஸ்வரனிடத்தில் லயித்திருப்பார்கள். இப்படி லயித்தபிறகு,

"தண்டுலஸ்ய யதா சர்ம தாம்ரஸ்ய காளிமா
நஸ்யதி க்ரியயா விப்ர புருஷஸ்ய ததாமலம்"

"குர்வந்நேவேஹ கர்மாணி ஜீவிஷேத் ஸதம் ஸமாஃ
ஏவம் த்வயி நாந்யதே தோஸ்தி ந கர்மலிப்யதே நரே."

என்னும் மஹோபநிஷத் வாக்கியரீதியாயும், ஈஸாவாஸ்யோபநிஷத் வாக்கியரீதியாயும், மோக்ஷாபேக்ஷையுடைய முமுக்ஷுக்கள், ஈஸ்வரபக்தி அதிகரித்து பலாபேக்ஷையில்லாமல் ஈஸ்வரார்ப்பணமாய்ப் பிரவர்த்தி மார்க்கமாகிய ஸத்கர்மங்களைச் செய்துவருவார்கள். இப்படிச் செய்வதனால் சித்தசுத்தி உண்டாகும். சித்தசுத்தி உண்டாவதனால்,

ஈஸ்வராநுக்ரஹதேவ பும்ஸாமத்வைத வாஸநா."

என்பதுபோல் ஈஸ்வரானுக்கிரஹம் உண்டாகும். ஈஸ்வர அனுக்கிரஹம் உண்டாவதனால், ஞானனுஷ்டானம் செய்ய எண்ண முடையவர்களாய் ஞானசார்யரை ஆஸ்ரயித்து அவர்களின்மூலமாய் ஞான ஸாக்ஷாத்காரமடைந்து முக்தியை அடைவார்கள்.

"தேஹோயம் மாநுஷோ ஜந்தோஃ பஹுகர்மைக ஸாதநம்
ஸதா ஸத்கர்ம ஸேவேத துஷ்கர்ம்ம ஸததம் த்யஜேத்.

என்னும் சுலோகரீதியாய் பலாபேக்ஷையில்லாமல் செய்யும் ஸத்கர்மங்கள் ஈஸ்வர ' பிரீதியாகும். ஈஸ்வர பிரீதியினால் ஞானமுண்டாகும். ஆதலால், பலாபேக்ஷையை விட்டுச் செய்துவரும் கர்மங்களை ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்து வரவேண்டும்.

"அந்தம் தமஃ ப்ரவிஸந்தி ஏ ஸம்பூதி முபாஸதே ததோ பூய இவ ததோ பூய இவதே தமோ ய உ ஸம்பூத்யாம் ரதாஃ"

என்னும் ஈஸாவாஸ்யோபநிஷத் வாக்கியரீதியாய், பலாபேக்ஷையில்லாமல் ஸத்கர்மங்களை ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்யாதவர்களுக்கு ஞானம் உண்டாகமாட்டா. இப்படிப்பட்டவர்கள், மோக்ஷமென்னும் கரைகாணமல்

ஜனன மரணமென்னும் ஸமுத்திரத்தில் மூழ்கி ஸதா துக்கத்தையே அனுபவித்துக்கொண் டிருப்பார்கள். இது ஸத்தியம். ஆதலால் நீ,

"அஹம் ப்ரஹ்மேதி நிஸ்சித்ய அஹம்பாவம் பரித்யஜ ஸர்வ மேவ லயம் யாதி ஸுப்த்த ஹஸ்த்தஸ்த புஷ்பவத் ஸர்வ வ்யாபார முத்ஸ்ருஞ்ய அஹம் ப்ரஹ்மேதிபாவய அஹம் ப்ரஹ்ம ந ஸந்தேஹோ அஹம் ப்ரஹ்ம சிதாத்மகம் ஸச்சிதாநந்தமாத்ரோஹமிதி நிஸ்ச்சித்ய தத்த்யஜ."

என்னும் தேஜோபிந்தூபநிஷத் வாக்கியரீதியாய், தூங்கப் பட்டவனுடைய கையிலிருக்கும் வஸ்து எப்படி நழுவி விடுகின்றதோ அதுபோல், அஹங்கார மமகாரங்களை யெல்லாம் நழுவவிட்டு, "அஹம் ப்ரஹ்மாஸ்மி" என்னும் "ஸோஹம்" மந்திரம் "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்தரஹஸ்ய" த்தில் உபதேசித்திருக்கின்றது. அதை நன்ருய்த்தெரிந்து கொண்டு அதுபோல் அப்பியசித்து வருவாயாகில், உன் பாப கர்மங்களெல்லாம் "ஸோஹம்" மந்திர ஜபத்தினுல் பஸ்மமாய்விடும். இவ்வாறு அப்யசித்துக் கொண்டுவந்து,

"யத்பரம் விமலமத்வம் ஶிவம் தத் ஸதாஹமிதி மௌநமாஸ்ரய."

என்னும் சுருதிரீதியாய்ச் சகல எண்ணங்களையும் சூன்னியமாய்ச்செய்து அதாவது "ஸோஹம்" மந்திரத்தையும் மறந்து, சிலா விக்கிரஹம்போல் மௌனநிஷ்டையில் இருக்கக்கடவாய். இதுவரையில் உபதேசித்தவைகளை எல்லாம் நன்ருய் அறிந்து, தானங்களில் நிதானம் பெரிது, இரண்டாவது, அன்னதானம் பெரிது என்று கொள்ளல்வேண்டும். இவ்விரு தானங்களைவிட பூலோகத்தில் செய்யும் மற்ற தானங்கள் பெரிதானவையல்ல. இந்த அன்னதானமும் ஓர் யஜ்ஞத்தில் சேர்ந்தது. யஜ்ஞமென்ருல், அக்நிஷ்டோமாதி யஜ்ஞங்களேயல்ல; பிரதி புருஷனும் ஓர் இஷ்டதேவ

தையை † உபாசனமூர்த்தியாய் நினைத்து, தம்வீட்டில் சமைக்கும் அன்னம்(சாதம்) பதார்த்தங்களை யெல்லாம் தட்டில் இலைபோட்டு அவைகளைப் பரிமாரி, அந்த உபாசன மூர்த்தியாகிய பகவானுக்குத் தூபதீபங்களால் காட்டி ஆராதித்த பிறகு, அந்த சேஷமாகிய அன்னம் பதார்த்தங்களை ஒவ்வொரு குடும்பத்திலுள்ளவர்களும் சாப்பிட்டு வரவேண்டும். இது, பிராமணர்களே செய்யவேண்டுமென்று எண்ணவேண்டாம். சரியான ஞான பிராமணனுக்குச் ஜாதிபேதமே யில்லை. இதுவிஷயம் முன்சொல்லியிருக்கின்றோம். ஆதலால், தீண்டாதவர்கள் முதல், பிராமணுள்வரையில் உள்ள சகல ஜாதியாரும் மேற்சொல்லியது போல் தேவதா ஆராதனைச் செய்துவரலாம். இவ்வாறு ஆராதித்த பிறகு "தைவம் மாநுஷரூபேண" என்றிருக்கின்றது. ஆதலால், அதிதிகளுக்கும் பிக்ஷைக்கொடுத்துச் சாப்பிடவேண்டும்.

அப்படிக்கொடுத்துச் சாப்பிடுவதனால், தேவதா பிரீதியர்த்தமாய்ச் செய்யப்பட்ட யஜ்ஞங்களில் இது சேர்ந்ததென்று அறியக்கடவீர்களாக. இதன்றியும், சகல பூதங்களும் பகவத் சொரூபமே யாதலால், பிபீலிகாதி என்றால், கண்களுக்குக் காணப்படாத சிறிய புழு முதல் பிரமதேவன்வரையில் சகல ஜீவ ஜந்துக்களிலும் சாக்ஷாத் பரப்பிரம்மமே சாக்ஷிமாத்திரனாய் ஆத்ம சொரூபனாய் இருப்பதனால் தன் வீட்டைக் காத்துக்கொண்டிருக்கும் நாய் பூனை முதலாகிய ஜந்துக்களுக்கும் அன்னம் போடுவது, தேவதாப் பிரீதியர்த்தம் செய்யப்பட்ட யஜ்ஞத்திலேயே சேர்ந்ததாகின்றது. தீண்டாதவர்கள் முதல் எந்த ஜாதியாரா யிருந்தபோதிலும் அவர்களின் சக்தியானுசாரமாய் இப்படிச்செய்ய சாத்திய மானதேயன்றி அசாத்தியமான

† உபாசனாமூர்த்தி = மோக்ஷத்திற்கு வழிகாட்டும் கடவுள்.

தல்ல. இப்படிச் செய்வதனுல் பகவானுக்குப் பிரீதியுண்டா கின்றது. எப்பொழுது பகவானுக்குப் பிரீதியுண்டா கின்றதோ அப்போதே அவனுடைய பாப கர்மங்களெல் லாம் பரிஹாரமாகின்றன. (நசிக்கின்றன); அப்படிச் செய்யாதவனுக்கோ என்ருல், சமைத்த பதார்த்தங்களைப் பகவானுக்கு ஆராதிக்காமலும், தன் சக்தியானுசாரம் அதிதிகளுக்குப் போடாமலும், தன் வீட்டைக் காத்துக் கொண்டிருக்கும் பூனை நாய்களுக்கும் போடாமலும் எவனொருவன் தன் குடும்பம்வரையில் உபயோகித்துக் கொள்ளுகின்ருனே அப்படிப்பட்டவன் பாபியென்றே சொல்லலாமென்று பஞ்ச யஜ்ஞத்தில் சொல்லப்பட் டிருக் கின்றது. ஆதலால்,

ஒவ்வொரு குடும்பத்திலும், பூனை நாய்கள் வருவ துண்டு. மேற்சொன்னவைகளை அறியாத்தன்மையினுல், அவைகளுக்குச் சாதம் போடாமல் அடித்துத் துறத்து வார்கள். ஆதலால், இந்நூலை வாசிக்கும் சகோதர சகோ தரிக ளெல்லோரும், பூனை நாய் காகம் முதலான ஜீவ ஜந் துக்களுக்கும் பிரதிதினம் இரண்டுவேளைகளிலும் சாதம் வைத்து வரவேண்டும்.

எல்லா தானங்களிலும் அன்னதானமே பெரிதென்று முன் சொல்லியிருக்கின்ருேம். நமது நிழல் நம்முடன்கூட வருவதுபோல், இத்தர்மம் ஒன்றே நமக்குமுன் சென்று மறுஜன்மத்தில் நம்மை, காக்கத்தக்கது. நம்முடன்கூட வரப்பட்டது இத்தர்மம்தவிர வேறொன்றில்லை, ஆதலால் அடியில் சொல்லப்போகும் சிறுவன்செய்த அன்னதானம் போன்ற தானத்தை ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களும் செய்துவரவேண்டும். இனி அன்னதானத் தின் மஹிமையை இதனடியில் சொல்லுகின்ருேம்.

ஸ்ரீ க்ருஷ்ண பர ப்ரஹ்மணே நமஃ.

அன்னதான பலன்.

ஓ ஸஹோதரிகளே! ஓ ஸஹோதரர்களே!!

அன்னதான பலனைக் குறித்து இதனடியில் விவரித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

புத்திர மித்திர களத்திர பசு தன தான்யாதி முதலாகிய ஸம்பத்துகள் நித்தியமானவைகளல்ல. நாம் செல்லும்போது இவைகள் யாவும் நம்முடன்கூட வரப்பட்டனவல்ல. தர்மம் ஒன்றே பரலோகசாதனம். தர்மத்தை விட மனிதர்களுக்கு ஸஹாயகாரி வேறொன்றுமில்லை. நமது நிழல் நம்முடன்கூட வருவதுபோல், நாம் செய்யும் தர்மம் ஒன்றே நம்முடன்கூட வரப்பட்டது. ஆதலால், விவேகியானவன் எப்பொழுதும் தேஹாதிப் பிரபஞ்சத்தில் கொஞ்சமேனும் அபிமானம் வைக்காமல் அன்னதான தர்மத்தில் ஆசையுடையவனாய் இருக்கவேண்டும். நியாயமார்க்கத்தில் தனத்தைச் சம்பாதித்து, சம்பாதித்த தனத்தை ஸத்பாத்திர விநியோகம்செய்து தானும் அனுபவிக்கவேண்டும். பரலோகசாதனமாகிய, கோதான பூதான ஹிரண்யதான வஸ்த்திரதான முதலாகிய தானங்கள் அநேகமுண்டு. அவைகளெல்லாம் அன்னதானத்திற்குச் சமான

மாகமாட்டா. பகவத் பக்தர்களுக்கு ஒருவேளை அன்னம் கொடுத்தால் அது, பரமபதத்திற்கு ஏணியைப்போன்ற படியா யிருக்குமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். பசியுடையவர்களுக்கு அன்னமிட்டுப் பசியைத் தணித்துச் சந்தோஷப் படுத்துவதைவிட அதிகமாகிய தர்மம் வேறொன்றுமில்லை. 'அந்நம் பர ப்ரஹ்ம ஸ்வரூப' மென்று, தேவதைகள் முனிவர்கள் முதலானவர்களும் எப்பொழுதும் ஸ்துதி செய்வார்கள். யஜ்ஞ யாகாதிகள் முதலாகிய உலக வியவஹாரங்களெல்லாம் அன்னத்தினாலேயே நடக்கின்றன. அன்னமில்லாவிடில் உலக தந்திரமெல்லாம் நசித்துவிடும். உலகத்திற்கெல்லாம் அன்னமே பிராணதாரம். ஆதலால், தனக்கில்லையென்று சிந்தனை செய்யாமல் பசியாய்வந்த அதிதிகளை அவஸ்யமாய் ஆதரிக்கவேண்டும். தரித்திரர்கள் விருத்தர்கள் தபஸ்விகள் குரூபிகள் வித்தியாஹீனர்கள் (வித்தையில்லாதவர்கள்) முதலானவர்களைத் திரஸ்காரம்செய்வது பாபமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். பசியாய்வந்த அதிதிகளை அன்புடன் அழைத்து ஆதரிக்காமல் சாப்பிடும் அன்னம் ஆபோஸனம், மத்யபானத்திற்குச் சமானமென்றும், கோ(பசு)மாம்ஸ பக்ஷணைக்குச் சமானமென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சண்டாளனானாலும் இனி எவனானாலும் பசியாய்வந்தபோது அன்னமிட்டு ஆதரிப்பது மஹா புண்யமென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. பசியாய் வந்தவர்களின் குலகோத்திரங்களை விஜாரிக்கவேண்டிய அவஸ்யமில்லை. அவர்களின் ஜடராக்கினியைத் தணிக்கச்செய்து அனுப்புவதே முக்கியமானது. பிரமதேவன் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தபோது "அந்ந மம்ருதம்" என்று விதித்திருப்பதால் அன்னமில்லாவிடில், எப்படிப்பட்ட பலசாலியா யிருந்தபோதிலும்

பலம் துர்ப்பலமாய்விடும். நாடிகளின் அபிவிருத்தி நிமித்தமாய் ஜனங்க ளெல்லோரும் அன்னத்தையே இச்சிக்கின்ருர்கள். பூர்வம் பாரத யுத்தத்தில் அர்ஜுன னுடைய பாணத்தினுல் ஆயாசப்பட்ட கர்னன் ரதத்தின் மீது சாய்ந்திருக்கும்போது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கர்ணருடைய தர்மங்களையெல்லாம் கிரஹிக்க எண்ணினவராய்ப் பிராமண வேஷத்துடன் அவரிடம்சென்று ஆசீர்வாதம் செய்தார். அப்படிப்பட்ட ஆபத் ஸமயத்திலும் கர்னன் ஸாந்த சித்தமுடையவனுய் அந்தக் கபட பிராமணரை நமஸ்கரித்து "தங்களுக்கு என்னவேண்டும்?" என்று கேட்டனர். அதற்கு அந்தக் கபடபிராமணர் "நீசெய்த தர்மங்களையெல்லாம் எனக்குத் தாரைவார்க்க வேண்டும் என்று" கேட்டனர். "தங்களிஷ்டம்போல் நான் செய்த தர்மங்களையெல்லாம் தாரைவார்க்கின்றேன். ஆனுல் இப்போது எனக்கு மிகவும் தாஹமா யிருக்கின்றது. ஆதலால், தாஹத்திற்கு ஜலம் கொண்டுவந்து தரவேண்டும் என்று கர்னன் வேண்டிக்கொண்டார். அதன் பிறகு அந்தக் கபட பிராமணர் நல்லதென்று கர்னன்கையில் ஜலம் விட்டனர். விட்டவுடனே அது சொர்ணமா (தங்கமா) யிருக்க கர்னன் அதிசயப்பட்டு, "ஸ்வாமீ! தாங்கள் என்கையில் விட்டஜலம் எதனுலேயோ தங்கமாய்விட்டது. இதற்கென் செய்வேன்" என்றுகேட்க, அதற்கு அந்தப் பிராமணர் "நீசெய்ததெல்லாம் தங்கதானமே யாதலால் நீ தொட்டதெல்லாம் தங்கமாகின்றன. இதுவரையில் நீ எப்பொழுதாகிலும் அன்னதானம் செய்ததில்லையா?" என்று கேட்டனர். அதைக்கேட்ட கர்னன் "நான் எப்பொழுதும் அன்னதானம் செய்ததில்லை. ஆனுல் ஒரு சமயம் ஓர் பிராமணன் வந்து என்னை அன்னம் கேட்டபோது, தர்மராஜா பிராமண சந்தர்ப்பணைச் செய்கின்

ளுர், அவ்விடத்திற்குப் போவென்று என்விரலால் காட்டினேன்'' என்று சொன்னுர். அதன் பிறகு கிருஷ்ண மூர்த்தி, "அன்னமிடாவிடினும் அன்னமிடும் இடத்தை விரலால் காட்டினபடியால், அன்னதானப்லன் உனக்கு உண்டாயிற்றென்று சொல்லி, நீ காட்டிய விரலை வாயில் வைத்துச் சப்பினல் தாஹம் தணியு" மென்று சொல்லினர். அவர் அதுபோல் செய்து தாஹம் தணிந்து, ஸாந்த சித்தனுய் தன் தர்மத்தையெல்லாம் அந்தப் பிராமணனுக்குத் தாரைவார்த்துக் கிருதார்த்தனுனுர். ஆதலால், அன்னதானத்திற்குச் சமானம் எந்த தானங்களும் இல்லை. இது கிருஹஸ்தர்கள் முக்கியமாய் அனுஷ்டிக்கவேண்டிய தர்மம். தர்மராஜா பிராமண சந்தர்ப்பணைச் செய்ததாய் கர்ணன் இதுவரையில் சொல்லியிருக்கின்றுரல்லவா? அதன் விவரத்தை ஸ்ரீ கிருஷ்ணுர்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்தியாயம், 4-சு 39-ல், சொல்லியிருக்கின்றேும். கேளுங்கள்.

"ஸ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம் தத்பரஸ்ஸம்யதேந்த்ரியஃ
ஜ்ஞாநம் லப்த்வா பராம் ஸாந்தி மசிரேண அதிகச்சதி."

ஓ அர்ஜுநா! நான் இதுவரையில் (அ,4, சு.38-ல்,) சொல்லியவைகளெல்லாம் சரியாய்த் தெரியவந்த தல்லவா?

அர்ஜுநன்:—ஆம், சரியாய்த் தெரியவந்தது.

கிருஷ்ணன் :—ஞானமடைய ஆசை யுடையவன் அதற்காக ஆஸ்ரயிக்கப்பட்ட ஸத்குருவிடத்தில், பக்தி ஸ்ரத்தை யுடையவனுய் ததேகநிஷ்டனுய் இந்திரிய நிக்கிரஹ முடையவனுய் எவன் இருக்கின்றுனே, அப்படிப்பட்டவனுக்கே ஞானம் சித்திக்குமேயொழிய இதரர்களுக்குச் சித்திக்கமாட்டா. அப்படி ஞானமடையும் வரையில் கஷ்டமேயொழிய, அடைந்தபிறகு பிரயாசையில்லாமலே சித்தஸாந்தி உண்டாகின்றது. இதற்குத் திருஷ

5

டாந்தமாய் நமக்கு அனுபவமான விஷயும் ஒன்றுண்டு; அதைச் சொல்லுகின்றேன்கேள். பூர்வத்தில் உன்னுடைய தமையனான தர்மபுத்திரர்,நாரதர் வசனத்தினால் ராஜஸூய யாகம் செய்யும்பொழுது ஓர் அற்புதமான விஷயம் ஒன்று நடந்தது. அது யாதெனில், பிரம்மசாரியும் கேவல வைராக்கிய சீலனுமாகிய ஓர் பிராமணன் சத்குருவை ஆஸ்ர யித்து அவருடைய அனுக்கிரஹத்தால் உபதேசம் பெற்று அதன் மூலமாய்க் கடைத் தேறவேண்டுமென்று நிஸ்சய புத்தி யுடையவனாய் அந்தக் குருவை ஆஸ்ரயித்து அவருக்கு அதிக சிரத்தை பக்தியுடன் ஷிஸ்ரூஷை செய்துகொண்டு அநேககாலம் அவரைக் காத்துக்கொண் டிருந்தான். ஒரு நாள் குரு, சிஷ்யர்களிருவரும் ஒரு கானகத்தின் (காட்டின்) வழியாய்ச் செல்லும்போது குருவிற்கு அகஸ்மாத்தாய் அவஸான (மரண) காலம் நேர்ந்து மிகவும் தாஹமுடையவ னாய் நடக்கச் சக்தியற்று ஓர் விருக்ஷத்தினடியில் படுத்துக் கொண்டு தாஹத்திற்கு ஜலம். கொண்டுவரும்படி சிஷ்ய னுக்கு ஆஞ்ஞாபித்தான். சிஷ்யன் சமீபத்தில் ஜலமில்லாத தால் பஹுதூரம் போகவேண்டியதாய் நேர்ந்ததில் கொஞ்சம் தவக்கப்பட்டது. இதற்குள் இவ்விடத்தில் அந் தக் குருவிற்குப் பிராண பிரயாணகாலம் சமீபித்து விட்ட படியால் பிராணனை விடும்போது தன் சிஷ்யனை நினைத்து அவன், தனக்கு இதுகாலமாய்ப் பக்தி சிரத்தையுடன் தன்னை ஆஸ்ரயித்தவனா யிருந்தவனாதலால், அவனை வியர்த் தப் படுத்தலாகாதென்று எண்ணினவனாய் அவனுக்கு உப தேசம் செய்ய நினைத்திருந்த வாக்கியத்தைப் பூமியின் மீது விரலா லெழுதித் தன் சமீபமாய்க் கழுதைகளை மேய்த்துக் கொண்டிருந்த ஓர் தொம்பரச்சிக்குக் காட்டித் தன் சிஷ்யன் வந்தவுடன் அவனுக்கு இதைக் காட்டவேண்டுமென்று சொல்லிவிட்டுப் பிரர்ணனை விட்டுவிட்டான். அதன்

பிறகு தொம்பரச்சி, தரையிலெழுதிய அவ்வெழுத்துக்கள் காற்றால் கலைந்துவிடுமென்று நினைத்தவளாய் அதை ஓர் முள்ளினால் ஓலையில் அந்த லிகிதத்தைப்போல் எழுதிக் கொண்டு ஷை அக்ஷரங்களையெல்லாம் துடைத்துவிட்டு ஓலையைச் சுருளையாக்கித் தனது காதில் தரித்துக்கொண் டாள். சிஷ்யன் ஜலங்கொண்டுவந்து மரணமடைந்த தன் குருவைப்பார்த்து மிகவும் துக்காக் கிராந்தனாய்ச் சோகித்து, அதுவரையில் நடந்த விருத்தாந்தங்களை யெல் லாம் அந்தத் தொம்பரச்சியால் அறிந்தவனாய் அவளுடைய காதணியாயிருந்த அவ்வோலையைக் கொடுக்கும்படி அதிக ஆத்திரத்துடன் அவளைக்கேட்டான். அப்படிப்பட்ட அவனது ஆத்திரத்தைப்பார்த்து அந்தத் தொம்பரச்சி யானவள் அவனைச் சிலகாலம் தன்னிடத்தில் சேவை செய் விக்க வேண்டுமென்று நினைத்து அவ்வோலையை அவனுக் குக் கொடாமல் காலத்தைக் கழித்துக்கொண்டு வந்தாள். அவனும் அவளது கழுதைகளை மேய்த்துக்கொண்டு வந்தான். அவளது அனுக்கிரஹத்தால் குருவாக்கிய லிகிதமாகிய காதணியை அடையவேண்டுமென்று நினைத் துத் தன் குருவை எப்படி பக்தி சிரத்தையுடன் ஆஸ்பிரத் துக் கொண்டிருந்தானோ அதுபோல் அவளை ஆஸ்ரயித்து அவளிட்ட வேலைகளையெல்லாம் செய்துகொண்டு தனக்குத் தீர்ந்தபோது கிராமத்திற்குள் சென்று பிராமண அக்கிரா ரத்தில் பிக்ஷவாங்கிப் புஜித்து, மற்றக் காலங்களெல்லாம் அவளையே ஆஸ்ரயித்துக்கொண்டு அவள் எங்குச் சென்ற போதிலும் உடன்சென்று அவளைச் சேவித்துக்கொண்டு காதிலிருக்கும் ஓலையைக் குறியாகவேபார்த்துக்கொண்டும் அவளுடன்கூடவே திரிந்துகொண்டும் இருந்தான். இப்படி யாய் அநேககாலம் சென்றபிறகு ஒருநாள், தொம்பரக் கூட்டமெல்லாம் தர்மபுத்திரர் செய்யும் ராஜஸூய யாக

சாலைக்குச் சமீபத்தில் கூடாரம் போட்டு இறங்கினார்கள். அவ்விடத்தில் இந்தப் பிராமணன் அந்தத் தொம்பரச்சி ஆஜ்ஞானுசாரமாய்க் கழுதைகளை மேய்த்துக்கொண் டிருக்கும்போது க்ஷுத்பாதை (பசி) யினால் மிக வருந்தினவனாய் அதன் சமீபமா இருக்கும் யாகசாலைச் சம்பந்தமாகிய மடப்பள்ளியிலிருந்து ஓடிக்கொண்டிருக்கும் சாதம்வடித்த கஞ்சிநீரில் நான்கு கையெடுத்து உட்கொண்டான். அப்பொழுது யஜ்ஞசாலையில் லக்ஷ பிராமண சந்தர்ப்பணைக்கு ஒருவிசை தனக்குத்தானாய் அடிக்க ஏற்படுத்திக் கட்டியிருக்கும் மாயா மணியானது ஓயாமல் அடிக்க முயன்றது. அதைக்கேட்ட உனது தமையனாராகிய தர்மபுத்திரர் இத்தனைலக்ஷ பிராமணர்களுக்கு ஏககாலத்தில் எப்படிச் சந்தர்ப்பணை ஆயிற்றென்று ஆச்சர்யப்பட்டுக்கொண் டிருந்தார். நான் அதனுடைய நிஜ ஸ்திதி அறிந்தவனாதலால், அது விஷயத்தைக்குறித்து நிதானமாய் விசாரிக்கலாமென்று அவருக்கு அப்போது சமாதானம் சொல்லி, பிறகு அந்தத் தொம்பரச்சியைக் கழையின்மீது ஆடச்செய்து வேடிக்கைப் பார்க்கும்படி தர்மபுத்திரரை ப்ரேரேபணை செய்வித்தேன். அவரும் அப்படியே அந்தத் தொம்பரச்சியைக் கழையின்மீது ஆடும்படி உத்திரவுசெய்தார். அவளும் மிக உச்சாஹத்துடன் தன் சாமர்த்தியங்களையெல்லாம் அந்த சபையாருக்குக்காட்டி ஆடிக்கொண்டிருக்கும் சமயத்தில், அவளுக்குப் பரிசளிப்பதாகக் கொண்டு வந்த ரத்தினமிழைத்த கம்மலைக்காட்டி இதை மேலே உயர்த்தி வீசுகிறோம், கழையின்மீது ஆடிக்கொண்டே இந்தக் காதணியைக் கைகளால் பிடித்துக் காதில் போட்டுக்கொள்ள வேண்டுமென்று அவளுக்கு ஆஞ்ஞாபித்தார்கள். அவள் அதுபோல் ஏந்திக்கொண்டு, தன்காதில் அதுவரையில் தரித்திருந்த ஓலைகம்மலைக் கழற்றிக் கீழே எறிந்து

விட்டு அந்த ரத்நிநக்கம்மலேத் தரித்துக்கொண்டாள். ஓலேக் கம்மல் கீழேன் விழுந்தவுடன் அதற்காகக் காத்திருக்கும் பிராமணோத்தமன் எடுத்துக்கொண்டு போய்விட்டான். இந்த விஷயம் நான் தவிர மற்றெவரும் கவனித்தவர்க ளல்லர். அதன் பிறகு மறுநாள் உதயத்தில் நான் தர்மபுத்திரரை ஏதோ ஒரு விஷயமாய் என்னுடன்கூட அழைத்துக்கொண்டு பாதசாரியாய்ச் சமீபத்திலிருக்கும் நதிதீரத்தில் கேளி விலாசமாய்த் திரிந் திருக்கும்போது, பிராமணன், தன் குரு உபதேசம் செய்த வாக்கியம் எழுதப் பட்டிருந்த ஓலேக்கம்மலே அவிழ்த்துக் கையில் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதை நாங்களிருவரும் பார்த்து அவனருகிற்சென்று எச்சரிக்கைச்செய்து பார்த்தபோது அவன் நிர்ஜீவனு யிருந்தான். அதைப்பார்த்து உமது தமையனுர் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்க, அப்பொழுது நான் பிராமணனுடைய ஸவிஸ்தாரங்களே யெல்லாம் சொல்லி, இந்தப் பிராமணனே நேற்றையதினம் யஜ்ஞசாலே யின் சமீபத்தில் ஓடிக்கொண்டிருக்கும் கஞ்சியை நான்கு கை சாப்பிட்டான். அவன் சாப்பிட்ட கஞ்சியில் எத்தனே துளி பிந்துக்க ளிருந்தனவோ அத்தனே லக்ஷ பிராமணர் களுக்குச் சந்தர்ப்பணே செய்ததற்குச் சமானமாயிற்று, அதனுல் அந்த மாயாமணி ஓயாமல் அத்தனே விசைகள் அடித்ததென்றும், அந்தப் பிராமணனுக்கு இப்படிப்பட்ட மஹாத்ம்யம் குருவினிடத்தில் உண்டாயிருந்த பக்தியினு லென்றும், அந்தக் குரூபதேச வாக்கியம் லபிக்கச்செய்து கொள்ள அதினுலுண்டாகிய சிரத்தையினுல் இவ்வாறு உண்டாயிற்றென்றும், அப்படிப்பட்ட சிரத்தையினுல் அவனுக்கு குரு வாக்கியம் லபித்தவுடனே அவனிடத்திலுள்ள ஆத்மா கிளம்பி பரமாத்மாவில் ஐக்கியமாயிற்றென்றும் தெரியச்சொன்னேன். அதன்பிறகு தர்மபுத்திரர் அந்தக்

களேபரத்தைச் சமாதி செய்வித்து, அதற்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்தார். ஆதலால், ஓ அர்ஜுனா இதனால் என்ன ஏற்படுகின்றதென்றால், சிஷ்யனுக்கு குருவினிடத்தில் இருக்கவேண்டிய பக்தி இப்படிப்பட்டதென்றும், அந்தக் குருபதேசத்தைஅடைவதற்காக இருக்கவேண்டிய சிரத்தை இப்படிப்பட்டதென்றும், அப்படிப்பட்ட சிரத்தையினால் உண்டாகும் நிஸ்ச்சயஞான மிப்படிப்பட்டதென்றும், அப்படிப்பட்ட ஞானத்தினால் உண்டாகும் அவசானம் (மரணம்) இப்படிப்பட்டதென்றும் அறியக்கடவாய். இதற்குப் பின்விஷயங்களை ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத் கீதையில் விரிவாய்க் காணலாம். மற்றொரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

பூர்வம் ஹிமவத் பர்வதத்திற்குச் சமீபத்திலிருக்கும் ஓர் குக்கிராமத்தில் பிராமண வைதவ்ய ஸ்திரீ ஒருத்தியிருந்தாள். இவள் பிரதிதினம் அக்ஷய பாத்திரத்திற்குச் சென்று அமுதுபடி கொண்டுவந்து அவைகளில் பாதி விற்பனைசெய்து ஸாமக்கிரியைகளை வாங்கிக்கொண்டுவந்து மற்றப்பாதி அமுதுபடியெல்லாம் சமைத்து, பிராமணர்களுக்குப் பிக்ஷைதந்து மிகுதியான பிரசாதத்தைத் தானும் தனது புத்திரனும் புஜிப்பது வழக்கம். இப்படி அநேக நாள் நடந்துகொண்டு வந்தன. ஒருநாள், குமாரன் தாயைப்பார்த்து, அம்மா நீர் பிரதிதினம் பிக்ஷையெடுத்துக்கொண்டுவரும் அமுதுபடியில் சிறிதேனும் நிறுத்தாமல் எல்லாவற்றையும் சமைத்துப் பிராமணனுக்கு அன்னமிடுகின்றாயல்லவா? எப்பொழுதாகிலும் உனக்கு வியாதி சம்பவித்தால் அப்பொழுது வெளியில்சென்று அமுதுபடி கொண்டுவர மிகவும் கஷ்டமாயிருக்குமல்லவா? அப்பொழுது பிராமணனுக்கு பிக்ஷை எப்படிக்கொடுப்பாய்,

நாம் எப்படி ஜீவிப்பது? ஆதலால், இன்றுமுதல் பிராமண பிக்ஷையை நிறுத்தி, மிகுதியாகும் அமுதுபடியைச் சேகரித்துக்கொண்டு வருவாயாகவென்று சொன்னான். அதைக்கேட்ட தாயானவள் புன்னகையுடன் (சிரித்து) அப்பா குமாரா! என்ன கஷ்டம் வந்தபோதிலும் அக்ஷய பாத்திரமாகிலும் கொண்டுவந்து பிரதிதினம் பிராமணளுக்கு பிக்ஷதந்து, பிறகு நீங்கள் புஜிக்கவேண்டும். இப்படிப் புஜிப்பதனல் விசேஷ புண்ணிய முண்டாகுமென்று உனது தகப்பனர் சொல்லிவிட்டுப் பிராணனை விட்டார். ஆதலால், அதுமுதல் இதுவரையில் நடந்து வருவதை நிறுத்திவிட வேண்டுமென்று நீ சொல்வது சரியான வார்த்தையன்று. நாம் செய்யும் சத்கர்மங்களையெல்லாம் ஈஸ்வரார்ப்பணமாய், பரிசுத்தமனதுடன் செய்து வந்தால் நமக்கு யாதொருபிணியும் வரமாட்டா. இருதயத்தில் காமக் குரோதாதி மலினமுடையவர்களுக்கே வியாதி ஸம்பவிக்குமே யல்லாமல் நமக்கு எப்பொழுதும் சம்பவிக்கமாட்டா. ஆதலால், நீ இப்படிப்பட்ட குரோத மனமுடையவனுய் எப்பொழுதும் இராதே என்று தாயானவள் உபதேசித்தாள். இவைகளை யெல்லாம் கேட்ட குமாரன் தாயை நோக்கி, அம்மா! நீர்சொல்லிய வார்த்தைகளெல்லாம் சரியானவைகளே. நான் குரோத மனதுடன் கேட்டவனல்லன். பஞ்ச பூதங்களினுல் உண்டாகிய மானிட சரீரம் எப்பொழுது வந்ததோ அப்பொழுதே சுக துக்கங்களும் வியாதிகளும் வருவது சுபாவமல்லவா ? அதனுல், யான் அவ்வாறு கேட்க நேரிட்டது. ஆனுல், அம்மா! நீர் இப்பொழுது செய்துவரும் அன்னதானத்தினுல் என்ன பலன் உண்டாகுமோ அதைச் சொல்லக் கடவாய், என்று குமாரன் தாயைக் கேட்டான். இதைக் கேட்ட தாயானவள், அப்பா குமாரா ! இதன் பலன் எனக்குத் தெரியவர

மாட்டா. வனத்தில் வசிக்கும் யோகீஸ்வரர் களுக்கும், முனிவர்களுக்குமே இதன் மூலம் விவரமாய்த் தெரிய வருமே யல்லாமல் கிராமத்தி லிருக்கும் என்னைப்போன்ற பாமர ஜனங்களுக்குத் தெரியவர மாட்டாதென்று தாய் சொன்னாள். அதைக் கேட்ட குமாரன், ஆனால் அம்மா! நான் கானகத்திற்குச் சென்று மஹான்களைக் கண்டு தரிசித்து அன்னதான பலனைத் தெரிந்துகொண்டு வருகின்றேன். ஆதலால், கானகம்செல்ல விடைகொடுக்கக்கடவாய் என்று கேட்டான். இதைக்கேட்ட தாயனவள், அப்பா நாயனு! நீயோ மிகவும் சிறியவன். அன்னபானுதிக ளில்லாமல் கானகம் சென்று மஹான்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்ட சாத்தியமா யிருக்கும். ஆதலால், நீ செல்ல வேண்டாமென்று சொன்னாள். அதைக் கேட்ட குமாரன், இல்லையில்லை, எப்படியாகிலும் கஷ்டத்துடன் சென்று மஹான்களைத் தரிசித்து, இதன் மூலத்தைத் தெரிந்துகொண்டு வருவேனே யல்லாமல் சும்மாய் வரமாட்டேன். ஆதலால், தடை சொல்லாமல் விடை கொடுத்தனுப்பக் கடவாய் என்று தாயினிடம் விடை பெற்றுக்கொண்டு சென்று கூஷாத்பாதை யுண்டானபோ தெல்லாம் ஆங்காங்கு காணப்படும் குக்கிராமங்களில் பிக்ஷை யுண்டு கொண்டே கானகம் சென்றான்.

இப்படி அப்பிராமணச் சிறுவன் நடு காட்டில் செல்லும்போது அஸ்தமிக்கும் ஸமயமாயிற்று. அப்போது, தான் செல்லும் மார்க்கத்தில் ஓர் வேடனும் வேடச்சியும் தமக்கு வேண்டிய தேன் தினை கிழங்கு முதலாகிய ஆஹாரங்களைப் பகலெல்லாம் சம்பாதித்துக்கொண்டு, வேண்டிய அளவு புஜித்து, இராக்காலங்களில் மிருக பாதைகளுக்குப் பயந்து, பூமிக்கு மேல் பத்து அடி உயரத்தில் ஓர் பர்ன சாலையை நியமித்துக்கொண்டு அதன்மேல் இருவருமாய்

சயனிப்பது வழக்கம். அந்தப் பர்னசாலைக்குச் ஸமீபமாய்ச் செல்லும் பிராமணச் சிறுவனை அந்த வேடன் கண்டான். அவனைக் கண்டவுடன் வேடனது சரீரமானது நடுநடுங்கி, "ஐயையோ! இந்தச் சிறுவன் இக்கானகத்திலுள்ள மிருகங்களுக் கெல்லாம் தப்பித்துக்கொண்டு இவ்வளவு தூரம் எப்படிஉயிர்பிழைத்து வந்துவிட்டா"னென்று மனவருத்த முடையவனாய் அதிக ஆத்திரத்துடன் பிராமணச் சிறுவனைப்பார்த்து, "அப்பா குழந்தாய்! மஹா பயங்கரமாகிய இப் பெருங்காட்டில் இருக்கப்பட்ட மிருகங்களுக்குத் தப்பித்துக்கொண்டு இவ்வளவு தூரம் எப்படி உயிர்தப்பிப் பிழைத்து வந்தாய்? நில்லு நில்லு, இனிச் செல்ல வேண்டாம். அருணனும் (சூரியனும்) தன்வீடு செல்லப் போகின்றான். அதனால் இருள் சூழ்ந்து கொள்ளப் போகின்றது" என்று பிரயாணத்தை நிறுத்தித் தனக்கும் தனது பார்யைக்கும் தயார் செய்துவைத்த தேன் தினமா வுண்டையையும், அக்கினியினால் சுட்ட காட்டுக் கிழங்குகளையும் மூன்று பாகமாய் வைத்தான். இம்மூன்று பாகத்தையும் வேடச்சியானவள் கண்டவுடன், அதிக கோபங்கொண்டு, "அடா பாபீ! மூன்று பங்கு ஏன் வைத்தாய் என் பங்கில் அந்தச் சிறுவனுக்குக் கொஞ்சங்கூடக் கொடுக்கமாட்டேன். இரண்டாய்ப் பங்கிட்டு என் பங்கை எனக்குக் கொடுத்துவிட்டு, உன் பங்கில் அவனுக்குக் கொடுத்துக்கொள்" என்று கடிகடுத்தாள்.

அதனால் வேடன் பயந்து இரண்டாய்ப் பங்கிட்டு ஒரு பாகம் பார்யைக்கும், மற்றொரு பாகம் பிராமணச் சிறுவனுக்கும் கொடுத்துவிட்டுத் தான் மூன்று கை ஜலம் சாப்பிட்டு உபவாசியா யிருந்தான். பிராமணச் சிறுவன் தேனுடன் கலந்த தினைமா வுண்டையையும், அக்கினியினால் சுட்ட காட்டுக் கிழங்குகளையும் புஜித்துப் பசியைத் தணித்தான்.

சற்று நேரத்திற்குள் இருள் சூழ்ந்துகொண்டது. வேடச்சி பர்னசாலையேறி சயனித்துக்கொண்டாள். சில நேரம் சென்ற பிறகு பிராமணச் சிறுவனும் வேடனும் பர்னசாலையின் மீதேறி பார்யைக்கும் தனக்கும் மத்தியில் சிறுவனைப் படுக்கவைத்தான். தன்புறமாய்ப் படுத்திருப்பது யார் என்பதை அறியவேண்டுமென்று வேடச்சி நினைத்துத் திரும்பித் தன் கையால் தடவிப்பார்த்து, பிராமணச் சிறுவனென்று அறிந்து, "இவன் என் பக்கம் படுக்கக்கூடாது, எனக்குப் பாதி யிடத்தைக் கொடுத்துவிட்டு மற்றப் பாதியில் நீங்கள் படுத்துக்கொள்ளவேண்டும்" என்று நிர்ப்பந்தப்படுத்தினாள். பிறகு, வேடனானவன் பாதியிடம் அவளுக்குக் கொடுத்துவிட்டு மற்றப் பாதியிடத்தில் தான் பார்யையின் பக்கம் சயனித்துக்கொண்டு, சிறுவனைப் பர்னசாலையின் ஓரமாய்ப் போட்டுத் தூக்கத்தில் கீழே வீழ்ந்து விடாமல் தன் கையால் சிறுவனைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு தான் தூங்காமல் விழித்துக்கொண்டிருந்தான். பிறகு, பார்யை நல்ல நித்திரை செய்யும்போது சிறுவனை மத்தியில்போட்டுத் தான் பர்னசாலையின் ஓரமாய்ப் படுத்து நித்திரை செய்தான். இப்படி நித்திரை செய்யும்போது அர்த்த ராத்திரியில் வேடச்சி விழித்துக் கொண்டு, சிறுவனைக் கீழே தள்ளிவிட வேண்டுமென்று எண்ணங் கொண்டவளாய்த் தனது ஸமீபத்தி லிருப்பவன் தனது நாயகனென்று எண்ணிச் சிறுவனென்று நினைத்துத் தன் கணவனை மெதுவாய் நெட்டித் தள்ளினாள். தள்ளினவுடனே நல்ல தூக்கத்திலிருந்த வேடன் தொப்பென்று கீழே விழுந்தான். விழுந்த சப்தத்தை இவள் காதில் கேட்டவுடனே பீடை ஒழிந்ததென்று எண்ணிக்கொண்டாள். இவன் விழுந்தவுடனே அடியில் காத்துக்கொண்டிருந்த மிருகங்கள் அவனை வாயில் போட்டுக்கொண்டன.

பிறகு, அருணோதய மானவுடன் வேடச்சி கணவனைக் காணமல் சிறுவனைக்கண்டு மனம்வாடி, என் புறமாய் என் கணவன் படுத்திருந்தானே ! இவன் எப்படி என் பக்கம் வந்தானென்று தனக்குள் தான் சிந்தித்துக்கொண்டு, இனி யென்செய்வேன், என் புருஷனுக்குப் பதிலாய் இவனையே புருஷனுக வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணங் கொண்டு, "என் புருஷனை நீ கீழே தள்ளிப் புலிக்கு இரை யாக்கினுய். ஆதலால், நான் உன்னை விடமாட்டேன்; என் புருஷனுக்குப் பதிலாய் நீயே எனக்குப் புருஷனுயிருக்க வேண்டும்" என்று மடியில் கையைப் போட்டுக் கெட்டி யாய்ப் பிடித்துக்கொண்டாள். பிராமணச் சிறுவன் பயந்து நடுநடுங்கி "ஐயையோ பர்னசாலை யோரமாய்ப் படுத் திருந்த நான் விழாமல், மத்தியில் படுத்திருந்த வேடன் விழுந்தது மஹா ஆச்சர்யமா யிருக்கின்றது. இது விஷயம் உனக்கும் தெரிந்ததே யல்லவா ? இது ஈஸ்வர ஸங்கல்பமே யல்லாமல் என்னுடைய தல்ல" என்று அநேக நியாயங்க ளைச் சொல்லியபோதிலும் அவள் கேட்கவில்லை. பிராம ணச் சிறுவன் கடைசியாய் ஓர் எண்ணங்கொண்டு அவ ளிடம் பின்வருமாறு சொல்லுகின்றுன் :—

"ஓ வேடச்சியே உன் புருஷனை நான் கொன்றுவிட்டே னென்றும், அவனுக்குப் பதிலாய் என்னைப்புருஷனுக இருக் கும்படியு மல்லவோ சொல்லுகிறுய். நாம் இருவரும் இக் கானகத்தைக் கடந்து வெளியில் சென்று சுற்றுப் பக்கங்க ளின் கிராமத்திலுள்ள பெரிய மனிதர்களிடம் சென்று நம் முடைய நியாயத்தைச் சொல்லிக்கொள்வோம். அதற்கு அவர்கள் எப்படிச் சொல்லுகின்றுர்களோ அதுபோல் நடந்துகொள்ளலாம்" என்று சொன்னுன். வேடச்சி அதற்குச் சம்மதித்துக் காட்டைவிட்டு வெளியில்வந்து, தங் கள் கண்ணுக்குத் தென்பட்ட ஓர் கிராமத்திற்குச் சென்று

அவ்விடத்திலுள்ள மனிதர்களிடம் நடந்த விருத்தாந்தங் களையெல்லாம் சிறுவன் ஸவிஸ்தாரமாய்ச் சொன்னன். இவைகளை யெல்லாம் கேட்ட கிராமஸ்தர்கள் வேடச்சின் மீது அதிக கோபங்கொண்டு அவன் மடியை விடுவித்து, அவனை நன்ருயடித்துத் துரத்திவிட்டார்கள். பிராமணச் சிறுவன் அதைத் தப்பித்துக்கொண்டு மறுபடியும் கான கத்தின் வழியாய் நடந்து க்ஷுத்பாதை யுண்டானபோ தெல்லாம் இலைகளைப் பறித்துத் தின்றுகொண்டே கான கத்தின் மத்தியில் சென்றுன்.

இப்படி அச்சிறுவன் சென்றபோது ஓரிடத்தில் அழ காகிய ஓர் தடாகமும், அதற்குச் சமீபமாய் அழகிய பர்ன சாலையும் இருப்பதைக் கண்டான். அவைகளைக் கண்ட வுடனே சிறுவன் மிகவும் ஸந்தோஷ முடையவனுய் அதி சீக்கிரம் பர்னசாலையைச் சேர்ந்தான். அந்தப் பர்ன சாலைக்குள் இரண்டங்குல உயரமுள்ள ஓர் பெரிய பீடத்தின் மீது தர்ப்பாஸமும் புலித்தோலும் காஷாய வஸ்திரமும் போட்டு, அதன்மீது ஓர் பெரிய மஹாரிஷியானவர் பத்மா சனத்தில், * "சின்முத்திரை" யுடன் சமாதியில் இருக்கக் கண்டான். அவரைக் கண்டவுடன் அவன் தன் இரண்டு கைகளையும் குவித்துக்கொண்டு அஞ்சலியஸ்தனுய் ஓர் புறம் நின்று, ரிஷியை நகசிக பர்யந்தம் என்ருல், பாதப் பெரு விரல்முதல் உச்சிவரையில் பார்த்துக்கொண் டிருந்தான். இப்படிக் காலைமுதல் மாலைவரையில் நின்றிருந்தும் ரிஷி யானவர் கண்களைத் திறவாமல் ஸமாதி நிஷ்டையிலேயே யிருந்தார். இவனுக்கு க்ஷுத்பாதை அதிகமாயுண்டா யிற்று. உடனே வெளியில்வந்து அவ்விடமிருந்த சில இலை தினுசுகளைத் தின்று ஜலத்தைப் பானம்செய்து (குடித்து)

* இந்த 'சின்முத்திரை' யின் விவரங்களை "ஜீவ ப்ராஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்" விவரமாய்க் காணலாம்.

பசியைத்தணித்து சீக்கிரமாய் ஆஸ்ரமத்திற்குள் சென்று, முன்போல் அஞ்சலியஸ்தனாய் நின்று இரவெல்லாம் விழித்திருந்தும் ஸமாதி கலையவில்லை. இவ்வாறே பத்துத்தினங்கள் கழிந்தன. பதினோராம் நாள் ரிஷியானவர் நிஷ்டை கலைந்து கண்களைத் திறந்து பார்த்தார். அப்போது, சிறுவன் ஸாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று இருகைகளையும் குவித்து ஸிரஸின்மீது வைத்துக் கொண்டு "ஓ முநீஸ்வரரே! பிரபஞ்சத்திற்கெல்லாம் அதீதப்பட்ட வஸ்து பரப் பிரஹ்மமென்று சொல்லுகிறார்களல்லவா. அந்தப் பர ப்ரஹ்மத்திற்கோ ஸரீரமில்லை. ஆதலால் அது, ஒருவருடனும் பேசாதது. இந்தப் பரப் பிரஹ்மமே ஸகல ஜீவ ஜந்துக்களிலும் ஆத்ம ஸ்வரூபமாய் வ்யாபித்திருக்கின்றது. அஃதெப்படி யென்றால், இரும்பை உலைக்களத்தில்வைத்துச் சிவக்கக் காய்ச்சிச் சம்மட்டியால் அடித்தபோது அதிலிருந்து சிதறிப்போவன அணுக்களல்லவா ? அதுபோல் பிரபஞ்ச சிருஷ்டி காலத்தில் அந்தப் பரப் பிரஹ்மத்திலிருந்து அணு ஸ்வரூபமாய் புறப்பட்டு பிபீலிகாதி பிரஹ்ம பர்யந்தம்வரையில் சகல ஜீவ ஜந்துக்களிலும் சாக்ஷியாய் நிறைந்திருக்கும் வஸ்துவே ஆத்மாவென்று உபநிஷத்துக்கள் முறையிடுகின்றன. இப்படிப்பட்ட ஆத்மாவை மாயையென்னும் ஓர்வஸ்து மூடிக் கொண்டிருப்பதால் அது, தன் நிஜ ஸ்வரூபத்தை மறந்து மதிமயங்கி காம க்ரோத லோப மோஹ மத மச்சரங்களினாலும் ஈஷணத் திரயங்களினாலும் பந்தப்பட்டு அநேக ஜன்மங்களை எடுக்கின்றது. தங்களைப்போன்ற மஹான்களின் இருதயத்தி லிருக்கப்பட்ட ஆத்மாவை மாயை அதாவது, காம க்ரோதாதிகளும், ஈஷணத்திரயங்களும் பற்றாமல் ஸ்வயம் பிரகாஸமாயப் பிரகாசித்துக்கொண் டிருப்பதால், தங்களையே பிரயத்க்ஷ பரப் பிரஹ்மமென்று சொல்லலாம்.

தங்களைப்போன்றவர்களுக்கு மூன்று உலகத்திலும் நடக்கும் விஷயங்களெல்லாம் பிரத்தியக்ஷமாய்ச்சொல்ல ஸக்தியுண்டு. அஃதெப்படி யென்றால், ஓர் குடத்திலுள்ள க்ஷீரத்தை (பாலை) ஏரிஜலத்துடன் கலந்தபோது, அந்த க்ஷீரமானது (பாலானது) ஏரியிலுள்ள ஜலத்திலெங்கும் வியாபித்து அதிலுள்ள சகல வஸ்துகளையெல்லாம் பால் எப்படி அறிகின்றதோ அதுபோல், தேவரீருடைய ஆத்மா மாயாந்தகாரத்தினால் மூடப்படாமல் பரிசுத்தமாய்ப் பிரகாசித்துக்கொண்டு பரப் பிரஹ்ம ஸ்வரூபத்தை அடைந்திருப்பதனால், "உலகத்திலுள்ள வஸ்துக்களை யெல்லாம் பரப் பிரஹ்மம் எப்படி அறிகின்றதோ" அதுபோல் தேவரீருடைய ஆத்மாவும் பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களையும் அறியும். ஆத்மா, பரப் பிரஹ்மம் என்று நாமபேதங்களேயொழிய இரண்டு வஸ்துக்களின் குண மாத்திரம் ஒன்றே. ஆதலால், அடியேன் கோரிவந்த விஷயங்களை க்ஷணத்திற்குள் யோகதிருஷ்டியில் அறியும் தன்மையுடைய தபோதனராய் இருக்கின்றீர்கள். அஃதெப்படி யென்றால், தேவரீர் கண்களைமூடி ஆகாஸவடிவமாய் (வெட்டவெளியாய்) நின்றபோது, அந்த வெட்டவெளியில் பிரபஞ்சத்தில் நடக்கும் சகலவிஷயங்களும் தேவரீருக்குத் தெரியவரலாம். அப்படித் தெரிந்துகொள்ளும் சக்தியுடையவரா யிருந்தபோதிலும் தேவரீருக்குக் கஷ்டம்கொடாமல் அடியேனுடைய விருத்தாந்தங்களை யெல்லாம் சொல்லுகிறேன். ஆதலால், அடியேன்மீது கிருபாகடாக்ஷம் வைத்து, யோகதிருஷ்டியில் பார்த்து அவைகளை விவரித்துச் சொல்லவேண்டும்" என்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினான்.

"ஓ தபோதனரே! சொல்லுகின்றேன் கேளுங்கள். எனது தாயானவள், மிகவும் ஏழை வைதவ்ய பிரா

மண ஸ்த்ரீ; அவள் பிரதிதினம் பிக்ஷை யெடுத்துக்கொண்டுவரும் அமுதுபடியில் பாதி விக்கிரயம்செய்து அதற்குத் தகுந்த ஸாமக் கிரியைகளைக் கொண்டுவந்து மிகுதியாகிய பாதி அமுதுபடியெல்லாம், நாளைக்குவேண்டுமேயென்று சிறிதாகிலும் வையாமல் எல்லாவற்றையும் சமைத்து, பிராமணருக்குப் பிக்ஷைதந்து, மிகுதியாகிய பிரசாதத்தை என் தாயும் நானும் புஜித்துக்கொண்டு வருவது வழக்கம். இப்படிப் பிக்ஷையெடுத்து அன்னதானம் செய்வதனல் என்ன பலன் உண்டாகின்றதோ அதைத் தெரிந்துகொள்ள வேண்டியவனுய்த் தேவரீரிடம் வந்திருக்கின்றேன். ஆதலால், தேவரீர் அடியேன் மீது கிருபா கடாக்ஷம்வைத்து அனுக்கிரஹிக்கவேண்டும்'' என்று ஈன ஸ்வரத்துடன் கேட்டு, ஸாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று இரு கைகளையும் குவித்துக்கொண்டு ஓர் புறமாய் நின்றுகொண் டிருந்தான். இவைகளை யெல்லாம் கேட்ட முனியானவர் அதிக ஆச்சர்யமடைந்து, ஆஹா! இவனே மிகவும் சிறுபாலன், இவனுக்கு இப்படிப்பட்ட ஞானம் ஜன்மாந்திரங்களில் செய்துவந்த புண்ணிய விசேஷத்தினல் உண்டாயிற்றென்று அறிந்து, மிகவும் ஸந்தோஷித்தவராய் அவனைப் பார்த்துச் சொல்லுகின்றார். "அப்பா குழந்தாய்! நீயோ மிகவும் சிறியவன், நீ ஜன்மாந்திரங்களில் செய்து வந்த ஸஞ்சித கர்ம ஸேஷத்தினல், ஏழை பிராமண வீட்டில் ஜன்மித்தாய். இப்போது மோக்ஷவீட்டை அடைய அதிஸமீபத்தில் வந்திருக்கின்றாய்; இன்னும் இரண்டு ஜன்மத்தில் பரப்பிரஹ்ம ஸ்வரூபத்தை அடவாய்'' என்று சொல்லிக் கண்களை மூடிச் சற்று நேரம் நிஷ்டையி லிருந்து சிறுவன்கேட்ட கேள்விகளை யெல்லாம் யோக திருஷ்டியில் தெரிந்துகொண்டு கண்களைத்திறந்து சிறுவனைப் பார்த்துச் சொல்லுகின்றார்:—

"அப்பா குழந்தாய்! காசி தேசத்தை ஆளப்பட்ட ராஜனுக்குப் பத்து மாதத்திற்குள் ஒருநாளைக் குறிப்பிட்டு, அந்நாள் மாலை ஆறு மணிக்கு ஸிம்ஹலக்கினத்தில் ஓர் திவ்யமாகிய ஆண் குழந்தை பிறக்கப் போகின்றது. அக் குழந்தை ஜனிக்கும்போது கீழே விழாமலும் கைகளால் தீண்டாமலும் தங்கத்தட்டி லேந்திக்கொண்டு வரும்படியாய் அந்த ராஜனுக்குச் சொல்லினால், அவன் மிகவும் ஸந்தோஷப்பட்டு உன்னிஷ்டம்போல் செய்வான். அப்போது அக் குழந்தையைக் கேட்டால் நீ கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும்" என்று சொன்னார். அதைக் கேட்ட சிறுவன் மிகவும் ஸந்தோஷமடைந்து, தபோதனரை ஸ்துதிசெய்து அவரிடம் பிரஹ்மோபதேசம் பெற்றுக்கொண்டு காசிநகரம் சென்றான். செல்லும்போது, வழியில் விசேஷமாய்ப் புல்லும் கணுக்கால் ஜலமும் இருக்கப்பட்ட ஓரிடத்தில் ஒரு பசுவானது நின்றுகொண்டு, தலையைக்குனிந்து புல்லைத்தின்று ஜலத்தைக்குடிக்க ஸக்தி இல்லாமல், தலையை நிமிர்ந்துகொண்டு பசியினால் வருந்திக்கொண்டே அநேக தினங்களாய் நின்றுகொண் டிருந்தது. அப்பசு இருக்கும்படியான மார்க்கமோ மனித ஸஞ்சாரமில்லாத மார்க்கம். அம்மார்க்கமாய் இந்தப் பிராமணச் சிறுவன் போவதை பசுவானதுகண்டு அவனைப் பார்த்துக் கூப்பிட்டு, அழுதுகொண்டே "நீ எங்கே போகின்றாய்" என்று கேட்டது. அவன் மிருக பாஷைகளும் ஊர்வன (நகரும்) பிராணிகளின் பாஷைகளும், பக்ஷிகளின் பாஷைகளும் நன்றாய் அறிந்தவனாதலால், பசு கேட்டவுடன் "நான் அன்னதானபலனைக் கேட்கப் போகின்றேன்" என்று சொன்னான். அதைக்கேட்ட பசுவானது, "அப்பா பாலா! யதேஷ்டமாய்ப் புல்லும் ஜலமும் இருக்கும்படியான இடத்தில் நான் இருந்தும் புல்லை மேயலாமென்று எண்ணித்

தலையைக் குனியப்போனால் குனியாமல் நிமிர்ந்தவாறே யிருக்கின்றது; பூர்வஜன்மத்தில் நான் என்ன கர்மம் செய்தேனோ தெரியவில்லை; தலையைக் குனிந்து இரை எடுக்க ஸக்தியில்லாம லிருக்கும் காரணம் என்னமோ அதையும் மறவாமல் விசாரித்து வருகின்றாயா'' என்று கேட்டது. அதைக்கேட்ட பிராமணச் சிறுவன் நல்லதென்று சம்மதித்துச் சென்றான். அவன் செல்லும்போது மற்றோரிடத்தில் ஓர் பெரிய 'மா' விருக்ஷ மிருந்தது.

அந்த விருக்ஷம் வருஷாந்தரத்தில் அநேக நல்ல கனிகளைத் தருவதுண்டு. அக்கனிகளைப் பக்ஷிகளும் மனிதர்களும் புஜிக்காமல் கீழே விழுந்து நாசமாவதும் தவிர, அதன் நிழலில் ஒருவரும்போய் உட்காருவது மில்லை. இஃதன்றியும், எந்தப் பக்ஷிகளும் அந்த மரத்தின்மீது வந்து உட்காருவது மில்லை. அந்த விருக்ஷ மிருக்கும் மார்க்கமாய்ப் பிராமணச் சிறுவன் சென்றுகொண்டிருப்பதை மா விருக்ஷமானது கண்டு, ''ஓ பிள்ளாய்! எங்குச் செல்லுகின்றாய், நில் நில்; இப்படி வாரும்'' என்று கூப்பிட்டது. அதைக்கேட்ட சிறுவன் மா விருக்ஷத்தின் ஸமீபத்தில் வந்து நின்றான். மாவிருக்ஷம் அவனைப்பார்த்து, நீ யெங்குச் செல்லுகின்றாயென்று கேட்டது. அதற்கு அவன் அன்னதானபலனைக் கேட்கப் போகின்றேனென்று சொன்னான். அதைக்கேட்ட மா விருக்ஷமானது, அப்பா! நான் வருஷாந்தரந் தோறும் அநேக கனிகளைத் தருகின்றேன், அக்கனிகளைப் பக்ஷிகளும் மனிதர்களும் புஜிக்காமல் பழுத்துக் கீழே விழுந்து நாசமாவதும் தவிர, என் நிழலில் எவர்களும் வந்து நிற்பது மில்லை; எந்தப் பக்ஷிகளும் உட்காருவதுமில்லை; அஃது என்ன காரணமோ? அதையும் தெரிந்துகொண்டு வருகின்றாயா'' என்று கேட்டது. அவன் நல்லதென்று சம்மதித்துச் சென்றான். இப்படிச் செல்லும்போது மற்றோ

ரிடத்தில், ஒரு ஸர்ப்பம் புற்றுக்குள் பாதியுடலும் புற்றுக்குமேல் ஸிரசுடன் பாதியுடலும் வைத்துக்கொண்டு வெளியில்வந்து இரையெடுப்பதற்கும், புற்றுக்குள் செல்வதற்கும் ஸக்தியில்லாமல் அநேகநாளாய் கஷ்டத்பாதையுடன் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தது. இப்படிப் பட்ட சமயத்தில் அப் பிராமணச் சிறுவன் அம்மார்க்கமாய்ச் சென்றுகொண் டிருப்பதை ஸர்ப்பம் கண்டு, "ஓ ஐயா! இங்குவா" என்று கூப்பிட்டது. அதைக்கேட்ட சிறுவன் புற்றுக்குச் சமீபமாய்ச்சென்று நின்றான். அந்த ஸர்ப்பமானது அவனைப்பார்த்து, "அப்பா! இப்பொழுது நீர் எங்குச் செல்லுகின்றீர்" என்று கேட்டது. அதற்கு அந்தச் சிறுவன், நான் அன்னதானபலனைக் கேட்கப் போகின்றேன் என்று சொன்னான். அதைக்கேட்ட ஸர்ப்பமானது, குழந்தாய்! "நான் நெடுநாளாய் இந்தப் புற்றுக்கு மத்தியில் நின்றுகொண்டு, பாதியுடல் புற்றுக்கு மேலும் பாதியுடல் புற்றுக்குள்ளுமா யிருக்கின்றேன். வெளியில் சென்று இரை யெடுக்கவேண்டு மென்றாலும் போகக்கூடவில்லை, புற்றுக்குள் போகலாமென்று நினைத்த போதிலும் போகக்கூடவில்லை. பிராணன் போய் விட்டாலும் சுகமாயிருக்கும். அப்படியும் போகவில்லை. எதனால் இப்படி அவஸ்தைப் பட்டுக்கொண் டிருக்கின்றேனே அதையும் தெரிந்துகொண்டு வரவேண்டும்" என்று மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டது. சிறுவன் அதற்குச் சம்மதித்துச் சென்றான்.

அச்சிறுவன் இப்படியாய்ச் செல்லும்போது வழியில் ஓர் நகரத்தைக்கண்டு, ராஜவீதி மார்க்கமாய்ச் சென்றான். வெகுதூரம் நடந்துவந்த ஆயாஸத்தினால் ஸ்ரமம் தீர்த்துக் கொள்வதற்காக அவ் வீதியில் ஓர் பெரிய தாசிவீட்டு மாளிகையின் தெருத்திண்ணையின்மேல் போய்

உட்கார்ந்தான். இவன் உட்கார்ந்திருப்பதை தாசியின் தாதிகள்கண்டு தன் எஜமானிக்குப் போய்ச் சொன்னார்கள். அதைக் கேட்ட தாசியானவள் வெளியில் வந்து பார்த்து, "யாரையா நீர்? வெகுதூரம் நடந்து ஆயாஸமாய் வந்திருப்பதாகக் காணப்படுகின்றது, உமக்கு என்ன வேண்டும்? நீர் எங்குச் செல்லுகின்றீர்?" என்று கேட்டாள். அதைக்கேட்ட சிறுவன், அம்மா! நான் காட்டுக்குச்சென்று பெரியோர்களைத் தரிசித்து அன்னதான பலனைக் கேட்கச் செல்லுகின்றேனென்று சொன்னான். இதைக்கேட்ட தாசியானவள் சிறுவனை உள்ளே அழைத்துக்கொண்டுபோய், தக்க ஆஸனத்தின்மீது உட்காரவைத்து, ஆயாஸம் தீர்வதற்காகப் பழமும் பாலும் தந்து, அன்று முழுவதும் அவ்விடம் இளைப்பாரச்செய்து, ராத்திரி நல்ல இலவம் பஞ்சு மெத்தையின் மீது ஸயனிக்கச் செய்தாள். மறுநாள் காலை பிராமணச்சிறுவன் தாசியினிடம் சென்று, அம்மா! நான் போய் வருகின்றேனென்று கேட்டான். அப்பொழுது தாசியானவள் அவனை ஓர் ஆஸனத்தில் உட்காரச்செய்து பின்வருமாறு சொல்லுகின்றாள்.

"ஐயா ! நானோ தாசித்தொழில் செய்பவள். பிரதி தினம் வரப்பட்டவர்களிடம் ஆயிரம் பூவராகன்கள் என்றால், $3\frac{1}{2}$ ரூபாய் கொண்டது ஒரு பூவராகன், வாங்குவது வழக்கம். அன்று செலவுக்குவேண்டிய தொகையை எடுத்துக்கொண்டு மிகுதியாகிய தொகையைப் பெட்டியில் வைத்துப் பூட்டி, மறுநாள் காலையில் எழுந்து பார்க்கும் போது, அதில் யாதொன்றுமில்லாமல் வெறும் பெட்டியாயிருக்கும். நான் புஷ்பவதியான நாள்முதல் என்றால், மாதவிடாயான நாள்முதல் இதுவரையில் இப்படியே நடந்துகொண்டு வருகின்றது. இது என்ன காரணமோ அறியேன். ஆதலால் இதையும் தெரிந்துகொண்டு வர

வேண்டும்'' என்று சொன்னாள். இதையெல்லாம் கேட்ட சிறுவன், அப்படியே ஆகட்டுமென்று சொல்லிச்சென்றான். பிறகு வழி நடந்து செல்லும்போது வழியில் ஓர் ஏரி உண்டு. அந்த ஏரி, அவ்வூருக்குச் சமீபத்திலிருக்கும் ஓர் சுரோத்திரியதாரனால் கட்டப்பட்டது. அந்த ஏரிக்கு மேற்புறமாய் ஓர் கால்வாயுண்டு. அதன் மூலமாம் அந்த ஏரிக்குச் ஜலம்வந்து விழுவதுண்டு. அரையேரி ஜலம் வந்தவுடன் இரவில் ஓர் புறமாய்க் கரை அறுபட்டு ஜலமெல்லாம் ஓடிப்போவது வழக்கம். காலையில் ஏரிக்குடையவன் வந்து பார்த்தபோது, ஏரி அறுபட்டு ஜலமெல்லாம் ஓடிவிட்டதைக்கண்டு சிந்தாக்கிராந்தனாய் (மனவருத்தமடைந்து) மறுபடியும் கூலியாட்களைவைத்து மாலைக்குள் அணையைப் போட்டுவிடுவான். மறுபடியும் ராத்திரி மற்றோரிடத்தில் அறுபட்டு ஜலமில்லாமல் வெறும் ஏரியாய் விடும். மறுபடியும் ஏரிக்குடையவன், காலையில் வந்து பார்த்து மனவருத்தப்பட்டு, மறுபடியும் கூலியாட்களை வைத்து அணைபோடுவதுண்டு. இப்படி நெடுநாளாய் நடந்துகொண்டு வருகின்றது. அம்மார்க்கமாய் இந்தப் பிராமணச்சிறுவன் சென்றான். அப்போது, ஏரிக்குடையவன் ஏரிக்கரைமேல் உட்கார்ந்துகொண்டு பிராமணச் சிறுவனைக்கண்டு, நாயனா! இம் மார்க்கமாய் எங்குச் செல்லுகின்றாய்? என்று கேட்டான். சிறுவன் அதைக் கேட்டு, "ஐயா! நான் அன்னதானபலனைக் கேட்கப் போகின்றேன்'' என்று சொன்னான். அதைக்கேட்டவுடன் அப்பா! ஒன்று சொல்லுகின்றேன் கேள்; பகலெல்லாம் கஷ்டப்பட்டு இந்த ஏரிக்கு அணையைப்போட்டு வேலையை முடித்துச் செல்லுகின்றோம். இராக்காலங்களில் மற்றோரிடம் கரை அறுபடுவதுண்டு. இவ்விதமாய் நாள்தோறும் அறுபடுவதும் அணைப்போடுவதுமா யிருக்கின்றது. எந்தக்

காரணத்தினல் இவ்விதமாய் அறுபடுவதும் அணைப்போடு வதுமா யிருக்கின்றதோ அதையும் அறிந்துகொண்டு வர வேண்டும்'' என்று சொன்னன். சிறுவன் நல்லதென்று சம்மதித்துச் சென்முன்.

பிறகு, சிறுவன் சிலநாளைக்குள் காசிநகரம் சேர்ந்து ராஜனைக்கண்டு முனிவர் சொன்ன சேதியைச் சொன்னன். அதற்கு, ராஜன் மிகவும் ஸந்தோஷித்து நல்லதென்று சம் மதித்து அதுவரையில் பிராமணச் சிறுவனை உபசரித்துப் பிராமணப்பிள்ளை சொல்லியதுபோல் தங்கத்தட்டைத் தயார்செய்து, சிசு பிறக்கும் வேளையை எதிர்ப்பார்த்திருந் தான். பிறகு, ராஜன் மனைவி பிராமணச்சிறுவன் சொன்ன தேதியில் பிரஸவ வேதனைப்பட்டுப் பிராமணச்சிறுவன் சொன்ன லக்கினத்தில் பிண்டம், தாயின் கர்ப்பத்திலிருக் கும் பையிலிருந்து வெளிப்பட்டு வந்து தங்கத்தட்டில் விழுந்தது. உடனே தாதிமார்கள் அக்குழந்தையைத் தட்டுடன் எடுத்துக்கொண்டு ஓடோடியும் கொண்டுவந்து பிராமணச் சிறுவன்கையில் கொடுத்தார்கள். அவன் அக் குழந்தையைத் தட்டுடன் ஏந்திக்கொண்டு, அக்குழந்தை யைப்பார்த்து "அன்னதானம் செய்வதனல் என்ன பல னுண்டாகும்'' என்று கேட்டான்.

முனிவரது தபோ மஹிமையால் சில நிமிஷங்கள் வரையில் அந்தச் சிசுவை மாயை மூடாம லிருந்தபடியால் தன் பூர்வ ஞானத்துடன் இருந்து, பிராமணச் சிறுவன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பின் வருமாறு சிசு சொல்லுகின்றது.

சிசுவாயிருக்கும் தான் வேடனயிருந்தபோது தேன் தினைமா வுண்டையும் சுட்டக் காட்டுக் கிழங்குகளையும் அந் தப் பிராமணனுக்கு எவ்வளவு கொடுத்ததோ அவ்வளவு பிரமாணம் கையைக் விரித்துக் காட்டி "அவ்வளவிற்கு

இவ்வளவு உண்டாயிற்று'' என்று சொல்லி, பிறகு இரண்டு கைகளையும் அகலமாய் விரித்து ''இவ்வளவிற்கு எவ்வளவு உண்டாகுமோ அதை நீரே தெரிந்துகொள்ளும்'' என்று சிசுவானது சொல்லிற்று. பிராமணச் சிறுவன் அதன் விவரத்தை கிரஹித்தபோதிலும், ராஜன் முதலானவர்களெல்லோரும் அறியவேண்டுமென்று எண்ணங்கொண்டு அதை விவரித்துச் சொல்லவேண்டுமென்று சிசுவைக் கேட்டான். அதற்கு அந்தச் சிசுவானது ''நான் வேடனாயிருந்தபோது இவ்வளவு பிரமாணம் தேன் தினைமாவுண்டையும், அக்கினியினால் சுட்டக் காட்டுக் கிழங்கையும் உனக்குக் கொடுத்ததனால் இந்த ராஜன் வீட்டில் ஜன்மித்தேன்; உன் தாய் இதைவிட விசேஷமாய் அன்னதானம் செய்வதனால் இன்னும் எப்பேர்ப்பட்ட யிடத்தில் ஜன்மிப்பாளோ அதை நீரே தெரிந்துகொள்ளும்'' என்று சொல்லிற்று. பிறகு ஸ்ரோத்திரியதாரன் சொல்லிய விஷயங்களை யெல்லாம் சொல்லி, அது எந்தக் காரணத்தினால் கரை அறுந்துவிடுகின்றதென்று கேட்டான்; அதற்கு அந்தச் சிசுவானது சொல்லுகின்றது, ''அவனுக்குப் புஷ்பவதியான இரண்டு பெண்களுண்டு. அவர்கள் இராக்காலங்களில் படுக்கும்போது முன்றானையை விரித்துப்போட்டு 'உஸ்' என்று படுக்கின்றார்கள்; அந்த தோஷத்தினால் ஏரியின் கரை அறுபட்டுப் போகின்றது. ஆதலால், அந்தப் பெண்களை யாருக்காகிலும் விவாஹம் செய்து கொடுத்துவிட்டால் கரை அறுபடாமல் நின்றுவிடும்'' என்று சொல்லிற்று.

பிறகு தாசியின் விஷயத்தைக் குறித்துக் கேட்டான். ''பணப்பெட்டியும் விளக்கும், லக்ஷ்மி யாதலால் அப்படிப்பட்ட லக்ஷ்மியை அவள் கால்மாட்டில் வைத்துக்கொண்டு ஸயனிப்பதனால் அது மாயமாய் விடுகின்றது. அவ்விரண்டையும் தலைமாட்டில் வைத்துக்கொண்டு ஸயனித்தால்

அப்படியே யிருக்கும்'' என்று சொல்லிற்று. அதன்பிறகு ஸர்ப்பம் சொல்லிய விஷயங்களைக்குறித்துக் கேட்டான், "அந்த ஸர்ப்பம் பூர்வ ஜன்மத்தில் நல்ல மாந்தரீகத்தைக் கற்ற ஓர் புருஷன். அந்த மாந்தரீகத்தினுல் விசேஷ பொருள்களை ஸம்பாதித்து, அதைத் தான் உண்ணுமலும் ஸத் கைங்கர்யங்களுக்கு உபயோகப் படுத்தாமலும் பூமி யில் புதைத்துவைத்து, தான் கற்ற மாந்தரீகத்தை ஒருவ ருக்கும் உபதேசிக்காமல் மரணமடைந்ததால் இப்படிப் பட்ட அவஸ்தைகள் நேரிட்டன. இப்பொழுது புற்றின் கீழ் விசேஷமான பொருள் இருக்கின்றது. அவைகளை யெல்லாம் எடுத்து யாருக்காகிலும் தானங் கொடுத்து விட்டால் பிறகு ஸர்ப்பம் மரணமடைந்துவிடும்'' என்று சிசுவானது சொல்லிற்று. அதன்பிறகு மாமரம் சொல்லிய விஷயங்களைக்குறித்துக் கேட்டான். "அந்த மாமரமானது பூர்வ ஜன்மத்தில் வைஸ்யனுயிருந்து விசேஷ பொருளைச் சம்பாதித்துத் தானுண்ணுமலும் பிறருக்குக் கொடாமலும் பூமியில் புதைத்துவைத்து மரணமடைந்தான். அதனுல் அவனுக்கு இப்படிப்பட்ட கதியுண்டாயிற்று; அந்த மரத் தின்கீழ் விசேஷ பொருள் இருக்கின்றது. அதை யெடுத்து யாருக்காகிலும் தானம் செய்துவிட்டால், அதன் கனிகளை மனிதர்களும் பக்ஷிகளும் புஜிப்பதுமின்றி, அதன் நிழலில் ஜனங்களும் வந்து உட்காருவார்கள்'' என்று சொல்லிற்று.

அதன்பிறகு பசு சொல்லிய விஷயங்களை யெல்லாம் கேட்டான். "ஓ பிராமண சிரேஷ்டரே! அந்தப் பசுவா னது பூர்வஜன்மத்தில் மனிதனுயிருந்து ஓர் குடியானவன் வீட்டில் பசுக்களை மேய்த்துக்கொண்டுவந்து அவைகளுக் குத் தண்ணீர் காட்டாமலும் வைக்கோல் போடாமலும் தொழுவத்தில் கட்டிவிட்டுத் தன் எஜமானனிடம் சென்று, ஆண்டையே! நான் போய்வருகின்றேன் என்று கேட்பான்.

பசுக்களுக்குத் தண்ணீர்காட்டி வைக்கோல் போட்டாயா வென்று பிரதிதினமும் எஜமான் கேட்பது வழக்கம். அதற்கு அவன், ஆம் தண்ணீர்காட்டி வைக்கோல் போட்டேனென்று சொல்வது வழக்கம். பசுக்களோ தங்களெதிரிலிருக்கும் தொட்டியிலுள்ள ஜலத்தையும், வைக்கோல் போரையும் பிரதிதினம் பார்த்துக்கொண்டே பசிதாஹங்களுடன் வெகுநாளிருந்து மரணமடைந்தன. ஆதலால், பூர்வஜன்மத்தில் வாயில்லாத ஜீவன்களைப் பசி தாஹங்களுடன் கொன்றபடியால், தான் இந்த ஜன்மத்தில் பசுவாய்ப்பிறந்து யதேஷ்டையாய்ப் புல்லும் ஜலமும் தன் ஸமீபத்திலிருந்தும், தாஹம் தணிந்து புல்லை மேய கழுத்து வளையாமல் பசி தாஹங்களுடன் பாதைப் பட்டுக்கொண்டிருக்கின்றது. இது அப்படியிருந்தே மரணமடையவேண்டும்'' என்று சொல்லி முடிந்தவுடனே மாயைவந்து சிசுவை மூடிக்கொண்டது. மாயை மூடிக்கொண்டவுடனே சிசுவானது க்வா! க்வா!! க்வா!!! அதாவது எங்கே, எங்கே, எங்கே, எனக்குப் பூர்வஞானமிருந்ததே அந்த ஞானம் எங்குப் போயிற்றென்று வீறிட்டது.

இதன் விவரங்களை எல்லாம் ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்'' கர்ப்பத்தில் பிண்டம் தரிப்பது என்பதில் விரிவாய்க் காணலாம். இவைகளை யெல்லாம் கேட்டிருந்த ராஜன் முதலானவர்க ளெல்லோரும் இதுவரையில் நாம் கேள்விப்படாத விஷயங்களையெல்லாம் இந்தப் பிராமணச் சிறுவனால் கேள்விப்பட்டோமென்று ஆச்சர்யப்பட்டு, பிராமணச் சிறுவனுக்கு விசேஷமான பொருள்களைத் தந்து அதைக் காப்பாற்றிக் கொண்டு போவதற்குச் சில மனிதர்களையுங்கூட அனுப்பினான். பிராமணச் சிறுவன் இவைகளை யெல்லாம் பெற்றுக்கொண்டு தன் கிராமம் செல்லும்போது, வழியில் சுரோத்திரியதாரன்

ஏரியைக் கண்டான். அந்த ஏரிக்கரையின்மீது முன் போலவே சுரோத்திரியதாரன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, அவனிடம் சென்று, ஐயா! உன் இரண்டு குமாரத்தி களும் புஷ்பவதியாய் வெகுநாளாகின்றன; அவர்களுக்கு இன்னும் விவாஹம் செய்து கொடாததனால் அவர்கள் இராக்காலங்களில் முன்றானையை விரித்துக் கீழேபோட்டு 'உஸ்' என்று படுக்கின்றார்கள். அந்தத் தோஷத்தினால் பிரதிதினம் ஏரி உடைகின்றது. அவர்களை யாருக்காகிலும் விவாஹம்செய்து கொடுத்துவிட்டால் ஏரி உடையாம லிருக்குமென்று சொன்னான்.

சுரோத்திரியதாரன் அச்சிறுவன் சொன்னதைக்கேட்டு மிகவும் ஸந்தோஷமடைந்து, ஐயா! பிராமண சிரேஷ்டரே! நீர் கஷ்டப்பட்டு வெகுதூரம் சென்று இந்தச் சேதியைத் தெரிந்துகொண்டுவந்தீர். உம்மைவிட இனி நான் என் பெண்களை யாருக்கும் கொடுக்கமாட்டேன். பிராமணர் கள், பிரம க்ஷத்திரிய வைஸ்ய ஸூத்திரர் என்னும் நான்கு ஜாதியிலும் விவாஹம் செய்துகொள்ளலாமென்று ஸாஸ்த் திரங்களில் சொல்லப்பட் டிருக்கின்றன. நாங்களோ க்ஷத் திரியர்கள் ஆதலால், நீர் எங்கள் பெண்களை யாதொரு தடையின்றி விவாஹம் செய்துகொள்ளலா மென்று சொன்னான். பிராமணச்சிறுவன் அதற்குப்பதில் யாதொன் றும் சொல்லாமல் சும்மாயிருந்தான். பிறகு, சுரோத்திரிய தாரன் பிராமணர்களை வரவழைத்து நல்ல முஹூர்த்தம் ஏற்படுத்தி, அந்தச் சுப லக்கினத்தில் தன் இரண்டு குமா ரத்திகளையும் அவனுக்குப் பாணிக்கிரஹணம் செய்து கொடுத்தான். பிராமணச் சிறுவன் அவர்களின் கழுத்தில் மாங்கல்யம் தரித்தவுடனே ஏரிக்கரை உடைவது நின்றுவிட் டது. அதன்பிறகு, ஏரியில் பூர்ணமாய் ஜலம் நிறைந்து வருஷத்தில் மூன்றுபோகம் விளைய ஆரம்பித்தது. பிராம

ணச்சிறுவன், சிலநாள் சென்றபிறகு மாமன் மாமியிடம் செலவு பெற்றுக்கொண்டு தன் கிராமம் போவதற்குப் பிர யாணப்பட்டான். அப்போது, சுரோத்திரியதாரன் விசேஷ திரவ்யத்தையும், பொன் வெள்ளி சாமான்களையும் ஸ்ரீதன மாய்க் கொடுத்து அவைகளைக் கொண்டுபோக, யானை ஒட்டை முதலான சிலவற்றையும், சைன்னியங்களுடன் அனுப்பினன்.

அவைகளையெல்லாம் பெற்றுக்கொண்ட அப்பிராம ணச் சிறுவன் தாசி யிருக்கப்பட்ட நகரம் சேர்ந்து தாசிவீடு சென்று, "அம்மா! நீ பணப்பெட்டியையும், விளக்கையும் கால்மாட்டில் வைத்துக்கொண்டு ஸயனிப்ப தனல் பொழுது விடிவதற்குள் பணம் மாயமாய் விடுகின் றது. அவைகளைத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு ஸய னிப்பாயாகில் பணம் பெட்டியில்தானே யிருக்கும்" என்று சொன்னன். அதைக்கேட்ட தாசியானவள் பிராமணச் சிறுவன் சொல்லியதுபோல், அன்றிரவு அவ்விரண்டையும் தலைமாட்டில் வைத்துக்கொண்டு ஸயனித்தாள். மறுநாள் காலையில் பார்த்தபோது வைத்தபொருள் வைத்தபடியே யிருக்க தாசியானவள் கண்டு அதிக சந்தோஷப்பட்டு, பிராமணச் சிறுவனைப் பரிவாரங்களுடன் பத்துத்தினங்கள் வைத்துக்கொண்டு, லக்ஷவராஹன் கடன்வாங்கி பிராமணச் சிறுவனுக்குப் பரிசாகக் கொடுத்தனுப்பினள். இவைகளை யெல்லாம் பெற்றுக்கொண்டு ஸர்ப்பமிருக்கும் இடத்திற் குச்சென்று, "ஓ சர்ப்பமே! நீ பூர்வஜன்மத்தில் நல்ல மாந்த ரீகத்தைக் கற்ற மனிதனயிருந்தாய். அந்த மாந்தரீகத்தி னல் விசேஷ பொருளைச் சம்பாதித்து அதை நீ உண்ண மலும் ஸத் கைங்கர்யத்திற்கு உபயோகப் படுத்தாமலும் எல்லாவற்றையும் பூமியில் புதைத்துவைத்து மரணமடைந் தாய். அந்தக் கர்மத்தினல் இந்த ஜன்மத்தில் ஸர்ப்ப

மாய்ப்பிறந்து இப்படிப்பட்ட வேதனைகள் அனுபவிக்க வேண்டியதாய் நேர்ந்தது. இப்பொழுது நீ இருக்கப்பட்ட புற்றின்கீழ் விசேஷமான பொருள் இருக்கின்றது; அதை யாருக்காகிலும் தானம் செய்துவிடுவாயாகில், உன் ஜீவன் போய்விடும்'' என்று சொன்னன். அதைக்கேட்ட ஸர்ப்ப மானது மிகவும் சந்தோஷப்பட்டு, ஐயா! உன்னைவிட நான் இனி யாருக்குக் கொடுக்கப்போகின்றேன். நீரே ஆட்களை வரவழைத்து புற்றைத்தோண்டி. இருக்கப்பட்ட பொருள் களையெல்லாம் எடுத்துக் கொண்டுபோவென்று சொல் லிற்று.

அதைக்கேட்ட பிராமணச் சிறுவன் தன்னிட மிருக்கும் ஆட்களால் புற்றைத்தோண்டி, இருந்த பொருள் களையெல்லாம் எடுத்து, யானை ஒட்டைகளின்மீது ஏற்றின உடனே ஸர்ப்பத்திற்கு ஜீவன் போய்விட்டது. இவை களையெல்லாம் எடுத்துக்கொண்டு மா விருக்ஷமிருக்கும் இடம்சென்று, "ஓ மா விருக்ஷமே! நீ முன் ஜன்மத்தில் ஓர் வைஸ்யனயிருந்து அளவற்ற பொருள்களைச் சம்பாதித்து உன் வயிற்றிற்குத் தின்னமலும் தானம் செய்யாமலும் பூமியில் புதைத்துவைத்து மரணமடைந்தாய். ஆதலால், உனக்கு இந்த ஜன்மத்தில் மா விருக்ஷமாய்ப் பிறக்கநேரிட் டது; இப்பொழுது உன்கீழ் விசேஷமான பொருள் இருக் கின்றது; அதை யாருக்காகிலும் தானம் செய்துவிட்டால் பாட்டைசாரிகள் (வழி நடப்பவர்கள்) உன் நிழலில் உட் கார்ந்து உன்னல் தரப்பட்ட கனிகளையும் புஜிப்பார்கள். அன்றியும், பக்ஷிகளும் உன் கனிகளைப் புஜித்துக் கிளை களில் உட்காரும் என்று சொன்னன். இவைகளையெல் லாம் கேட்ட மா விருக்ஷமானது மிகவும் சந்தோஷப்பட்டு "ஐயா! உன்னைவிட நான் இனி யாருக்குத் தரப்போகின் றேன்; என்கீழ் இருக்கப்பட்ட தனத்தை நீயே எடுத்துக்

கொண்டுபோ'' என்று சொல்லிற்று. அதைக்கேட்ட பிராமணச் சிறுவன் தன்னிடமிருக்கும் ஆட்களை வரவழைத்து, மாமரத்தின்கீழ் இருக்கப்பட்ட திரவ்யத்தை எடுப்பித்து, யானை ஒட்டைகளின்மீது ஏற்றிக்கொண்டு சென்றான்.

அதன்பிறகு அவன், பசு இருக்கப்பட்ட இடம்சென்று "ஒ பசுவே! நீ பூர்வஜன்மத்தில் மனிதனாயிருந்து ஓர் குடியானவன் வீட்டில் பசுக்களை மேய்த்துக்கொண்டுவந்து, அவைகளுக்குத் தண்ணீர் காட்டாமலும் வைக்கோல் போடாமலும் மாட்டுத் தொழுவத்தில் கட்டிக்கொண்டு வந்தாய். உன் எஜமானன் உன்னைப்பார்த்து, பசுக்களுக்குத் தண்ணீர் காட்டி வைக்கோல் போட்டாயாவென்று கேட்டால், ஆம் தண்ணீர்க்காட்டி வைக்கோல் போட்டேனென்று பிரதிதினம் சொல்லிக்கொண்டே வந்தாய். அப்பசுக்களோ, தம் எதிரிலிருக்கும் தொட்டியிலுள்ள ஜலத்தையும் வைக்கோல் போரையும் பார்த்துக்கொண்டே பசி தாஹங்களுடனிருந்து ஜீவன்களை விட்டன. ஆதலால், அதுபோல் நீ இந்தச் ஜன்மத்தில் பசுவாய்ப்பிறந்து, எதிரிலிருக்கும் ஜலத்தையும் புல்லையும் பார்த்துக்கொண்டே பிராணனை விடவேண்டுமென்று சொல்லிவிட்டுத் தன் கிராமம் சென்று தாயின் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து எழுந்து நின்று, ஆதிமுதல் அந்தியம்வரையில் நடந்தவைகளை ஸவிஸ்தாரமாகச் சொல்லித் தன் இரண்டு மனைவிமார்களையும் தாயினிடம் ஒப்பித்துத் தான்கொண்டு வந்த பொருள்களுக்கெல்லாம் அநேக கிராமங்களை வாங்கிவிட்டு, அதில் வரப்பட்ட வருமானங்களையெல்லாம் தன், புத்திர பௌத்திராதி தலைமுறை தலைமுறையாய் அன்னதானம் செய்யும்பொருட்டு சிலா ஸாஸனம் ஏற்படுத்திவிட்டு, தான் வெளியில் எங்கும் செல்லாமல் குரு உப

தேசித்த பிரமஞானத்தைச் சாதனம் செய்துவந்தான். இப்படிப்பட்ட புருஷனே மனிதனென்று சொல்லப் படும்.

இந்நூலை எழுதினதற்குக் காரணம் என்னவென்றால், உலகத்திலுள்ள மானவ ஜனங்களாகிய ஸ்திரீ புருஷர்க ளெல்லோரும் மாயையென்னும் திரையால் மூடப்பட்டு, தாம் யாரென்பதையும் அறியாமல் ஆசையென்னும் பிசா சினால் கட்டுப்பட்டு, சத்கர்மங்களைச் செய்வதை அடி யோடே மறந்து, பாப கர்மமென்னும் பெருத்த மூட்டை யைச் சம்பாதித்துக்கொண்டு, மரணமடைவதனால் அப் படிப்பட்ட பாப கர்மத்திலிருந்து விடுபட்டு மோக்ஷ மென்னும் வீட்டை அடையச் செய்யவேண்டிய புண்ணியம் எதுவோ அவைகளைச் செய்ய இந்தத் தத்துவ பரிசோதனை, அன்னதான பலனும் எழுதப்பட்டது.

யாதொன்றும் அறியாத பாமரனாயிருந்த வேடனானவன், தன்வயிற்றிற்குச் சாப்பிடப்போகும் தேன் தினை மாவு கிழங்குகளைப் பிராமணச் சிறுவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று எண்ணம் உண்டாவதற்குக் காரண மென்னவென்றால், வேடனாய்ப்பிறந்த ஜன்மத்திற்கு முன் ஜன்மத்தில், அவன் செய்த புண்ணிய விசேஷத்தினால் வேடனாய்ப் பிறக்கப்போகும் ஜன்மத்தில், தேன் தினை மாவு கிழங்குகளை பிராமணச் சிறுவனுக்குக் கொடுத்து அந்தப் புண்ணிய விசேஷத்தினால் வேடன் சரீரம் விட்ட வுடன் அந்த ஜீவன் அரசன்வீட்டில் போய்ப் பிறக்க வேண்டுமென்று கர்மம் இருந்தபடியால், பிராமணச் சிறு வனுக்குத் தேன் தினைமாவு கிழங்குகளைக் கொடுக்க எண்ணமுண்டாய் அதுபோல் கொடுத்து, வேடன் சரீ ரத்தைவிட்டு அரசகுமாரனாய்ப் போய்ப் பிறந்தானென்று தெரிந்து கொள்ளுங்கள்.

ஓர் சுரோத்திரதாரன் பெண்கள் பிரவிடையாய் (ருதுவாய்) அனேகநாள் விவாகம் செய்யாமல் பெண்களை வீட்டில் வைத்திருந்தபடியால், அவனுக்கு எவ்வளவு துன்பங்கள் நேர்ந்ததும் வாசித்தீர்க ளல்லவா? ஆதலால், இந்நூலை வாசிக்கும் நண்பர்கள் வீட்டில் ருதுவான பெண்களிருந்தால் சீக்கிரமாய்ப் பிரயத்தினப்பட்டு எவ்விதத்திலாகிலும் விவாகம் செய்துவிட பிரயத்தனம் செய்யவேண்டும். வேளை வரவேண்டுமென்று சும்மா யிராதீர்கள். நாம் செய்யவேண்டிய பிரயத்தனம் செய்தே தீரவேண்டும். அதன்மேல் ஈஸ்வரச் செயல்போல் நடக்கும். அனேகர் வீட்டில் ருதுவாய், நாலைந்து வருஷங்களாயும் நல்ல இடம் அகப்படவில்லையென்று விவாகம் செய்துகொடாம லிருக்கின்றார்கள். அவர்கள் இவ்வாறு வைத்துக்கொண்டிருப்பதனால் அப்பெண்கள் மனவருத்த மடைந்து, மேலுக்கு நல்ல பேச்சாய்ப் பேசுவார்கள். பெண்கள் பிரவிடையாய் விவாகம் செய்துகொடாம லிருந்தால் அப்பெண் வீட்டிலுள்ளனள் வரையில் அவர்களுக்கு விசேஷ துக்கத்தையே உண்டாக்குவதுமன்றி அனேக கஷ்டங்களும் சம்பவிக்குமென்று தெரிந்துகொள்ளக் கடவீர்களாக.

தாசியானவள் பொருள் சம்பாதித்தும் எவ்விதமாய்ப் போக்கடித்துக் கொண்டாளோ அதை இந்நூலில் வாசித்தீர்களல்லவா? ஆதலால், நீங்கள் நகை தனம் தீபம் இருக்கும் இடத்தில் தலைவைத்துப் படுப்பீர்களாகில், மென்மேலும் சம்பத்தை அடைவீர்கள். அனேகர் வீட்டில் இதைக் கவனிப்பதில்லை. இனியாகிலும் கவனியுங்கள்.

நல்ல மாந்திரீகமோ அல்லது, வித்தையோ கற்று அதனால் விசேஷ பொருள் சம்பாதித்து, அதைத் தர்மம் செய்யாத தோஷத்தினால் பாம்பாய்ப் பிறந்தான் என்று முன் வாசித்தீர்களல்லவா? ஆதலால், நீங்கள் எந்த மந்திரமோ

அல்லது, வித்தையோ கற்றிருந்தாலும் அதை நீங்கள் பிறருக்குக் கற்றுக்கொடுத்து மரணமடைவீர்க ளாகில், அப்புண்ணிய விசேஷத்தினுல் மறு ஜன்மத்தில் நல்ல கதியை அடைவீர்கள்.

ஒரு வைசியன் அளவற்ற பொருளைச் சம்பாதித்து தன் வயிற்றிற்குச் சாப்பிடாமலும், ஒரு காசும் தான தர்மங்கள் செய்யாமலும் பூமியில் புதைத்துவைத்து மரண மடைந்ததனுல், தான் மறுஜன்மத்தில் விருக்ஷமாய்ப்பிறந்து அதன் நிழலில் ஒருவரும் நிற்காமலும், அதன் கனிகளைச் சாப்பிடாமலும் போனதை முன் வாசித்தீர்க ளல்லவா? ஆதலால், ஒவ்வொருவரும் தாம் செய்யும் வியாபாரத்தில் வரும் லாபத்தில் எட்டில் ஒருபங்கு தர்ம கைங்கர்யத்திற் காக உபயோகப்படுத்தி மற்றவைகளை தம் குடும்ப சவ ரக்ஷணைக்காக உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும். உத்தியோகத்தி லிருக்கப்பட்டவர்கள் தம் ஸக்தியானு சாரம் தானம்செய்து வரவேண்டும். இவ்வாறு தானம் செய்து வருவீர்களாகில் மறுஜன்மத்தில், இப்போதிருக் கும் ஜன்மத்தைவிட மேலான ஜன்மத்தை யடைந்து பிறகு, ஜன்மாந்திரங்கள்தோறும் செய்துவரும் காமிய புண்ணியத்திலிருந்து நிஷ்காம்ய புண்ணியம் செய்ய எண்ணமுண்டாய், நிஷ்காம்ய புண்ணியங்களைச் செய்து அப்புண்ணிய விசேஷத்தினுல் மோக்ஷமென்னும் வீட் டைத் தப்பாமல் அடைவீர்கள்.

ஒருவன் மாடுகளுக்குத் தீனிப்போடாமலும் தண் ணீர் காட்டாமலும் போனபடியால், அவன் மறுஜன்மத் தில் பசுவாய்ப் பிறந்து பட்ட கஷ்டங்களை வாசித்தீர்க ளல்லவா? பட்டணங்களிலும், நாடுகளிலும் அனேகர் வீட் டில், கோக்கள் (பசுக்கள்) எருதுகள் எருமை கிடாக்கள் குதிரைகள் ஆடுகள் முதலாகிய மிருகஜாதிகள் உண்டு. அவைகளுக்குக் காலை பகல் மாலை இரவுகளில் தண்ணீர் காட்டி புல் வைக்கோல் முதலானவைகளைப்போட்டு பாது

காத்து வரவேண்டும். அவ்வாறு செய்து வராவிட்டால் மறுஜன்மத்தில் முன் சொல்லிய பசுவைப்போன்ற ஜனன மெடுத்து, தன் சமீபமா யிருக்கும் ஜலத்தைக் குடித்துப் புல்லையும் மேய கழுத்துவளையாமல் பசிதாகங்களால் வருந்தி சாகவேண்டியதாய் நேரிடும். ஆதலால், இதில் எழுதிய விஷயங்கள் ஒவ்வொன்றும், நாம் முன் ஜன்மங்களில் கடைத் தேறுவதற்காக வேண்டிய முக்கியமான விஷயங்களென்று அறிந்து, இதில் சொல்லியதுபோல் தர்மங்களைச் செய்து வரவேண்டும். உலகத்தில் அனேகர்கள் தனத்தைச் சம்பாதித்துத் தானதர்மங்களைச் செய்யாமல் மனைவி மக்களுக்குஆஸ்தியாய்வைத்து மரணமடைந்து, மறுஜன்மத்தில் யார்வீட்டிலோ ஏழையாய்ப்பிறந்து துக்கத்தை அனுபவித்து வருவார்கள்.

மனிதர்கள் புண்ணியம் செய்வதனால், ஒரு ஜன்மத்தில் தனவந்தனாயும், அத்தனத்தை நல்வழியில் செலவழிக்காவிட்டால் மறு ஜன்மத்தில் ஏழையாயும், மிகவும் தரித்திரனாயும் இவ்வாறு, வண்டியின் சக்கரம் கீழ் மேலாய்ச் சுழன்று வருவதுபோல் ஒரு ஜன்மத்தில் தனவந்தனாயும், மறு ஜன்மத்தில் ஏழையாயும் பிறக்கவேண்டியதாய் நேரிடும். ஆதலால், இதை வாசிக்கும் சகோதர சகோதரிக ளெல்லோரும் அவரவர்களின் சக்தியானுசாரமாய் அன்னதானம் செய்து வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தத்துவ பரிசோதனை, அன்னதானபலன் சம்பூர்ணம்.

இங்ஙனம்,
தங்கள் விதேயன்

கடிகோட்டை, வீரபல்லி போஸ்ட்டு,
ராயசோடி தாலூக்கா, கடப்பை ஜில்லா.

இந்நூலாசிரியராகிய கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸ
தானந்த யோகீஸ்வரர் இருக்குமிடம்.

ஷை யோகீஸ்வரர், கடப்பையை விட்டு சடிகோட்
என்னும் மலையடிவாரம் போய்ச் சேர்ந்துவிட்டார்
இம்மலையடிவாரம் தவத்திற்கு மிகவும் உயர்ந்தது.
கோட்டை சுற்றிலுமுள்ள நான்கு மலைகளையும் ப
பிடித்து, ஆர்ட்டு பேபரில் அச்சிட்டு "ஜீவப் பிரம்மை
வேதாந்த ரஹஸ்ய" நூலில் காட்டப்பட்டிருக்கின்றது

T. கல்யாணசுந்தரம்,
பெரம்பூர் பாரக்ஸ், சென்